27

கதைக் கடல் 8

# சாந்தி எங்கே?

முதலிய கதைகள்

GNANA MUNIVAR LIBRARY
CANCELLED

[redacted]

TINNEVELLY. READING ROOM

தொகுப்பாசிரியர்:
தி. நா. சுப்பிரமணியன்

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை 14

முதற்பதிப்பு மார்ச் 1947
உரிமை பதிவு செய்யப் பெற்றது

ரூபாய் - ஒன்று
தபால் செலவுடன் ரூ. 1/4

Printed by Shakti Press Ltd., Royapettah, P.I.C. No. MS. 23
For Shakti Karyalayam, Royapettah, P.I.C. No. MS. 202.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| கிழிந்த நோட்டு | ... | தி. நா. சுப்பிரமணியன் | 1 |
| சிவராத்திரி | ... | மஞ்சேரி எஸ். ஈச்வரன் | 17 |
| விஷப் பரீக்ஷை | ... | 'மாயாவி' | 42 |
| பைத்தியக்காரன் ? | ... | ஸத்தியாவதி தேவி | 51 |
| வெறுக்கப்பட்டவர்கள் | ... | 'யசப்பால்' | 58 |
| பத்தாவது கிரகம் | ... | பி. வி. சுப்பிரமணியன் | 65 |
| களத்து மேட்டில்... | ... | ய. லக்ஷ்மி நாராயணன் | 71 |
| இதுவும் காதல் கதைதானா ? | ... | ரா. ஆறுமுகம் | 82 |
| சாந்தி எங்கே ? | ... | ஆர். கே. பார்த்தசாரதி | 98 |

# அணில்

குழந்தைகளின்
வாரப் பத்திரிகை

கதை, விடுகதை, கணக்கு, கட்டுரை, சயன்ஸ், பாட்டு, விளையாட்டு, பெரியார் சரித்திரம்—இன்னும் குழந்தைகளுக்கான எல்லா விஷயங்களும் வெளியிடப்பெறும்

முதல் பத்திரிகை மே மாதம் வெளிவரும்

தனிப் பிரதி
ஒரு அணா

வருட சந்தா
ரூ. 3

## சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14

# கிழிந்த நோட்டு

தி. நா. சுப்பிரமணியன்

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே ராமசாமிப்பிள்ளை கல்லாய்ச் சமைந்துவிட்டார். பொட்டில் அடிபட்டவனுக்குப் பொறிகலங்கித் திக்பிரமை ஏற்படுவது போல அவருக்குத் தலை சுழன்றது. அவர் சப்த நாடியும் ஒடுங்கிச் செயல் அற்றுப் போனார்.

அந்த ஒரே வாக்கியம் அவர் மனக்கோட்டையைச் சிதற அடித்தது. அவர் என்னவெல்லாமோ எதிர்பார்த்திருந்தார். ஒன்றும் இல்லாமல் போகவே மேலே நடக்க வேண்டியதன் வகையறியாமல் திகைத்தார்.

ராமசாமிப்பிள்ளை ஓர் ஏழைப் போர்டு பாடசாலை உபாத்தியாயர். மாதச் சம்பளம் பதினைந்து ரூபாய். பஞ்சப்படி ரூபாய் இரண்டரை. இந்தப் பதினேழரை ரூபாய்களை வைத்துக்கொண்டுதான் அவர் குடும்ப காலக்ஷேபத்தை இந்தக் கஷ்டகாலத்தில் நடத்தவேண்டும்.

அவர் அப்போது சமுத்திரக் கரையோரத்திலே ஒரு செம்படவக் குப்பத்தில் ஆசிரியராக இருந்து வந்தார். அந்தக் குப்பம் அவர் பிறந்த ஊருமன்று; வளர்ந்த ஊருமன்று. வாழ்க்கையை அதிகக் கஷ்டம் இல்லாமல் ஓட்டிவிடலாம் என்று அவர் தாமாகவே அந்த ஊரைத் தேடிப் பிடிக்கவும இல்லை.

அவர் ஆரம்பத்தில் தம் சொந்த ஊரிலேதான் வாத்தியாராக நியமிக்கப்பட்டார். ஆனால் அந்தச் சௌகரியம் அவருக்கு நீண்டநாள் கிடைக்கவில்லை. பக்கத்து ஊர்களுக்கு மாற்றல் ஆயிற்று. அந்தப் பள்ளிக்கூடங்களும் வீட்டிலிருந்து அதிக தூரம் இல்லாமல் இருந்தமையால் ஏதோவொரு விதமாகக் காலத்தைத் தள்ளிவிட்டார்.

ஆனால் காலம் சுழன்றுகொண்டே போகிறதே. திடீ ரென்று அவருக்குத் தாலுகாவை விட்டுத் தாலுகாவுக்கு மாற்றல் கிடைததது. ஆம். கடற்கரைக் குப்பம்தான். அது அவருடைய சொந்த ஊரிலிருந்து எழுபது, எண்பது மைல்களுக்கு மேற்பட்ட தூரத்தில் இருந்தது. பக்கத்து ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அந்தக் குப்பத்துக்கு இருபத்தைந்து மைல். அதற்கும் போக வர மோட்டார் பஸ் ஒன்றும் கிடையாது. கடைசியில் ஒரு மூன்று மைல் மணல் வெளியில் நடந்து சென்றால்தான் குப்பத்தையடையலாம்.

ஸ்தல ஸ்தாபனத்தார் உத்தரவை அவர் மீற முடியாது. ஒன்று புதிய இடததில் போய் வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லையேல் வேலையை விட்டு விடவேண்டும். வேலை போனால் சோற்றுப் பானை உடைந்துபோய் விடுமே. அதனால் வேறு வழியில்லாமல் ராமசாமிப் பிள்ளை அந்தக் குப்பத்துக்குப் போய் வாத்தியாராக அமர்ந்தார்.

புதிதாக வந்த கிராமத்துக்கு அவர் தம் குடும்பத்தை அழைத்து வரவில்லை. அவர்களைச் சொந்த ஊரிலேயே விட்டு வைத்திருந்தார்.

அவருக்கு வயசு சுமார் நாற்பதிருக்கும். குடும்பமும் கொஞ்சம் பெரிது. தாயார், மனைவி, எட்டுக் குழந்தைகள். இவ்வளவு பெரிய குடும்பத்தை அவர் போகும் இடங்களுக்கு எல்லாம் எப்படித் தம் முதுகில் சுமந்து செல்ல முடியும்?

தவிர, தாயார் ஒரு தள்ளாத கிழவி. சென்ற நாலைந்து வருஷங்களாகவே அவள் நடமாட்டம் இல்லாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். பெரிய பெண் சமைந்து கல்யாணம் ஆகாமல் வீட்டிலே நான்கு வருஷங்களாக இருந்து வருகிறாள். சின்னக் குழந்தைக்கு முறைக் காய்ச்சல். இவர்களை எவ்விதம் அவர் கூட அழைத்துக் கொண்டு போக முடியும்?

பிள்ளையவர்களின் மனைவியும் இந்தக் குடும்பத்துக்கு உழைத்து உழைத்துத் தேகம் ஓடாகத் தேய்ந்துபோய் விட்டாள். அதனோடு அவள் நிறை கர்ப்பிணி. கறவை

எருமை மாடு வேறு ஒன்று. குடும்பக் காரியம் போதாது என்று அதற்குச் சுச்ரூஷை. ஆனால் அந்த மாடு இருக்கக் கொண்டாவது பால் தயிர் வகையரு தட்டாமல் கிடைத்து வந்தது.

ராமசாமிப் பிள்ளை தம் ஊரைவிட்டுக் குப்பத்துக்கு வந்தும் அவர் நினைவு முழுவதும் தாம் கிராமத்தில் விட்டு வந்த குடும்பத்தவர்களைப் பற்றியதாகவே இருந்தது. அவர்கள் என்ன செய்கிறார்களோ என்ற ஒரே கவலை தான்.

கடைசிப் பையன் மகா விஷமக்காரன். காய்ச்சல் வந்தால் கிழிந்த நார்போலப் படுத்த படுக்கையிலே கிடப்பான். ஆனால் மறுநாள் அவனைக் காண முடியாது. கழனிக்காடுகளில் சுற்றி அலைவான். ஆற்றங்கரை மாந் தோப்பில் திருட்டு மாங்காய் பறித்துத் தின்பான். வைத்தியர் கொடுத்திருக்கும் மருந்துக்கு மாங்காய் ஆகாது என்று தாய் எவ்வளவு தரம் முட்டிக்கொண்டா லும், அதைக் காதில் போட்டுக் கொள்ளமாட்டான்.

வந்த இடத்தில் உபாத்தியாயர் பள்ளிக்கூடத்திலேயே ஓர் அறையில் தங்கித் தம் கையால் பொங்கிச் சாப்பிட்டு வந்தார். அவ்விதம் செய்வது சட்ட விரோதம். வெளியே தெரிந்தால் உத்தியோகத்துக்கே ஆபத்து வரும்.

ஆனால் அவர் என்ன செய்வார்? தம் செலவைக் கடத்திக்கொண்டு, ஊரில் விட்டு வந்த குடும்பத்தாருக்கு வேறு பணம் அனுப்பவேண்டும். பதினேழரை ரூபாயில் அவர் எவ்வளவு செலவு செய்வது? ஊருக்கு எவ்வளவு அனுப்புவது? அதனால் தம் செலவை எவ்வளவு தூரம் ஒடுக்க முடியுமோ, அவ்வளவு குறைக்கப் பார்த்தார்.

திடீரென்று ஒரு நாள் அவருக்கு ஊரிலிருந்து மூத்த பையன் கடிதம் எழுதி யிருந்தான். கிழவிக்கு உடம்பு அதிகமாகி, அவள் பிழைப்பாளோ மாட்டாளோ என்ற நிலையில் இருந்தாள். பிள்ளையவர்களின் மனைவிக்குப் பிர சவ காலம் நெருங்கி, இன்றைக்கோ நாளைக்கோ என்ற ஸ்திதியில் இருந்து வந்தது. ஒத்தாசைக்கு மனுஷ்யர்கள் இல்லாததோடு கையில் காசும் இல்லை.

பிரசவத்துக்கான மருந்துச் செலவை வாங்கிக் கொண்டு கையில் ஒரு பத்து ரூபாய்க் காசுடன் உடனே புறப்பட்டு வரும்படி, பையன் தன் தந்தைக்கு எழுதியிருந்தான். அந்தக் குப்பததுக்குத் தபால் வாரம் இருமுறை தான் வரும். அதுவும் சிற்சில சமயங்களில் தபால்காரன் பக்கத்து ஊரில் கொடுத்து இவ்விடம் அனுப்பும்படிச் சொல்லி விட்டுப் போய் விடுவதும் உண்டு. இவ்விதம் பிள்ளையவர்களுக்கு அவர் பையன் எழுதிய கடிதம் எழுதிய ஆருவது நாள்தான் கிடைத்தது.

கடிதம் அவர் மனத்தைப் பெரிதும் அலைத்தது. இடையில் கடந்த ஆறு நாட்களில் என்ன என்ன நடந்தனவோ என்று அவர் பெரிதும் ஏங்கினர். உடனே புறப்பட்டு ஊர் போய்ச் சேரவேண்டும் என்று துடிதுடித்தார்.

எவ்வளவு சீக்கிரமாகத் திரும்பினாலும், போய் வருவதற்குக் குறைந்த பக்ஷம் ஒரு வாரமாவது பிடிக்கும். அவ்வளவு நாட்களுக்கு 'லீவு' கிடைக்காது. பள்ளிக் கூடத்தின் வருடாந்தரப் பரீக்ஷை சமயம் அது.

ஆனல், இந்த மாதிரி காலங்களுக்கு உபயோகப்படா விட்டால், பின் எதற்காகத்தான் 'லீவு' கொடுப்பது? அப்படியே அதைக் கொடுக்க மறுத்தாலும் சம்பளத்தைப் பிடித்துக் கொள்வதைத தவிர வேறு என்ன செய்து விடுவார்கள்? சம்பளம் இல்லாத லீவுக்கும் அவர் தயாராகவே இருந்தார்.

எனினும், ஊர் போய் வருவதற்கு அவர் ரூபாய்க்கு எங்கே போவார்? அதோடு மனைவியின் பிரசவத்துக்கு மருந்து வகைகள் வேறு வாங்கிக்கொண்டு போக வேண்டுமே!

இம்மாதிரி வேளைகளில் சாம்பசிவ ஐயரே தமக்கு உதவி செய்வார் என்று அவர் பூரணமாக நம்பியிருந்தார். அதனல் அவர் ஐயரைத் தேடிப் புறப்பட்டார்.

சாம்பசிவ ஐயர் சென்னையிலே ஒரு பிரபலமான புத்தக வியாபாரி. தமிழ் நாட்டுப் பாடசாலைகளிலே அவர் பெயர் அடிபடாத இடமே கிடையாது. அவர் வெளியிட்ட பாட புத்தகங்கள் மிகவும் உயர்ந்த ரகத்தைச்

சேர்ந்தவை என்ற பெயர் நிலைத்து விட்டது. கல்வி யதிகாரிகளும் அவருடைய வெளியீடுகளைப் போற்றி ஆதரித்து வந்தனர்.

அந்தத் துறையில் அவர் சென்ற ஐம்பது வருஷங்களாக இருந்து வருகிறார் ஆனால், அவருக்கு ஏற்பட்ட பேரும் புகழும் சமீப காலத்திலே,பத்து வருஷ காலத்திற்குள்ளாகவேதான் கிட்டின. அதற்கு முன் அவர் மிக்க சிரம தசையில் இருந்தார். மஞ்சள் கடிதாசி கொடுக்க வேண்டிய நிலைமை என்றும் சொல்வர்.

எவ்வாறாயினும் அவர் சமாளித்துக்கொண்டு விட்டார். இப்போது நல்ல சௌகரியமாகச் சொந்தத்தில் பங்களாவும், காரும் கொண்டு லக்ஷாதிபதியாக வாழ்ந்து வந்தார். அவருடைய இந்தச் சௌபாக்கியததுக்கு முக்கிய காரணபூதராக இருந்தவர் ராமசாமிப் பிள்ளையே.

அந்தக் காலத்திலே ராமசாமிப் பிள்ளை நல்ல செல்வாக்கில் இருந்தார். தாலுகா போர்டுகள் இருந்த காலம். பிரஸிடெண்டும் வேறு சில முக்கியமான மெம்பர்களும் அவருக்கு வேண்டியவர்கள். பிள்ளையவர்கள் வெறும் தாலுகா போர்டு பாடசாலை உபாத்தியாயரானாலும், அவருடைய கோரிக்கைகள் அப்படியே நிறைவேறும்.

அப்போதுதான் முதன் முதலாகச் சாம்பசிவ ஐயருக்கு அவருடைய பரிசயம ஏற்பட்டது.

"என்ன ஐயர்வாள்! நீங்கள் ஏதேதோ புத்தகங்களைப் போட்டுக்கொண்டு விலை போகாமல் கஷ்டப்படுகிறீர்களே. ஆரம்பப் பாடசாலை உபயோகத்துக்கான சின்ன வகுப்புப் பாட புத்தகங்களை வெளியிட்டால் அவற்றைத் தாலுகா போர்டில் சொல்லிப் பாடமாக வைக்கலாமே. நல்ல வியாபாரம் ஆகுமே."

இவ்விதம் ஒரு நாள் ராமசாமிப் பிள்ளையவர்கள் சாம்பசிவ ஐயருக்குச் சொன்னார். ஐயருக்கும் அந்த யோசனை நல்லதாகப் பட்டது.

ஆனால் புத்தகங்களை எழுதிக் கொடுப்பதற்கு ஆளைப் பிடிக்க வேண்டுமே. 'ஏன் அதை ராமசாமிப் பிள்ளையைக்

கொண்டே முடித்துக்கொள்ளலாமே. அவருக்கும் பாட சாலையில் நல்ல அனுபவம் இருக்கிறதே' என்று எண்ணினர் ஐயர்.

அதன் விளைவுதான் ஐயர் பள்ளிக்கூடப் பாட புத்தகங்களை வெளியிடுவோராக மாறியது.

பிள்ளையவர்களும் தாம் பாடசாலையில் பெற்ற அனுபவத்தைக்கொண்டு சிறு பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் அநேக புத்தகங்களை எழுதிக்கொடுத்தார். அவை முதலில் அந்தத் தாலுகா போர்டிலே பாடமாக வைக்கப்பட்டன.

காரியம் வெற்றிகரமாகவே முடிந்தது. ஐயருக்குக் கொள்ளை லாபம் கிடைத்தது.

ராமசாமிப் பிள்ளை பாட புத்தகம் எழுதிக் கொடுக்கும் போது அவர் ஒவ்வொரு புத்தகத்துக்கும் தமக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சாம்பசிவ ஐயரிடம் பேசிக்கொள்ளவில்லை. அவருக்கு வியாபார தந்திரம் ஒன்றும் தெரியாது. ஏதோ அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டார். அவ்வளவு பெரியவர் தமக்கு ஏதும் மோசம் செய்யமாட்டார் என்ற ஒரே நம்பிக்கைதான்.

சாம்பசிவ ஐயர் வியாபாரத்தில் கைதேர்ந்த பேர் வழி. ஐம்பது வருஷங்களாக அவர் அந்தத் தொழிலிலே உழன்று உழன்று கொட்டை போட்டவர். வெண்ணெய் போல் பேசுவார். எப்போது பார்த்தாலும் நெற்றியிலே விபூதி பூசிச் சதா முருகனையே வாயால் ஜபித்துக்கொண்டிருப்பார்.

அவருடைய தோற்றமும் பிள்ளையவர்களுக்கு அதே நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தியது. ஆனால் அவர்கள் உள்ளத்திலே கிடந்து குமுறும் உணர்ச்சிகளைப் பிறர் அறிய முடியாதே.

சாம்பசிவ ஐயரும் பிள்ளைக்குப் பணமுடை ஏற்பட்ட காலத்தில் அவ்வப்போது ஐந்து பத்து என்று பணம் கொடுத்து வந்தார். அதைக்கொண்டே பிள்ளையும் திருப்தி அடைந்துவந்தார்.

அதே நம்பிக்கையால்தான் பிள்ளை இப்போது சாம்பசிவ ஐயரைத் தேடிக்கொண்டு வந்தது.

ஆனல் இருவர் நிலையிலும் இன்றைக்கு மிகுந்த தாரதம்மியம் ஏற்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் இருவரும் ஒரே நிலையில்தான் இருந்தார்கள். என்றால் அதைக் கொண்டு இப்போது அவர்களை ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா?

ஐயருக்கோ இப்போது ராமசாமிப் பிள்ளையைப் போன்ற பேர்வழிகளின் உதவி தேவையில்லை. அது மட்டுமன்று. பிள்ளையின் சிநேகம் இப்போது ஒரு பாரமாகவே மாறிவிட்டது. பிள்ளையால் இப்போது அவருக்கு ஒரு சிறு காரியமும் செய்ய இயலாது. பிள்ளையின் செல்வாக்கு அடியோடு போய்விட்டது. அதனால்தானே அவருக்குத் தம் சொந்த ஊரைவிட்டுத் தொலைவில் உள்ள குப்பத்துக்கு மாற்றலாயிற்று. ஆயிரக் கணக்கான உபாத்தியாயர்களுள் அவரும் ஒருவர் ஆகிவிட்டார்.

அன்றி, சாம்பசிவ ஐயரின் தயவை நாடிப் பெரிய காலேஜ் ஆசிரியர்களும், பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களும், பண்டிதர்களும், வித்துவான்களுமாகப் பலர் காத்திருந்தனர். அவருடைய கடைக் கண் பார்வை தங்கள்மீது விழுவதற்காக அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யச் சித்தமாக இருந்தனர்.

இந்த விஷயங்களைப் பிள்ளை அறிவாரா? அவர் பழைய நாள் சம்பவங்களை மனத்தில்கொண்டு ஐயர் தமக்கு உதவிசெய்வார் என்றே நினைத்து வந்தார்.

ராமசாமிப் பிள்ளை வருவதைப் பார்த்தவுடனே சாம்பசிவ ஐயரின் முகம் மாறுதல் அடைந்தது. அதை அவர் விரும்பவில்லை. பிள்ளையவர்கள் எதற்குத் தம்மிடம் வருகிறார் என்பது அவருக்குத் தெரியாதா? அவ்வளவு உலகானுபவம் இல்லையா, அவருக்கு?

எனினும் தம் உணர்ச்சியை அவர் வெளிக்காட்டவில்லை. முகத்திலே ஒரு புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ராமசாமிப் பிள்ளையை வரவேற்றார்: "வாங்கோ வாங்கோ" என்று உபசரித்துப் பக்கத்திலே ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார்.

ஆயினும் அவர் உடனே பிள்ளையவர்களைப் பற்றி முற்றும் மறந்துவிட்டார் போலும். அவ்விதம் ஒருவர் வந்திருப்பதையே கவனிக்கதவர் போலத் தம் வேலையிலே ஈடுபட்டார்.

ஏழை உபாத்தியாயர் என்ன செய்வார்? அவருக்கு இருக்கை கொள்ளவில்லை. அவர் மனம் அங்கே இல்லை. ஊரிலே சாகக் கிடக்கும் தம் தாயாரையும், பிரசவிக்க இருக்கும் மனைவியையும், தம் வரவை எதிர் நோக்கி வாடும் குழந்தைகளையும் நாடிச் சென்றது. தவிர, ஆடம்பர அலங்காரமான அந்தப் பெரிய புத்தகாலயத்திலே குசேல வேஷத்தில் தம்மைக் கண்ட பிறர் எவ்விதம் பரிகசித்து நகையாடுவார்கள் என்ற நினைவும் உண்டாயிற்று.

எப்படியாவது தாம் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு சீக்கிரமாகவே கிளம்பிவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று அவருக்கு. ஆனால் அது எளிதில் நடை பெறுவதாக இல்லை. அரை மணி நேரத்துக்கு மேலாகி விட்டது. தாம் வந்திருப்பதை அறிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமல் எல்லோரும் நடந்து வந்தது அவருக்கு ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது என்றே கூற வேண்டும்.

முன்னரெல்லாம் தாம் வந்த காலங்களில் ஐயர் தம்மை எப்படி அன்புடன் உபசரித்து வந்தார் என்பதை நினைத்துப் பார்த்தபோது அவருக்கு மனம் இடிந்தது. அப்போதெல்லாம் அவருக்கு ஆசார உபசாரம் நடக்கும். ராமசாமிப் பிள்ளை செய்த உதவியைப் பற்றி ஐயர் வானளாவப் புகழ்வார்.

"என்ன பிள்ளைவாள், நான் உங்களை முகஸ்துதி பண்ணறேன்னு நினைச்சிக்கப்படாது. எல்லாம் நீங்க ஏத்தி வெச்ச விளக்கு. உங்க உதவி இல்லாட்டா, நான் இருந்த இடம் தெரியாமே புல் முளைச்சுப் போயிருக்கும். அதுக்கு நான் உங்களுக்காக என்ன செஞ்சாலும் தகும். உங்களை நான் மறக்கவே மாட்டேன். நிச்சயமா உங்க காலம் உள்ளவரை மாசம் இவ்வளவுன்னு 'பென்ஷன்' மாதிரி கொடுத்துண்டு வர்றேன்."

அவர் இன்னும் என்னவெல்லாமோ கூறியிருக்கிறார்.

ஆனால் இப்போது?

பிள்ளையவர்கள் தாம் உட்கார்ந்த நாற்காலியிலே அசைந்து கொடுத்து இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக மாறி மாறி உட்கார்ந்து பார்த்தார், ஒருகால் ஐயர் தம் பக்கம் திரும்ப மாட்டாரா என்று. எல்லாம் பிரயோசனப்படாமல் போனதைக் கண்டு கடைசியாக அவர் வாய் விட்டு, "என்ன, ஐயர்வாள்" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டார்.

ஐயரும் தலை நிமிர்ந்து அவரை ஒரு தரம் பார்த்தார். "மன்னிக்கணும், இதோ ஒரு ஐந்து நிமிஷம், வந்துட்டேன்" என்று கூறிக்கொண்டே மறுபடியும் வேலையிலே மூழ்கிவிட்டார். தாம் அவரை அலக்ஷியம் செய்ததைப் பிள்ளையவர்கள் வேறு விதமாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்றே அவர் அவ்விதம் நடந்து கொண்டார் போலும். ஆம், வியாபாரிகள் யாரையும் விரோதித்துக் கொள்ளாதவர்கள் போலத்தானே நடந்துகொள்வார்கள்!

என்ன வேலையைக் கவனித்தாரோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். எப்படியோ கடைசியாக, ஒரு பத்து நிமிஷம் கழித்து அவரது கருணைநோக்குப் பிள்ளையவர்களிடம் திரும்பியது.

"என்ன, பிள்ளைவாள். எப்போ வந்தாப்லே! எல்லாம் சௌக்யந்தானே?"

பிள்ளையும் இந்தக் கேள்விக்காகத்தான் காத்திருந்தார். அது வரையில் தம் உள்ளத்திலே குமுறிவந்த ஆத்திரத்தை மறந்தவராய், தம் கஷ்டங்களை எடுத்துக் கூறினார் ஐயரிடம்.

அந்தச் சோகக் கதையைக் கேட்கும் போது, அதைச் சகிக்க முடியாமல் மனம் கனிந்தவராகத் தோற்றம் அளித்தார் ஐயர். ஆயினும் பிள்ளையவர்கள் கடைசியில், "எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல்லே. இப்போ இருபது ரூபா அவசரமா வேணும். எப்படியாவது பெரிய மனசு பண்ணி நீங்க உபகாரம் பண்ணணும்" என்று

கேட்டுக்கொண்ட போது, ஐயர் உள்ளம் பாகாக உருகி விடவில்லை யென்பது வெளியாயிற்று.

"இதைப் பாருங்கள், பிள்ளைவாள், என்னுடைய நிலையைத் தங்களிடம் சொல்ல வேண்டாமா? எனக்கோ வயசாகி விட்டது. எதையும் செய்யச் சக்தியற்றவனாகி விட்டேன். பையன்களும் பெரியவர்களாகி விட்டார்களா? ஆகவே எல்லாப் பொறுப்பையும் அவர்களிடமே விட்டு விட்டேன். பெரியவன் ஆபீஸ் மானேஜர். சின்னவன் அச்சாபீஸ் மானேஜர். எல்லாக் காரியங்களையும் அவர்கள் தான் நிர்வகித்து வருகிறார்கள். சிறு பிள்ளைகளோ இல்லையோ, அவர்கள் கொஞ்சம் கண்டிப்பாகவே இருக்கிறார்கள். நேற்றுக்கூடப் பெரியவன் என்னிடம் கேட்டான்: 'ராமசாமிப் பிள்ளைக்கு ஐந்நூறு ரூபாய் அதிகப்பற்று ஆகியிருக்கிறதே. அவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டாமா?' என்று. அவ்விதம செய்துவிட வேண்டாமென்று அவனைத தடுப்பதற்கு நான் பட்ட சிரமததைச் சொல்ல முடியாது. அப்படி யிருக்க, மேலும் பணம் கொடுக்க அவன் கண்டிப்பாக மறுத்துவிடுவானே!"

ஐயர் கூறியதைக் கேட்டபோது ராமசாமிப் பிள்ளை மனம் ஒடிந்து போய்விட்டார். தம் மீது ஐந்நூறு ரூபாய் அதிகப் பற்று என்பதைக் கேட்டவுடனே அவர் நிலை தடுமாறிற்று.

அவ்வளவு தூரம் அதிகப் பற்று அவருக்கு எப்படி ஏற்பட்டது? என்றைக்குமே அவர் ஐயரிடமிருந்து ஐந்து பத்துக்குமேல் பெற்றதில்லை. அதுவும் அவர் அடிக்கடி வாங்கவில்லை. எப்போதோ தமக்குத் தாங்கமுடியாத பணத் தட்டு ஏற்பட்ட காலங்களிலேதான்.

அதற்குப் பதிலாக அவர் ஐயருக்கு எத்தனையோ புஸ்தகங்களை எழுதிக் கொடுத்திருக்கிறாரே! அவற்றை அச்சுப் போட்டு விற்று அடைந்த லாபத்தாலேதானே ஐயர் இப்போது லக்ஷாதிபதியாக விளங்குகிறார். அந்த ஏழை உபாத்தியாயரின் உழைப்பின், அனுபவத்தின் பலனை யன்றோ ஐயர் இப்போது அனுபவித்து வருகிறார்? அவர் எழுதிக் கொடுத்திருந்த புத்தகங்களுக்கு ஒவ்வொன்

றுக்கும் நூறு ரூபாய் வீதம் கொடுப்பதாயிருந்தால்கூட ராமசாமிப் பிள்ளைக்கு இன்னும் எவ்வளவோ சேர வேண்டி யிருக்குமே!

ஆனால் அவருக்கு இதைப் பற்றி எண்ணுவதற்கே அவர் மனநிலை இடங்கொடுக்கவில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஊர் போக வேண்டு மென்ற வேகம் ஒன்றையே அவர் கொண்டிருந்தார்.

அப்போது இருந்த இருப்பிலும் அவருக்கு உதவக் கூடியவர் வேறு யாரும் இல்லை. அவருக்கு வேறு யாரை யும் தெரியாது. அதனால் எங்கேயும் பணம் கடன் கேட்க முடியவில்லை. ஆகவே தமக்கு எப்படியாவது உதவ வேண் டும் என்று அவர் ஐயரையே கெஞ்சினார்.

சாம்பசிவ ஐயரோ லேசில் மசிந்துவிடவில்லை. அந்த உபாத்தியாயருக்கு அப்போது ஏதோ ஐந்து பத்து 'யாசகம்' கொடுத்து அனுப்புவதைப் பற்றி அவர் கவலைப் படவில்லை. ஆயினும் அந்த உபாத்தியாயர் தம்மை அந்த மாதிரி அடிக்கடி வந்து தொந்தரவு செய்து 'யாசகம்' கேட்காமல் செய்துவிடவே அவர் விரும்பினார். பழைய நாட்களை மறந்துவிட்ட அவருக்கு அது யாசகமாகப் பட்டதில் அதிசயம் ஒன்றும் இல்லையே!

காலம் கடந்துகொண்டே வந்தது. நீண்ட நேரத் திற்குப் பிறகு, சாம்பசிவ ஐயர் அந்த உபாத்தியாயரைத் தனியாக அழைத்துச் சென்று, "இதைப் பாருங்கள், பிள்ளைவாள், நம்முடைய பழைய நாள் நட்பைக் கருதி நான் இப்போது உங்களுக்கு ஒரு பத்து ரூபாய் கொடுக்கிறேன். இது ஆபீஸ் கணக்கில் இல்லை. அதற்குப் பையன் சம்மதிக்க மாட்டான். ஆகவே அதை நான் என் சொந்தக் கணக்கில் பற்று எழுதிக்கொண்டு கொடுக் கிறேன். கணக்கென்றால் கண்டிப்பாக இருப்பவனிடம் நாம் குறைகூற முடியுமா?" என்று சொல்லி ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

'சாம்பசிவ ஐயர் ஏன் இப்படிக் கூறுகிறார்? என் கஷ்டத்தை முன்பின் அறியாத ஒருவரிடம் கூறியிருந்தால்

கூட அவர் மனம் இரங்கி உதவி செய்திருப்பாரே!' என்று உள்ளம் குமுறினார் ராமசாமிப் பிள்ளை.

அந்த ரூபாயைத் தமக்கு வேண்டாம் என்று மறுத்து விடவேண்டும் என்ற எண்ணமே மேலிட்டு உண்டாயிற்று, அவருக்கு முதல் எடுப்பில். ஆயினும் ஊரில் இருந்த நிலைமை அவர் கண்முன் தோன்றி அவரைச் சிறுமைப் படுத்தியது. அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளா விட்டால், தம் நிலை என்னவாகும் என்பதை நினைத்துப் பார்க்கவும் அவரால் கூடவில்லை.

பணத்தைப் பெற்றுக் கொண்டபிறகும் அவருடைய 'பொல்லாத காலம்' அகலவில்லை; நிழல்போல அவரைத் தொடர்ந்தே வந்தது. அதற்குமேல் தம் மனைவியின் பிரசவத்துக்கு வேண்டிய மருந்துச் சரக்குகளை வாங்கிக் கொண்டு அன்றிரவு ரயிலுக்குப் போக முடியவில்லை.

மறு நாள் அவர் தம் ஊரை அடையும்போது பகல் மூன்று மணியிருக்கும். காலையில் கடை திறந்த பிறகு தானே அவர் மருந்துச் சரக்குகளை வாங்கலாம். அவற்றை வாங்கிக் கொள்ளாமல் வெறுங் கையுடன் ஊருக்குப் போனால் என்ன பிரயோசனம்? அவ்விடத்தில் ஒன்றும் கிடைக்காதே!

அவருடைய ஊராவது ரயிலுக்குப் பக்கத்தில் இருக் கிறதா? அதுவும் இல்லை. ரயிலை விட்டிறங்கி, காடு காம்பு களைத் தாண்டி எட்டு மைல் சென்றால்தான் ஊரை யடையலாம். அந்தப் பக்கத்தில் பஸ்ஸும் இல்லை.

நடக்க நடக்க வழி மாளவில்லை ராமசாமிப் பிள்ளைக்கு. அவரால் நடக்கவே முடியவில்லை. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. முதல் நாள், அவர் தாம் உதியோகம் பார்த்து வந்த குப்பத்திலிருந்து புறப்படு வதற்கு முன் சாப்பிட்டவரே. அதற்குப் பிறகு, பச்சைத் தண்ணீர் பல்லில் படவில்லை.

முன்னெல்லாம் ராமசாமிப் பிள்ளை பட்டணத்தில் தங்க நேர்ந்தால், சாம்பசிவ ஐயர் வீட்டிலேதான் அவர் சாப்பிட வேண்டும். ஹோட்டலுக்கோ, வேறு எங்கே

யாவது சாப்பிடப்போனால், ஐயர் விடமாட்டார். உபசாரம் பலமாக இருக்கும். ஆனால் அன்றைக்கு ராமசாமிப் பிள்ளைக்கு வெறும் காபிகூடக் கிடைக்க வில்லை. ஐயர் கொடுத்த பணத்திலே ஹோட்டலுக்கு வேறு செலவு செய்துவிட்டால், போதாமல் போய்விடுமே என்ற பயம். அதனால் அவர் பட்டினியாகவே கிடந்தார். இரவுச் சாப்பாடும் இல்லை. காலையில் பலகாரமும் பண்ணவில்லை.

தள்ளாடிக்கொண்டே அவர் ஊரை அடைந்தார். தெருக்கோடிக்கு வந்தபோதே அவருக்கு என்னவோ நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக் கொண்டன. என்னவென்று விவரிக்க முடியாத வேதனை அவர் மனத்திலே புகுந்தது. தம்மைப் பார்ப்பவர் எல்லோரும் ஏதோ ஒரு விதமாக நோக்குவதாகவே அவருக்குப் பட்டது.

பக்கத்து வீட்டுக் கிழவர், "ஏண்டாப்பா, ராமசாமி, நேத்தே வரப்படாதோ? உனக்காவ எல்லோரும் வழி பாத்துக்கிட்டிருக்காங்க" என்று உபசாரம் சொன்னார். அந்தக் கிழவருக்கு என்ன பதில் சொல்வதென்று விளங்க வில்லை ராமசாமிப் பிள்ளைக்கு. அங்கே நின்று பேசவும் அவருக்கு விருப்பமில்லை. வீட்டுக்குப் போய், தம் தாயார், மனைவி முதலியவர்களைப் பார்க்க வேண்டும் என்ற வேகம் அவரை உந்தித் தள்ளியது. அதனால் ஏதும் பேசாமல் தம் வீட்டை நெருங்கினார்.

அவர் வரவை எதிர் பார்த்துத் தெருக்காரர்கள் அங்கங்கே தங்கள் தங்கள் வீட்டுத் திண்ணைகளிலே காத்திருந்தார்கள். ராமசாமிப் பிள்ளையின் வரவை அறிந்ததும் ஒவ்வொருவராகத் திண்ணையைவிட்டு இறங்கிப் பிள்ளையிடம் வரத்தொடங்கினார்கள். ஆனால் அவரோ அது ஒன்றையும் கவனிக்கவில்லை.

பிள்ளையவர்கள் தம் வீட்டு வாசலை மிதித்ததும், "ஐயோ, அம்மா, நீயும் போயிட்டயா?" என்ற அலறல் உள்ளிருந்து வந்து அவர் முகத்திலே பேயறைபோலத் தாக்கியது. அவ்விதம் அலறியது தம் மூத்த பெண் குரலே என்பதை அவர் அறிந்து கொள்வதற்கு நீண்ட நேரம் பிடிக்கவில்லை. அதைக் கேட்ட அவர் அப்படியே

வாசற்படியில் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டார். பிறகு வெறிபிடித்தவர்போல ஒரே ஓட்டமாகத் தம் வீட்டுக்குள் ஓடினார்.

வாசற்படியைத் தாண்டி, நடையிலே அவருடைய தாயாரின் சடலத்தைக் கிடத்தி யிருந்தார்கள். அவள் தன் மகனை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஆயினும் அவன் முகத்தில் விழிக்காமல் முதல் நாளே தன் உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அவளுக்குச் 'சுவாசம்' கண்டுவிட்டதை யறிந்து, பிள்ளை யவர்களை அழைத்து வரச் சென்ற ஆளும், அவர் குப்பத்தை விட்டு ஊருக்குக் கிளம்பிவிட்டார் என்ற செய்தியைக் கொண்டு, முதல் நாள் இரவே வந்து விட்டான். அதனால் அவர் வரவை எதிர்பார்த்து எல்லோரும் காத்துக்கொண் டிருந்தார்கள். ஆனால் பொழுது ஏற ஏற அவர் வராததைக் கண்டதும் தெருக்காரர்களுக்குக் கவலை ஏற்பட்டது. வீட்டுப் பிணம் காட்டுக்குப் போகவேண்டுமே!

தம் வரவுக்காகக் காத்திருந்த தாயாரின் சடலத்தையும் அவர் கவனிக்கவில்லை. அதையும் தாண்டி உள்ளே ஓடினார் அவர். அங்கே அவர் கண்ட காட்சி, அவர் மண்டையிலே யாரோ சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போன்ற உணர்ச்சியைக் கொடுத்தது. அங்கே மலைபோல அவர் மனைவியின் உடலும் தரையிலே கிடத்தப்பட்டிருந்தது.

அவள் இரண்டு மூன்று நாட்களாகவே கஷ்டப்பட்டாள். உடல் நிலை சரியாக இல்லை. முதல் நாள் அது மிகவும் மோசமாகப் போய்விட்டது. பக்கத்து ஊரிலிருந்து ஆஸ்பத்திரி டாக்டரை அழைத்து வந்து பார்க்கலாம் என்று நினைத்தார்கள். ஆனால், அவரை அழைத்து வரவில்லை. அதற்குப் பண சௌகரியமும் இல்லை; மனுஷ்ய சகாயமும் இல்லை.

அவள் பிரசவமும் முதல் நாளே ஆயிற்று. மாமியார் தன் பூத வுடலை நீத்த அதே சமயத்தில்தான் மருமகள் ஒரு புதிய ஜீவனை உலகுக்கு அளித்தாள். ஆயினும், அந்

தப் புதிய ஜீவனே இரண்டு நாழிகைப் பொழுதுக்குள்ளாகவே இந்த ஜன்மக் கணக்கைத் தீர்த்துக்கொண்டு மறு ஜன்மத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டது.

இது ஒன்றுமே அவளுக்குத் தெரியாது. அவள் தன் நினைவை இழந்து கிடந்தாள். கூடவே ஜுரமும் வந்து விட்டது அவளுக்கு. தொட்டவர் கையே வெந்துபோய் விடுமோ என்று எண்ணும்படி நெருப்புப் பறக்க அடித்த ஜுரம் கடைசியிலே சீதளம் கொண்டு ஜன்னியில் வந்து நின்றது. நடு நடுவிலே நினைவு திரும்பிய காலங்களில் அவள் நாக்குழற, "அவர் வந்துவிட்டாரா?" என்று கேட்டுக் கொண்டே மிரள மிரளச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, ஒன்றையும் கவனிக்காமல் கண்ணை மூடி விடுவாள். எனினும், பாவம்! வந்து சேர்ந்த தன் கணவனையும் பார்க்காமலேயே உயிரை விட்டாள். கணவன் வீட்டு வாசற் படியை மிதிப்பதும், மனைவி கண்ணை மூடுவதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

ராமசாமிப் பிள்ளை மலைத்துக் கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தார். பிறகு வாய் பேசாமல் தம் மனைவியின் கால்மாட்டிலே தரையில உட்கார்ந்து விட்டார்.

பக்கத்து வீட்டுக் கிழவரும் அவரைத் தொடர்ந்து தளர்ந்த நடையுடன் உள்ளே வந்தார். உபசாரம் கூறி அவரைக் கொஞ்சம் தேற்றி, மேலே நடக்கவேண்டிய காரியங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டாமா என்றே நினைத்துவந்தார். ஆனால், காரியம் எதுவும் சுலபமாக நடந்தேறக்கூடிய நிலைமையில் இல்லை யென்பது சீக்கிரமாகவே விளங்கிவிட்டது.

தம் மனைவியையே வெறித்த நோக்குடன் பார்த்துக் கொண் டிருந்த ராமசாமிப் பிள்ளையின் முகத்தில் விநாடிக்கு ஒருதரம் என்ன என்னவோ மாறுதல்கள் உண்டாகி அவரது தோற்றமே நிர்ணயிக்க முடியாதபடி இருந்தது. திடீரென்று அவர் வாய்விட்டு, 'ஹஹ்ஹா!' என்று வீதியில் நின்றிருந்தவர்கள் காதும் செவிடாகும் படியாக உரக்கச் சிரித்தார். ஊழிக்காலத்தே மயானத்தில் தாண்டவமாடும் கால பைரவனுடைய கோரச் சிரிப்பைக்

கேட்டு அண்டம் தவிடு பொடியாக நொறுங்கிவிடுமன்றோ? அதைப்போலவே இருந்தது பிள்ளையவர்களின் சிரிப்பும். அதன் எதிரொலி யடங்குவதற்குள்ளாகவே ஒன்றன்பின் ஒன்றாகப் பல காரியங்கள் நடந்துவிட்டன.

பிள்ளையவர்கள் கையில் பிடித்திருந்த சாமான் மூட்டையின் முடிச்சு அவிழ்ந்துவிட்டது, இந்த அமர்க்களத்தில். சாமான்கள் கீழே கொட்டித் தரை முழுதும் சிதறின. மிச்சம் இருந்த பணத்தில் ஐந்து ரூபாய் நோட்டும் கொஞ்சம் சில்லறையும் இருந்தன. அந்தச் சில்லறை கீழே விழுந்து உருண்டு ஓடியது. ஐந்து ரூபாய் நோட்டு எப்போது எப்படிக் கிழிந்தது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் அதன் கிழிந்த துண்டுகள் காற்றில் பறந்துசென்று அங்கே கிடத்தியிருந்த பிணத்தின் முகத்தில் விழுந்தன.

திடீரென்று எழுந்தார் ராமசாமிப் பிள்ளை. நின்ற இடத்தில் நிற்காமல் கோரத் தாண்டவம் ஆரம்பித்து விட்டார் அவர். ஆம், உலகத்திலே சுற்றித் திரியும் ஆயிரக் கணக்கான பைத்தியங்களுள் ஒருவராகி விட்டார்.

அதே முகூர்த்தத்தில், சென்னையில் சாம்பசிவ ஐயர் தம் பிரசுராலயத்தோடு ஒரு புதிய பத்திரிகையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைப் பூர்த்திசெய்து கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்தார்.



# சிவராத்திரி *

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

## I

ஜம்பு த்வீபத்தில் ஸௌந்தர்யமாகச் சூரியன் உதித்தான். மஞ்சள், நீலம், வெண்சிவப்பு முதலிய வர்ண ஜாலங்களின் மங்கலான மினு மினுப்பினூடே, புண்ணிய நகரமான வாரணாஸி தன்னுடைய முழுக் காந்தியுடனும் விழித்தெழுந்தது.

மாசி மாதம்; வெயில் உஷ்ணத்துடன் காய்ந்த போதிலும், பகல் நேரங்களில் பனி நிறைந்த இரவுகளின் சாயை படிந்துதான் இருந்தது.

அன்று காலை விசேஷத் தெய்விகத் தன்மை பொருந்தி விளங்கியது; காற்று மிருதுவாக வீசிற்று; பூமி சுவர்க்கத்தின் கீழ்த்தளமாக இருக்கக்கூடுமானால், அது இங்கே பிரதயட்சமாய்த் தெரிந்தது. ஆனால் அந்தத் தெய்விகத் தன்மையும் ஓர் ஆழ்ந்த ரகசியத்தின் அடிப்பட்டே இருந்தது. எந்த விதமான ஆடம்பரமும் இல்லை; எந்த விதமான களியாட்டமும் இல்லை. ஏதோ ஒரு மகத்தான விழாவைக் கொண்டாடுவதில் மனிதர்களுக்கு உதவி புரிவதற்கென்று தேவதைகளே இந்தப் புனித பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார்களோ என்று தோன்றச் செய்தது.

தெருக்களிலும் வீதிகளிலும், 'சிவ, சிவா!' என்ற கோஷம் ஒலித்துக்கொண்டிருந்தது. அதிகாலையில் நதியில் குளித்துவிட்டுப் புத்துணர்ச்சியுடன் ஸ்திரீகளும், புருஷர்களும், தனித் தனியாயும், கூட்டமாகவும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். அருகிலும் தொலைவிலும் இருந்த ஆலயங்களின் மணிகள், தங்களுடைய நாத அலைகளைப் பற்றிய பிரக்ஞை இல்லாமலேயே, தாழ்ந்தும்

* ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவர்:—ரா. கி. ரங்கராஜன்

உரத்தும் ஒலித்து, ஜனங்களுடைய பக்தியுடன் தங்களுடைய பக்தி இசையையும் சேர்த்தன.

'சிவ, சிவா !'

ஆனால், வேடன் லுப்தகன், பக்தர்களின் கோஷங்களுக்கு அழகு காட்டிக்கொண்டே, கேலியாகச் சிரித்தான். கட்டைக் குட்டையான உருவ அமைப்பு; அவனுடைய கவசம் அந்தக் காலை வெளிச்சத்தில் ஓர் அமங்களமான ஒளியுடன் பிரகாசித்தது; முழுவதும் தோலினலேயே ஆன அவனுடைய உடை-தோல் கையுறை, தோல் காலுறை எல்லாம் - அவனுடைய வேர்வையினாலும், பல வருஷ உபயோகத்தின் காரணமாகவும் பளபளத்தது. வில்லும், அம்பு நிறைந்திருந்த அம்பறாத் தூணியும் தோளிலே தொங்க, பூமி அதிர நடந்துகொண்டிருந்தான் அவன். அவனுடைய தலைமயிர் சடை பிடித்திருந்தது; அவன் வாயின் அமைப்புக்கொடுந் தோற்றத்தை அளித்தது. இவையெல்லாம் சேர்ந்து அவனுடைய ஜனன காலத்தில், பூத பைசாசங்கள் அனைத்தும் வந்திருந்து, ஆசீர்வாதங்களைப் பொழிந்து விட்டுப் போயிருந்தனபோல் தோன்றச் செய்தன.

லுப்தகன் ஓர் ஆலயத்தின் திறந்த வாயிலுக்கு முன்னே நின்று, உள்பக்கம் எட்டிப் பார்த்தான். பிரார்த்தனை புரிவோரின் கூட்டம், 'சிவ, சிவா !' என்று ஜபிப்பது அவன் காதில் விழுந்தது.

நகரம் எங்கணும், சின்னச் சின்ன மூலை முடுக்குகளிலும் இதே ஜபம் உருவெடுத்து, தெய்விகத் தன்மை போலச் சஞ்சரித்து, தன்னில் தானே லயித்துக் கலந்தது.

"சிவ, சிவா !" என்று பரிகசித்துக்கொண்டே, வேடன் எட்டி அடி வைத்து நடந்தான்.

* * *

பகல் பொழுது கழிந்தது. எல்லைக்கு அப்பால் காடு அடர்ந்திருந்தது. இங்கே இங்குள்ள நிரந்தரமான இருள் மயக்கத்தில்தான், இரவுத் தேவதை தன் கரும் ஆடைகளைப் பகற்பொழுது முடியும்வரை நெய்தாளோ !

லுப்தகன் எட்டிப் போட்ட நடையுடன் காட்டினுள் பிரவேசித்தான். அவனுக்கு உணர்ச்சி பொங்கிக்கொண்டிருந்தது. அவன் கண்கள் ஒரு கொடும் பார்வையுடன் சுழலிட்டன. தலைக்குமேல், மரக் கிளைகளிலிருந்து வரும் ஒவ்வொரு மெல்லொலியும் அவனுடைய நீட்டிய காதுகளில் விழுந்தது. அதே சமயத்தில், அவன் பார்வை காட்டு மிருகங்கள் உலாவும் பாதையின் ஒவ்வொரு சிறிய முடுக்கிலும், திருப்பத்திலும் சென்று கொண்டேயிருந்தது.

'விர்' ரென்று அவனுடைய வில்லிலிருந்து ஓர் அம்பு பறந்தது. மறுகணம் சிறகையடித்துக்கொண்டு ஒரு சிறு பறவை கீழே விழுந்தது. அதனுடைய மெத்தென்ற இதயத்தில் ரத்தக் கறை படிந்தது.

லுப்தகன் பறவையைப் பற்றி எடுத்தான்; அதன் கழுத்தைப் பிடித்துக்கொண்டே, "சிவா, சிவா!" என்று சொல்லி, அந்தப் பிரதேசமே அதிரும்படி சிரித்தான்.

அவன் தன் சிரிப்பை முடிக்கக்கூட இல்லை; அதற்குள், தனக்கு மிக்க அருகாமையில், காட்டுப் பாதையொன்றின் பக்கமாக ஒரு பெண்மான் சென்றுகொண்டிருப்பதைக் கண்டான். வெகு அழகான மிருகம்; அதன் அழகு பூரணமாக மலர்ந்திருந்தது; இளமையினால் பூரண வளர்ச்சி அடைந்திருந்தது; அது மெதுவாக நடந்து போய்க்கொண்டிருந்தது. மழமழவென்று, சுருக்கங்கள் விழாமலிருந்த அதன் விலாப்புறங்கள் அசைந்தாடிக்கொண்டிருந்தன.

வேடன் சட்டென்று வில்லை எடுத்தான்: ஆனால், அம்பு அப்படியே நின்றது; நாண் சப்திக்கவில்லை. ஏனெனில், இதற்கு முன் கேட்டேயிராதவண்ணம், மிக மிக மிருதுவான மனிதக் குரல் ஒன்று பேசுவது கேட்டது.

அது அந்த மான்தான்; பளபளக்கும், விசாலமான தன் கண்களால் வேடனை நோக்கியவாறு அது சொல்லியது:

"ஏ, வேடனே! ஜீவ வதை செய்பவனே! நீ ஏன் என் உயிரைப் பறிக்க விரும்புகிறாய்?"

லுப்தகன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்: "என்ன கேள்வி கேட்கிறாய்! உனக்கே இதற்குப் பதில் தெரியுமே? அதைக் கொண்டுதானே என்னைக் கூப்பிடவும் செய்தாய்? கொல்வதுதான் என் தொழில். மிருகங்களின் மாமிசம் எனக்கும் என் குடும்பததுக்கும் உணவு. அதிருக்கட்டும்; நான் உன்னைக் கொன்று இறைச்சி யாக்கிக்கொள்ளு முன்னர், உனக்கு இந்த மனிதக் குரல் எப்படிக் கிடைததது என்பதை எனக்குச் சொல்லு. நான் எண்ணற்ற பிராணிகளைக் கொன்றிருக்கிறேன்; ஆனால் மனிதனைப் போல் பேசக்கூடிய பிராணி ஒன்றைக்கூட நான் இதுவரை பார்த்ததில்லை."

வருத்தத்துடன் அந்தப் பெண்மான் கூறிற்று:

"கேள், கருணையுள்ள வேடனே! மனிதன் இதுகாறும் கேட்டிராத ஒரு கதையைக் கேள்! அதைக் கேட்கும் முதல் மனிதன் நீ; கடைசி மனிதனும் நீயே. இந்திர சபையில் நான் ஓர் அப்ஸரஸாக இருந்தேன். இளமையும், ஈடற்ற அழகும் எனக்கு இருந்தன. ஒயிலிலும், அங்க அமைப்பின் பூரணத்துவத்திலும் எனக்கு ஈடானவர்கள் யாருமே இல்லை. நான் தூங்குபபோதும், விழித்திருக்கும்போதும், இந்த எண்ணமே எனக்குத தோன்றி, ஒரு பெரிய அகந்தையை அளித்து விட்டது. ஐயோ, அகந்தையே எனக்கு வீழ்ச்சியை அளித்தது; நான் ஓர் அசுரனிடம் காதல் கொண்டேன். அவனுடைய பார்வையிலிருந்தும், ஸ்பரிசததிலிருந்தும் ஒரு கணம் கூட என்னால் அகன்றிருக்க முடியாமல் போய்விட்டது. ஒருவரிடம் ஒருவர் அவ்வளவு மோகித்துப் போனோம். நாள் செல்லச் செல்ல, குறிப்பிட்ட நேரங்களில் சிவ சந்நிதியில் நிருத்தியம் செய்ய வேண்டிய என் கடமையைக்கூட நான் மறந்தேன். விரைவில் என் குற்றம் வெளியாகி விட்டது; கடுங்கோபமடைந்த மஹேச்வரர், 'அப்ஸரஸே! உன் உயர் குலத்தையும், எத்தனையோ தேவர்களையும் உப தேவர்களையும் மறந்து விட்டு, கேவலம் ஓர் அசுரனிடம் மோகம் கொள்ளும்படி அவ்வளவு வெட்கம் கெட்டா போனாய்?

பூமியிலே ஒரு பெண்மானாய்ப் பிறந்து, பன்னிரண்டு வருஷ காலம் கல்லும் முள்ளும் நிறைந்த கொடிய வனத்திலே சஞ்சரிக்கும்படி உன்னைச் சபிக்கிறேன்; உன்னுடைய அசுரக் காதலன், ஒரு கறுப்புக் கலைமானாகப் பிறந்து, இரவும் பகலும் உன்னைத் தொடர்ந்துகொண்டேயிருக் கட்டும்; உன் காலத்தின் முடிவில், ஒரு வேடன் தன் வேட்டைக்கு உன்னை இலக்கு வைப்பான்; உன் விதியே நிர்ணயமாகும் அந்த நேரத்தில் திடீரென்று உன் வீழ்ச் சிக்கும், அவமானத்துக்கும் காரணம் உனக்கு நினைவு வரும்; உனக்கு விதிக்கப்பட் டிருக்கும் கீழான ஜன்மத்தி லிருந்து அப்போது விடுதலை பெறுவாய்!' என்று இடி போல் முழங்கினார்.''

வேதனையினால் லுப்தகனின் கண்கள் சுருங்கின. இந்தப் பெண்மான் ஒரு மோகன அப்ஸரஸாக மாறும் உருமாற்றம் எந்த க்ஷணத்திலும் நடைபெறலா மென்று அவன் மனம் சிந்தித்தது. ஆனால், அந்த மிருகத்தின் மிருதுவான மாமிசத்தின் மேலிருந்த அவனுடைய ஆசை—பசி நிறைந்த ஆசை—இத்தனை நேரமாக அவனை அதன் கதையைக் கேட்குமாறு செய்த, அந்த மயக்கத்தைச் சட்டென்று வென்றுவிட்டது. அவன் கை அம்பை வருடியவாறு, தானாகவே நாண் கயிற்றில் பொருத்தி வைக்கத் தொடங்கியது. அவனைப் பொறுத்த வரையில், அவனுடைய கூரிய பார்வையும், அதைவிடக் கூரான அம்பும் எட்டும் எல்லைக்குள் உள்ள ஒரு கனிசமான மான் எத்தனை தேவலோகத் தேவதைகள் அல்லது பூலோகத் தேவதைகளுக்கு வேண்டுமானாலும் சமம்.

அவனுடைய கருத்தை உணர்த்த அந்த மான் சொல்லிறறு:

''வேடர்களுள் கருணை மிக்கவனே! இன்னும் சற்றுப் பொறு. இப்போது நான் ஒரு குழந்தைக்குத தாயாகும் தறுவாயிலிருப்பதையும், என்னிடமிருக்கும் ரத்தம், சதை எல்லாம் அதனுடைய போஷணைக்குப போய்விடுகின் றன என்பதையும நீ அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் கொன்றால் உனக்கு எலும்பும் தோலும் தவிர வேறு எதுவும் கிடைக்காது. நிச்சயமாக அது உனக்குத்

திருப்தி யளிக்காது. கொழுத்த, பெரியதான இன்னொரு பெண்மான் சீக்கிரமே இங்கு வரும்; தவிர, உனக்கு ஒரு மாசத்துக்குக் காணக்கூடிய மாமிசத்தைக் கொண்ட ஒரு கறுத்த கலை மானும் இங்கே வரும். இன்னும் நீ என்னை நம்பவில்லை யானால், தயவு செய்து என்னை இப்போது போகவிடு; என் குட்டியை ஈன்றுவிட்டு, ஓட்டமாக ஓடித் திரும்பிவந்து, என்னையே உனக்கு அர்ப்பணிக்கிறேன்.''

இது அவனுக்கு நியாயமாகவே தோன்றியது. அந்த அந்தரங்க சுததிக்கு எதிரே லுப்தகனின் சந்தேகங்கள் நிற்கக்கூடவில்லை எனினும், தன் வார்த்தையைக் காப்பாற்ற வன தேவதைகள் சாட்சியாக அதைப் பிரமாணம் செய்யச் செய்தான். பிறகு, காட்டுப் புதரின் நிழல்களினூடே அது மறைந்து போவதைக் கவனித்துக் கொண்டே நின்றான்.

* * *

காலம் சென்றது.

அந்த வேடன் கை வில்லின் பயங்கர சப்தம் வனப் பிரதேசம் முழுதும் எதிரொலித்தது. பறந்துகொண்டிருந்தவையும், கிளைகளில் தத்திக்கொண்டிருந்தவையும், கூடுகளில் தூங்கிக்கொண்டிருந்தவையுமான கபோதம், கிளி, இராஜாளி, நாரை ஆகிய எல்லாவற்றையும், துவேஷ வெறிபிடித்தவனாய் அடித்துத் தள்ளினான்; கழுகு, ஆந்தை முதலிய ஒவ்வொன்றையும் வீழ்த்தினான். அவனுடைய பாண வர்ஷத்துக்கு முன்னே நிற்கமாட்டாத அந்தப் பறவைகளின் மிருதுவான, பல நிறப்பட்ட இறகுகள் இலையுதிர் காலத்தில் விழும் இலைகளைப் போலக் குவியலாகவும், வேகமாகவும் விழுந்து, அந்தக் கடின பூமியில் சிதறிக் கிடந்தன. தனியாகவும், வயிற்றில் தொத்திக் கொண்டிருக்கும் குட்டிகளுடனும் கிளைக்குக் கிளை தாவிக்கொண்டிருந்த குரங்குகள் தயங்கி நின்றன; சள சளவென்று கத்தின; பயத்தினால் கிறீச்சிட்டன. சிறிய அணில்கள், முன்னங்கால்களால் இடுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த கொட்டைகளைப் போட்டுவிட்டு, வாலை மட்டும் தொங்க விட்டுக்கொண்டு, பொந்துகளிலே பதுங்கின. சுருண்டு தூங்கிக்கொண்டிருந்த விஷப்

பாம்புகள் கூட, உறக்கத்திலிருந்து எழுந்து, பிரிந்து, பாதுகாப்புக்காக இன்னும் நிழலான இடங்களைத் தேடி நழுவின. சிறுத்தை, கரடி, மான் எல்லாம் காட்டை அபாயம் உலுப்பிக் கொண்டிருப்பதை உணர்ந்து, தங்களுடைய இருப்பிடங்களுக்குள் பதுங்கிக்கொண்டன.

வனாந்தரமே கிடுகிடுத்தது.

லுப்தகன் தன்னுடைய படுகொலைத் தாண்டவத்தை நிறுத்திக்கொண்டு, வில்லை ஊன்றிச் சாய்ந்தவாறு, "ஹா, ஹா! சிவ, சிவா!" என்று கேலியாகச் சிரித்தான்.

திடீரென்று அவன் பார்வையில் ஒரு பெண் மான் தென்பட்டது. எந்தத் திசையில் செல்வது என்ற நிச்சயம் இல்லாமல், நாலு பக்கமும் பார்த்துத் தயங்கியது அது. லுப்தகன், "இது அந்த மான்தான்!" என்று கத்தினன். "சொன்னால் சொன்னதுதான் போலும்!" என்று உரக்கக் கூப்பாடு போட்டான்.

ஒரேயடியாக திகைத்துப்போயிருந்த அந்தப் பெண் மான் திடுக்கிட்டது; அம்பு எய்யத் தயாராக நின்றிருந்த வேடனைக் கண்டதும், பயத்தினால் உறைந்து போயிற்று.

"நில்லு, நில்லு! வேடர் தலைவனே, நில்லு!" என்று தடுமாறிக்கொண்டே கூறியது. "தயவு செய்; என்னைக் கொல்வதற்கு முன்பு நான் செல்லுவதைச் சற்றுக் கேள்."

லுப்தகனது மூச்சே நின்றுவிட்டது. வியப்பினால் அவன் அப்படியே சமைந்துபோனான். அவனுடைய முகத்தின் அசலத் தன்மை இன்னும் அதிகமாயிற்று. எல்லாப் பெண்மான்களுமே பேசும் வரத்தைப் பெற்றிருக்கின்றனவோ? இந்த மானுக்கும் ஒரு கதை இருக்கிறதோ? அல்லது அதே மான்தான் அவனை ஏமாற்ற முயலுகிறதா? இல்லை, இது வேறு மான்தான். அவனுடைய கூர்ந்த கண்கள் இதை நிச்சயப்படுத்தின.

அது பயத்துடன் கேட்டது:

"இந்த வழியாக வேறொரு மான் போவதை நீ பார்த்தாயா?"

அதிகரித்த வியப்புடன் லுப்தகன் பதிலளித்தான்: "ஆம், பார்த்தேன். இப்பொழுது எனக்குப் புரிகிறது.

சொன்ன வார்த்தையைப் பொய்ப்பிக்காமல், அதுவே தனக்குப் பதிலாக, இறப்பதற்கு உன்னை இங்கே அனுப்பி யிருக்கிறது. வா, பலிக்கு உன்னைத் தயாராக்கிக் கொள்!"

பளபளப்பான அதன் கண்களைக் கண்ணீர் இன்னும் விசாலமாகக் காட்ட, அந்த மான் மன்றாடியது:

"வேடர் தலைவனே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைக் கொல்லாதே. இது மான்கள் கூடிடும் பருவம் என்பது உனக்குத் தெரியாதா? நான் என் சகாவைத் தேடி அலைகிறேன். காதல் என் சதையை யெல்லாம் எரித்துவிட் டிருக்கிறது. என்னைக் கொன்றால், என்னிடமிருந்து உனக்குக் கொஞ்ச மாமிசம் கூடக் கிடைக்காது. அதனோடு, ஒரு ஸ்திரீயை, அவள் தாபத்துடன் இருக்கும்போது கொல்வது பாபங்களுள் மிகக் கொடிய பாபம். தயவுசெய்; பொறு. சீக்கிரத்தில் இங்கே பெரிய, கறுத்த கலைமான் ஒன்று வரும். அதன் மாமிசம் உனக்கும் உன் குடும்பத்துக்கும் உணவாக ஒரு மாசத்துக்கு—ஏன், இன்னும் மேலாகக்கூட—காணும்."

மறுபடியும் தன் தயக்கத்தை வென்றுகொண்டு, லுப்தகன் அந்தப் பிராணியைச் செல்ல விடுத்தான். ஆனால் அதைப் போக விடுவதற்கு முன், ஒவ்வொரு வன தேவதையின் சாட்சியாகவும் அது தன் வார்த்தையைக் காப்பதாகப் பிரமாணம் வாங்கிக் கொண்டான்.

* * *

சூரியன் வானத்தின் உச்சிக்கு வந்தான்.

இந்தச் சமயத்தில், காட்டுச் சப்தங்கள் அடங்கி யிருக்கும் பொழுது, ஒரு கறுத்த கலைமான் நிதானமாக நடந்துகொண் டிருந்தது. பொட்டுப் பொட்டாக விழுந் திருந்த மரங்களின் அருநிழல்களிடையே இந்த மானின் கறுத்த நிழல் பளிச்சென விழுந்தது. அதனுடைய இனத் துக்கே அது ஓர் எடுத்துக்காட்டாக இருநதது. அதன் உடலின் ஒவ்வோர் அணுவிலும் ஜீவன் ததும்பிக்கொண் டிருந்தது. பளபளக்கும் அதன் குளம்புகளில் சிக்கும் ஒரு ரோஜாப்பூகூட நசுங்காமல், அவ்வளவு மென்மை யாக அடி எடுதது வைத்தது அது. அழகாக வளைந்திருந்த

அதன் கொம்புகளின் நுனிகள் கூர்ந்திருந்தன. வாள் போர் இடுவோரின் வாள்களிலிருந்து பிரதிபலிக்கும் மின்னொளியைப் போல, அது தலையாட்டும்போ தெல்லாம் அதன் கொம்புகளிலிருந்து ஒளி வீசியது. உருட்டித் திரட்டிக் கடைந்தெடுத்த ஒன்றாக விளங்கியது, அதன் உருவம். உச்சி வெயில், அடர்ந்த காட்டு மரங்களினால் சிறிது தணிந்திருந்த போதிலும், தன்னுடைய உஷ்ணத் தின் ஒரு பகுதியை இந்த உயர்ந்த மிருகத்துக்குக் கொடுத் திருந்ததுபோலத் தோன்றியது. அதன் உடலில் தாபக் கனல் வீசிக்கொண் டிருந்தது. அதன் முக பாவம் வேட்கை நிறைவேறாத ஒரு நிலையை வெளிக் காட்டியது. அதன் கண்களின் தாபம் மிகுந்த ஜ்வலிப்பு, உணர்ச்சி வேகத்தை மிக நன்றாக வெளிப்படுத்தியது. உடல் உட லுடன் இணையத் துடித்துக்கொண்டிருந்தது. மிருக மாகையால, அந்த வேகம் இன்னும் அதிகமாக வெளிப் பட்டது. லுப்தகன் சற்றுத் தள்ளி இருந்தவாறே, அந்தப் பிராணியை மதிப்பிட்டுப் பார்த்து, திருப்தி நிறைந்த பெரு மூச்சு விட்டான். அந்தக் கலைமானின் அங்க யோக்கி யதைகளைப் பற்றி அந்தப் பெண்மான்கள் சொன்னவை யெல்லாம் உண்மையே. நிச்சயமாக, இம்முறை அவன் எந்த மாயக் கதைக்கும் செவிசாய்க்கப் போவதில்லை. மரணத் தாக்குதலுக்குச் சித்தமாயிற்று அவன் அம்பு.

ஆனால், அபாய காலத்தில் மிருகங்களுக்கே ஏற்படும் ஒரு விசித்திர அறிவினால், அந்தக் கலைமான் சட்டென்று, பூரணமாக அவன் பக்கம் திரும்பிப் பார்த்துச் சொல்லியது :

"வில்லும் அம்பும் ஏந்தி நிற்கும் பலவானே! இந்த வழியாக இரண்டு பெண்மான்கள் போனதை நீ கண்டாயா? நான் அவைகளை எவ்வளவோ தேடிப் பார்த்தும் பயனில்லை. நீ அவைகளைக் கொன்றுவிட்டாயா, என்ன?"

மறுபடியும் அதே மனிதக் குரல்! இது என்ன மாயம்! அது இவனை இப்படிப் பாதிப்பானேன்? மிகவும் பிரமிப்படைந்தவனாய் வேடன் பதிலளித்தான் :

"அவைகளைப் பார்த்தது உண்டு; ஆனால், அவைகளை நான் கொல்லவில்லை. என் பாணத்தின் நுனியைப் போன்ற நுண்மையுள்ள வாக்குறுதிகளைத் தனித் தனியாக அவைகளிடம் வாங்கிக்கொண் டிருக்கிறேன். தங்களுக்குப் பதிலாக, நான் கொல்வதற்கு, உன்னை அனுப்புவதாக அவைகள் உறுதி கூறிய பின்னரே அவைகளை விடுவித்தேன். இப்பொழுது உன் மரணம் நிச்சயம்."

துக்கம் தொண்டையை அடைக்க, கலைமான் பதில் கூறிற்று:

"ஏ, பலம் மிக்க வேடனே! நான் சாகத் தயார். என் விதி அப்படியிருக்குமானால், என் கண்ணீர்களும் புலம்பல்களும் என்ன செய்யப் போகின்றன? ஆனால், உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். எனக்குச் சிறிது அவகாசம் கொடு. நான் என் உயிர்க் காதலியைப் பிரிந்திருக்கிறேன். இதுவோ, மிருகங்கள் கூடிடும் பருவம். எந்த இன்பத்தைக் கோரி அவள் ஏங்கி நிற்கிறாளோ, அந்த இன்பத்தை அவளுக்கு அளித்து விட்டு வர என்னை விடு. அவளிடமும், குட்டியுடன் இருக்கும் என்னுடைய இன்னொரு காதலியிடமும் விடைபெற்றுக் கொண்டு வர விடு. தயவு செய்; தாம்பத்திய தர்மத்துக்காக, எனக்கு இந்த அவகாசத்தை அளி. பிறகு என் மாமிசம் உன் பூரண இஷ்டத்துக்கே!"

லுப்தகன் முள் முனையில் நிற்பவனைப் போல் தவித்தான். அவன் கொஞ்சங்கூட அறிந்திராத ஒரு வித அனுதாபம் ஒரு நொடி நேரத்துக்கு அவன் மனத்தில் எங்கேயோ ஒரு மூலையில் பளிச்சிட்டது. அனுமதி கொடுத்துவிட்டான். மறு கணமே, அவன் பழையபடி, அசல் வேடனாக மாறி, தனக்கு மிக்க அருமையான, கொடிய காட்டுத் தேவதைகளின் சாட்சியாக அதனிடம் பிரமாணம் வாங்கிக்கொண்டான்.

சென்றுகொண்டிருக்கும் அந்த மிருகத்தைப் பார்த்தவாறே, "சிவ, சிவா!" என்று அவன் கதறினான். ஆனால், தன்னுடைய அந்தப் பரிகாசத் தொனியில், விவரிக்க இயலாத ஏதோ ஒன்று கலந்திருப்பதை அவன் உணர்ந்தான். தன்னைப் பற்றித் தானே வெட்கப்பட்டவனாய்

"சிவ, சிவா!" என்று கர்ஜித்தான். அப்போது அதே அபசுரம் அவனுடைய காதுகளைத் தாக்கியது.

*　*　*

ஏற்கெனவே இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. வேறு ஓர் இடத்தில் வெயில் கொளுத்தும் பகலாக இருக்கும் இதே சமயத்தில், காட்டின் இந்தப் பகுதியில் மட்டும் அதன் இயற்கையான சாம்பல் ஒளி படர்ந்துவிட்டது.

ஆழ்ந்த நிசப்தத்தில் வனம் மூழ்கியது; அந்த ஆழ்ந்த நிசப்ததில் அதனுடைய ரகசியம் இன்னும் வலிமை யுடைய தாயிற்று. முற்றும் ரத்த சம்பந்தமான பயங் கரங்களை வெளிப்படுததும் சக்தியும் அதிகமாயிற்று.

லுப்தகன், தன் வில்லினால் அடிபட்டு, சுற்றிலும் சிதறி விழுந்து கிடந்த பறவைகளைச் சேகரிக்கத தொடங்கினான். சத சதவென்றிருந்த இறக்கை, சிறகு ஆகியவைகள் ஒன்று சேர்ந்து, காய்ந்து கரடு தட்டிப் போயிருந்தன. பெரிய பறவைகளை முரட்டுத் தோலால் ஆன தன் பைக்குள் திணித்துக்கொண்டான்; சிறியவைகளை நீண்ட ஒரு காட்டுக் கொடியால் அவைகளின் மிருதுவான மெலிந்த கழுத்துக்களைச் சேர்த்துக் கட்டினான்.

ஆனால் அன்றைக்கு அவன் கையைவிட்டு நழுவிப் போன பெரிய வேட்டைகளுடன் ஒப்பிடும்போது உபயோகமற்றுக் கடை வாய்க்குங் காணாத இந்தச் சிறிய பறவைகள் எந்த மூலே? பசியால் வாடும் தன் குடும்பத்தை அவன் நினைத்தான். பிறகு அவன் எண்ணங்கள் அந்தக் கலைமானையும், பெண்மான்களையும் விட்டு அகல மறுத்தன. ஒரு கணம் அவைகளை நம்பினான். மறு கணம் அவை களிடம அவநம்பிக்கை கொண்டான். நிமிஷத்துக்கு நிமிஷம் அவன் வேதனை அதிகமாயிற்று.

அவன் அதிக நேரம் காக்க வேண்டி யிருக்கவில்லை.

அவன் பார்த்தது என்ன? கவிந்துகொண்டிருக்கும் அந்தி மயக்கத்தின் நிழலா? அல்லது, அவனுடைய அமைதியற்ற மனந்தான் ஓர் உருவெளித் தோற்றத்தைச் சிருஷ்டித்து, நம்ப மறுத்த அவன் கண்கள் முன்னே காட்டியதோ?

ஓர் அம்புஇலக்குத் தூரத்துக்குள் கலைமானும், இரண்டு பெண்மான்களும் தங்களுடைய குட்டியுடன் நின்றுகொண் டிருந்தன.

கலைமான் முன்வந்து, "நான் தயார்!" என்றது.

அதனுடைய மூத்த காதலி தன் காதலனைப் பின் தள்ளிவிட்டுச் சொல்லியது: "இல்லை, இல்லை. என்னை முதலில் கொல்லு! நான் ஒரு சுமங்கலியாகவே சாக வேண்டும். ஒரு கணத்துக்கே ஆனாலும், வைதவ்யம் மிகக் கொடியது. தந்தியற்ற வீணை, சக்கரமில்லாத ரதம், புருஷனற்ற மனைவி ஆகியோர் அனைவரும் ஒரே விதமாக அசுபமானவர்கள். என்னை முதலில் கொல்லு!"

"என்னையும்கூட!" என்று இளைய காதலி கத்தியது. அளவற்ற நன்றியறிதலுடன் கலைமானை நோக்கியவாறே. சற்று நேரத்துக்கு முன் தன் காதலன் அளித்த, அந்த மகத்தான இன்ப நினைவுடனேயே அது தன் உயிரை விட விரும்பியது. அப்பா! அதற்கு மரணம் அளவற்ற இனிமை யுடையதா யிருந்தது!

குட்டி மானோ, தன் வாலை ஆட்டிக்கொண்டு, தன் தாயாரின் சதைப் பிடிப்புள்ள விலாப் பக்கத்துடன் உராய்ந்துகொண்டே, தன்னை அடக்க முயன்ற சிற்றன்னை யிடம் மூக்கைத் தேய்த்தவாறு நின்றது.

முதல் முறையாக, வெளியேற முடியாத ஒரு சங்கடத்தில் சிக்கிக்கொண்டது கலைமான்.

அவனுடைய பசிக்குப் பரிபூரணமாக, முழு மனத்துடன் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள முன் வந்திருக்கும் அந்த மிருக குடும்பத்தை லுப்தகன், ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். ஒரு விசித்திரமான இரக்கத்தால் அவன் மனம் கரைந்தது. அவனுடைய முரட்டுத் தேகத்தின் ஒவ்வோர் உறுப்பும் தளர்ந்தது—ஆம், தளர்ந்தது. தன் மனைவி, குழந்தைகளைப்பற்றி எண்ணினான். தன்னைக்காட்டிலும் பலவானான ஒரு வேடனிடம் அவர்கள் தங்களைப் பலி கொடுக்க நேர்வது சாத்தியந்தானே என்றும் நினைத்தான். ஆனால், தன்னைக் காட்டிலும்—லுப்தகனைக் காட்டிலும்—தோள்வலி அதிகம் படைத்த ஒருவன் கூட

இருக்கிருனு? திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டான். ஒன்றும் அர்த்தமாகவில்லை. கொலையையும் பிரதி கொலையையுமே அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கை நியதியைப்பற்றி அவனுக்கு ஏதோ லேசாகத் தெரியும். அவனுடைய தொழிலை அது புனிதப்படுத்தியது. அற்பமானதிலிருந்து மகததானதுவரை ஒவ்வொன்றும் வாழ்வில் சாவும், சாவில் வாழ்வுமாகத்தான் இருக்கிறது. பல்லி பாச்சையைத் தின்கிறது; சிலந்தி ஈமேல் பாய்கிறது; பாம்பு பறவையையோ, தேரையையோ விழுங்குகிறது; ஓநாய் ஆட்டின்மேல் பாய்கிறது. சிங்கம், புலி, யானை எல்லாம் ஒவ்வொன்றும் மற்றதைத் தின்றே ஜீவிக்கிறது. மனிதன் எல்லாவற்றையும் தின்று ஜீவிக்கிருன். பின், கொல்பவனுக்கும் கொல்லப் படுபவனுக்கும் என்ன வித்தியாசம்? எது கொடியது—சிருஷ்டியா, சம்ஹாரமா?

சிருஷ்டி, சம்ஹாரம்! சம்ஹாரம், சிருஷ்டி!

அமைதியுடன் அந்த மிருகங்கள் காத்து நின்றன.

மின்வெட்டும் நேரத்தில் லுப்தகன் தன் முழங்காலைத் தூக்கி, வில்லை முறித்தான்; பூமியின் எட்டுத் திக்குகளிலும் அம்புகளை விட்டெறிந்தான்.

வனப் பிரதேசம் முனகியது.

*   *   *

இரவு சூழ்ந்தது.

ஒவ்வொரு சின்னச் சின்ன இடத்திலிருந்தும், அருகிலிருந்தும், தொலைவிலிருந்தும் சளசளப்புச் சப்தங்கள் கிளம்பின. வன சரங்கள் தங்கள் ராஜ்யத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

காற்றுக்கூடப் பிசாசு போல ஊர்ந்தது.

கொஞ்சமும் வழி கண்டுபிடிக்க முடியாதபடி இருள் கவிந்துகொண்டு விட்டதால், வீட்டை அடைவது அசாத்தியம் என்பதை லுப்தகன் உணர்ந்தான். காட்டின் மத்தியில் அவன் இருந்தான்; நகர எல்லைகூடப் பல மைல் தூரத்தில் இருந்தது.

பகலில், மிகக் கொடிய மிருகத்தையும் விழித்துப் பார்த்தே ஸ்தம்பிக்கச் செய்து விடக்கூடிய அவன்,

இப்போது நடுநடுங்கினான்; இரவுச் சூழ்நிலைதான் அத் தகைய பெரிய மாறுதலை ஏற்படுத்தியது.

எனவே, அவன், பக்கத்தில் இருந்த வில்வமரத்தின் கிளைகளினூடே இரவைக் கழிக்கத் தீர்மானித்து, அதன் மீது ஏறினான்.

பனி அதிகமாகப் பெய்யும் பருவம் அது. கீழே கொடிய மிருகங்கள் சஞ்சரிக்க, குளிர் வாதை செய்ய, கிளைகளில் அவன் மிகச் சங்கடப்பட்டான். அன்று எவ் வளவோ பிராணிகளைக் கொன்றும் கூட, அவன் ஒன்றுமே சாப்பிடவில்லை. ஆகையினால், குளிர் நடுக்க, பசி வாட்ட, தன் இருப்பிடத்தைக் கிளைக்குக் கிளையாக மாற்றியவாறு இருந்தான். தாவும்போது பனித்துளிகளையும் சில இலை களையும், புஷ்பங்களையும், பழங்களையும் கீழே உதிர்த்துக் கொண்டிருந்தான்.

தூக்கமற்றிருந்த, நீண்ட அந்த நேரத்தில் கிளைக்குக் கிளை அமைதியின்றித் தாவிக்கொண்டிருந்தபோது, "சிவ, சிவா!" என்று தன் வாய் முணுமுணுப்பதாக அவனுக்குத் தோன்றியது.

குளிர்ந்த பனித் துளிகள் ஒவ்வொரு சொட்டாக விழுந்துகொண்டிருந்தன. பழமும், புஷ்பங்களும், இலை களும் வில்வமரத்தின் அடியில் மறைந்து கிடந்த ஒரு சிவ லிங்கத்தின் மேல் விழுந்தன.

மாசி மாச கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி அந்த நாள்; சிவத் தியானத்துக்காக அர்ப்பணிக்கப் பட்ட இரவு.

இரவு கழிந்தது.

## II

கைலாச பர்வதம்.

வெள்ளிப் பனிமலையின் அமைதி.

பார்வதி சிவனிடம் சொன்னாள்:

" உங்கள் பக்தர்கள் எவ்வளவு கொடியவர்க ளானாலும் உண்மையில் அவர்களிடம் கருணை காட்டவே செய்கிறீர்கள்!"

சிவன் பதிலளித்தார்: "லுப்தகன் விஷயத்தைப்போல. அவன் இறந்தபோது, யமகிங்கரர்கள் அவனை நரகலோகத் திற்கு இழுத்துச் செல்லத் தயாராயிருந்தார்கள். ஆனால், என் கணங்கள் அவனை மீட்க விரைந்து விட்டன. யமதர்மனுக்கு நிரம்பவும் அவமானமாகப் போய்விட்டது. துணிச்சலாக அவன் உரிமையைப் பறித்ததில் மிகவும் கோபங்கொண்டு, அதற்கு விளக்கம் கேட்க வந்தான். ஆனால் அவன் என்னிடம வரவேண்டியிருக்கவே இல்லை. விசுவாச மிக்க நந்தி அவனுக்கு வாசலிலேயே பதில் சொல்லி அனுப்பிவிட்டான்."

"பாவம், யமன்!" என்று பெருமூச்சு விட்டாள் பார்வதி.

"உமா! பெண்களுக்கே இயற்கையான முறையில் தான் நீயும் பெருமூச்சு விடுகிறாய்! இந்த லுப்தகன் ஒரு கொடிய பாவி என்பது உண்மையே. ஆனால் அவன் இறப்பதற்கு முன் பட்டினி இருந்தான்; கண் விழித்தான்; என் லிங்கத்துக்கு நைவேத்தியமும் செய்தான். இவ்வளவும், அவன் தன்னை அறியாமலேயே செய்தபோதிலும், இந்தப் புண்ணிய மனைத்தும் ஒன்றுசேர்ந்து, அவன் கடந்த காலத்தில் செய்த பாவங்களிலிருந்து அவனை விடுவித்து விட்டது; ஒரேயடியாக, அவனுடைய ஆத்மாவுக்குக் கடைசி விடுதலை அளித்து, அவனை என்னுடன் ஐக்கியப் படுத்திவிட்டது. எனக்கு எவ்வளவோ அருமையான இந்த இரவில், தங்களுடைய விரதங்களைப் பக்தி சிரத்தை யுடன் செய்பவர்களுக்கு வேறு பலன்தான் என்ன?"

மெதுவாக அவர் உமையைத் தம் பக்கத்தில் இழுத்துக் கொண்டார். ஆணும், பெண்ணுமாகிய அந்த இரண்டு சக்திகளும் உருகிக் கலந்து அந்தத் தெய்வ உலகத்தின் நிரந்தரமான ஒரே ஜோதியாகப் பிரகாசித்தன.

## III

இந்தப் புராணக் கதை நிற்க:—

சூரியன் அஸ்தமித்தும், அந்தி வானத்தின் மங்கிய ஒளிமட்டும் செல்லத் தயங்கிக்கொண்டிருந்தது. சிறு சிறு

தாரகைக் கூட்டங்கள் இருண்டுகொண் டிருந்த வானத்தில், மின்மினிப் பூச்சியின் ஒளிபோலப் பொட்டுப் பொட்டாகப் புள்ளியிடுவதை, நான் என் அறையின் திறந்த ஜன்னல் வழியாகக் காண முடிந்தது.

ஓம் பசுபதயே நம:

ஜீவன்களுக்கு நாதனே! உனக்கு வணக்கம்.

முதலில் ஒரு கரகரத்த குரல் மந்திரங்களைச் சந்தத்துடன் சொல்லியது; அது புரோகிதரின் குரல் என்று என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அதைத் தொடர்ந்து ஒரு மெலிந்த எதிரொலி—இது என் பாட்டியினுடையது. இரண்டு குரல்களும கீழே யிருந்த பூஜை அறையிலிருந்து, நிசப்தத்தினூடே மிதந்து வந்தன. வயது முதிர்ந்த என் அருமைப் பாட்டி, எண்பதுவயதாகியும்கூட, சிவராத்திரி விரதத்தைப் பூரணமாக—ஒரு சிறு அம்சத்தைக்கூட விட்டுவிடாமல்—அனுஷ்டித்து வந்தாள். நாள் முழுவதும் பட்டினியானதால், அவளுடைய மெலிந்த குரல், இன்னும் மெலிந்தும், நடுக்கத்துடனும் இருந்தது.

ஓம் த்ரியம்பகாய நம:

மூன்று கண்களையுடைய பெருமான்! அவைகளைக் கொண்டு அவன் காலத்தின் மூன்று கூறுகளையும்—கடந்தது, நிகழ்வது, வருவது ஆகிய மூன்றையும்—பார்க்கிறான். நெற்றியின் நடுவிலே இருக்கும் அந்த மூன்றாவது கண்ணினால், அந்த அவனிடமே பாணப் பிரயோகம் செய்யத் துணிந்த விஷமக்கார மன்மதனை எரிக்கவும் செய்தான். அப்பா, ரதியின் துக்கந்தான் என்ன! ஆனால், ஒரு மகத்தான தாபம் என்பது எப்பொழுதுமே முழுவதும் அழிந்துவிட முடியாது. இதைச் சிவனே அறிவார்.

ஓம் காலகூட விஷஹராய நம:

ஏழு கடல்களுள் பாற்கடல; தேவர்களும் தானவர்களும் அணிவகுத்து நின்றனர்; கடலைக் கடைதல்; மந்தர மலையே மத்து; வாசுகி சர்ப்பம் கடையும் கயிறு; கிரகங்கள் தங்கள் பாதையில் ஸ்தம்பித்து நிற்கின்றன;

பாற்கடலின் பாதாளத்திலிருந்து அதியற்புதமான பொருள்கள் ஜனிக்கின்றன; அமிர்தம், காமதேனு, உச்சைசிரவஸ், கல்பக விருக்ஷம், சந்திரன், கௌஸ்துபம், ஐராவதம், மஹாலக்ஷ்மி, காலகூடம்—நீல விஷம்! அதைக் கண்டு இந்தத் தேவர்களும், உப தேவர்களும் என்ன ஓட்டம் ஓடினார்கள்! உலகத்தைச் சர்வ நாசத்திலிருந்து காப்பதற்காகச் சிவன் அதைக் குடித்தார்!

ஓம் கபாலமாலா தராய நம:

யுகங்கள் புரண்டு நழுவுகின்றன! நம்முடைய சல சலத்த எலும்புக் கூடுகளின் மூலம், இந்த உலகத்தின் இடு காடுகளை நாம் மேலும் மேலும் நிரப்பிக்கொண்டே யிருக்கிறோம், ஒரே வேகத்துடன், கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல். வாழ்க்கையாகிற இந்த மாயக் கிருஹத்தில் நாம் அணிந்து கொண்டிருந்த எத்தனையோ முகத் திரைகள் நழுவி விழுந்து, சாவு எனப்படும் இன்னும் மாயமான கிருஹத்தில் நம்முடைய முகங்களை நிர்வாணமாகவும், ஒரே தரத்துடனும் ஆக்கி விடுகின்றன. பகவான் நம்முடைய மனித மண்டையோடுகளை மாலையாகச் சூட்டிக் கொள்கிறார்; தாம் அழிப்பதையே சிருஷ்டிக்கவும் செய்கிறார் என்பதற்கு இது அடையாளம்.

ஓம் த்ரிபுராந்தகாய நம:
ஓம் அர்த்த நாரீச்வராய நம:
ஓம் காலாந்தகாய நம:
ஓம் ஆனந்த தாண்டவகராய நம:

வெகு வேகமாக மேலே மேலே சென்று கொண்டிருந்த உச்சாடனத்துடன் என் கற்பனை தொடர்ந்து செல்ல முடியவில்லை. நாமாவளியுடன் கலந்து வந்து, இடைவெளிகளை இட்டு நிரப்பும், உலகம் சிருஷ்டியாகிக் கொண்டிருந்தபோது ஒலித்த இந்த ஓங்கார நாதத்துக்கு முடிவே இல்லை போலத் தோன்றியது.

'பாம்!'

இது என்னை என் சுற்றுப்புறத்துக்குக் கொண்டு வந்தது. ஒரு மோட்டார் ஹாரனின் ஊளை.வாகனங்களின் சப்தமும் தூரத்திலிருந்து லேசாகக் கேட்டது. நவீன மனிதனது

ஆலயமாகக் 'காரேஜ்' ஆகிவருவதைப் பற்றி யாரோ எங்கேயோ சொல்லியிருப்பது எனக்குத் திடீரென்று நினைவுக்கு வந்தது. பனி மலைகளையும், பாற்கடல்களையும் காட்டிக்கொண் டிருந்த அதிசய உலகங்களின் சாளரங்கள் படாரென்று மூடிக்கொண்டன. பிரத்தியட்ச உலகத்தில் சென்னைப் பட்டினத்தி லிருந்த என் சிறிய தெருவுக்கும், வீட்டுக்கும் என் சிந்தனை திரும்பியது.

இந்த விழிப்புக் கடுமையாக இருந்தாலும், நான் சந்தோஷமே அடைந்தேன். என் பாட்டி — பாவம், அந்தக் கிழ ஆத்மா—சீக்கிரமே உபவாசத்தை முடித்துக் கொண்டுவிடுவாள். எரிந்து கொண்டிருந்த தூபதின் 'கம்'மென்ற மணமும், வெகு வேகமாகத் தொடர்ந்து அடிக்கப்படும் பூஜை மணியின் நாதமும், லிங்க பூஜை முடியப் போகிறது என்பதைத் தெரிவித்தன.

நான் கீழே இறங்கி வந்தேன். பூஜையின் கடைசியில் நமஸ்காரம் செய்த என் தகப்பனார், தாயார், தங்கை ஆகியோருடன் நானும் வெகு பயபக்தியுடன் கலந்து கொண்டேன். சொல்லப்போனால், என் தகப்பனார் இம் மாதிரியான விரதங்களை—அவைகளின் சக்தியில் நம்பிக்கை கொண்டிருந்த போதிலும் - அனுஷ்டிப்பது இல்லை. அவர் ஒரு நீர்ரோக நோயாளி; இப்போதுதான் 'இன்ஸலின்' சிகிச்சை செய்துகொண் டிருக்கிறார்.

பாட்டி, தனக்கு முன் போடப்பட் டிருந்த பெரிய வாழை இலையிலிருந்து ஆகார வகைகளை எடுத்து 'ருசி பார்க்க' ஆரம்பித்தாள். அவை அனேகமாய்ப் பழங்களே. தவிர, நைவேத்தியம் செய்த பலகாரங்கள்; சர்க்கரை போட்டு, நல்ல சூடாக இருந்த ஒரு டம்ளர் பால். பக்கத்தில் பணி செய்யத் தயாராக என் தாயார் நின்றிருந்தாள்.

"இந்தத் தடவையும் நீ என்னைப் பஞ்சவடிக்கு அழைத்துக்கொண்டு போகவில்லை. ஒவ்வொரு வருஷமும் சொல்வதோடு நிறுத்திக்கொண்டு விடுகிறாய்!" என்று என் தகப்பனாரைப் பார்த்துச் சொன்னாள் பாட்டி.

இந்தியாவில் சிவ க்ஷேத்திரங்களென்று பிரசித்தமான பன்னிரண்டு இடங்களில் பம்பாய் மாகாணத்திலுள்ள பஞ்சவடியும் ஒன்று. இங்கேயெல்லாம் சிவராத்திரி உற்சவத்தின் போது பெரிய கொண்டாட்டங்கள் நடக்கும். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குள் மகா புனிதமான இந்த க்ஷேத்திரத்துக்கு, கோதாவரியின் உற்பத்தி ஸ்தலமான இந்த க்ஷேத்திரத்துக்கு, தான் சாவதற்குள் ஒரு வருஷம் போய் விரதத்தையும் பூஜையையும் செய்ய வேண்டுமென்று என் பாட்டிக்கு ஓர் ஆசை.

என் தகப்பனுர் வாக்குறுதி அளித்தார்; ஆனால், ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தார்.

அவர் பாட்டிக்குப் பதில் சொல்லவே இல்லை; லேசாகப் புன்சிரிப்பு மட்டுமே சிரித்தார். 'கண்டிப்பாக, அடுத்த வருஷம்' என்பதே அதற்கு அர்த்தம்.

"என் வயசுக்காரர்கள் எல்லாரும் போய்விட்டார்கள். நான் ஒருத்திதான் உயிரோடு இருக்கிறேன். எதற்கோ, தெய்வத்துக்குத்தான் வெளிச்சம!"—இதுவே அந்தக் கிழ ஆதமாவின் ஒரே புலம்பல். அந்தக் குரலின் தன்மையிலேயே நிராசை எதிரொலித்தது; ஒருவனை எட்டு வயதில் தூக்கிச் சென்றும், இன்னொருவனை எண்பது வயதில் கூடத் தூக்கிச் செல்லாமலும் இருக்கும் வாழ்க்கையின் இந்தச் சோக நியதியைப் பற்றிய ஆழ்ந்த உணர்ச்சியினுல், விவரிக்க இயலாததாயிருந்தது.

"வயசாகிவிட்டால் கௌரவக் குறைச்சல்தான்!" என்று பாட்டி தொடர்ந்து கூறினுள். ஆனால், என் தகப்பனுர் குறுக்கிட்டார்:

"இந்த ரீதியில் பேசாதே, அம்மா! யார் உன் கௌரவத்தைக் குறைத்துப் பேசினுர்கள்? அதிக நாள் ஜீவிக்க, ஜீவிக்க உனக்குக் கௌரவமும் ஆதரவும் அதிகமாகவே கொடுக்கிறுர்கள்."

சமையலறை வாசலில் ஒரு பெருமூச்சுக் கேட்டது. என் தாயார்தான், தகப்பனுரை அவருடைய அஜாக்கிரதையான வார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிடும் முயற்சியில், பெருமூச்சு விட்டாள். வீட்டில் பாடுபடுகிறவள் என்கிற

ஹோதாவில், தள்ளாத காலத்தைப் பற்றி அவள் தனி அபிப்பிராயம் கொண்டிருந்தாள்.

அவளுக்கே இந்தவயதில் கொஞ்சம் ஆதரவும் கவனிப்பும் தேவையாயிருந்தன. ஆனால், அதற்காக, அவள் அந்தக் கிழவிக்கு மதிப்போ, ஆதரவோ கொடுக்காமல் இல்லை. கிழவி இந்த உலகத்தை விட்டுப் போவதை எதிர்பார்த்தாள் என்பதல்ல. இந்தப் பிரச்னையில் அவளுடைய உணர்ச்சிகள் மிக நுட்பமானவையா யிருந்தன. அவள் அதை வெளிக் காட்டுவதே யில்லை. எனவே, அவளுக்குச் சாதகமாகவே மதிப்பிட விரும்பியவர்களைக்கூட, அவளைப் பற்றி ஒரு விதமான முடிவும் செய்யக் கூடாதவர்களாகச் செய்தது.

தனக்குச் சம்பந்தம் குறைவாக உள்ள விஷயத்தில் பேச்சைத் திருப்ப எண்ணி, என் தகப்பனார் "சரி, நீங்கள் இரவை எப்படிக் கழிக்க உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

மரியாதைக் குறைவாக இருக்கக் கூடாதென்று, "ஏன், விழித்துக்கொண்டுதான்!" என்றேன் நான்.

"ஆமாம், அவனுக்கென்ன, புஸ்தகத்தைக் கட்டிக் கொண்டு அழுவான்!" என்று என் தங்கை குறுக்கிட்டு, எங்கள் குடும்பக் கூட்டத்தில் தானும் இருப்பதை முதன் முறையாகத் தெரியப்படுத்திக்கொண்டாள்.

ஒரு வருஷத்துக்கு முந்திதான் அவளுக்குக் கல்யாணம் நடந்தது. இரண்டு மாசம் நிஜமான ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தன் கணவன் வீட்டிலிருந்து வந்திருந்தாள். நிரம்பக் குதூகலமான பெண் அவள்; என் தாயாருக்குச் செல்லப் பெண். அவளுடைய குதூகலமான போக்குக்கு என் தாயார் சற்று அதிகமாகவே இடம் கொடுத்திருந்தாள். இந்தக் குதூகலம் சில சமயம் சுத்த அதிகப் பிரசங்கித்தனமாகக்கூடப் போவதுண்டு.

"பெண்களுக்குக் கொஞ்சம் சுதந்தரம் கொடுக்க வேண்டும். நவ நாகரிகமான உலகத்தில் அவர்களும் கொஞ்சம் நவ நாகரிகமானவர்களாக இருக்க வேண்டும். கொலுவில் வைத்திருக்கும் புராதன மரப்பாச்சிகளைப்

போல இருக்கக் கூடாது" என்று அவள் சொல்வது வழக்கம்.

பக்கத்தில் இருந்த ஒரு சினிமாக் கொட்டகையில் ஒரு பக்திப் படத்தின் நடுநிசிக் காட்சியைப் பார்க்க அவர்கள் திட்டம் போட்டதை நான் மத்தியான்னம் ஒட்டுக் கேட்டிருந்தேன்.

"கோவிலுக்குப் போய், நான் சங்கர தரிசனம் செய்துவிட்டு வரவேண்டும்" என்றாள் என் பாட்டி. "நாம் எல்லாருமேதான் போகவேண்டும். இப்போது மணி என்ன?" (இது என்னைப் பார்த்து.)

"எட்டரை இருக்கும், பாட்டி! நாம் அவசரப்படவே வேண்டாம்!" என்றேன் நான்.

"தரிசனத்துக்கு அப்புறம் எங்களைச் சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு போவாய், இல்லையா?" என்று ...னைப் பார்த்துக் கேட்டாள், என் தங்கை. சின்னக் குரலில் மெதுவாக வெளிவந்த அந்த வார்த்தைகளின் அடிவாரத்தில் அதிகார தோரணை கலந்திருந்தது. என் சௌகரியம் போன்ற எதையுமே கவனிப்பது—அவளைப் பொறுத்த வரையில்—அனாவசியமானது.

"'எங்களை'யா? பாட்டியையுமா?" என்று நான் கேட்டேன்.

"இல்லையடா, முட்டாள்! இந்த யோசனையை அவள் ஒப்புக் கொள்ளக்கூட மாட்டாள். நானும் அம்மாவும் தான். ராத்திரி இந்த விதத்தில்தான் கண் விழிக்கப் போகிறோம்."

"ரொம்பப் பேஷ்! பாட்டியிடம் சொல்லிக்கொள்ள வாவது செய்வாயா, இல்லையா? அதில் ஒன்றும் கெடுதல் இல்லையே?"

பதில் சொல்லக்கூட இஷ்டப்படாமல், அவள் சமையலறைப் பக்கம் சென்றாள். ஒருகால் அம்மா அவளை ஜாடை காட்டிக் கூப்பிட்டாளோ, என்னவோ.

என் பாட்டி சிலைபோல உட்கார்ந்திருந்தாள். ஓர் அங்குல அகலம் சிவப்புக் கரைபோட்ட, பழுப்பு நிறமான

நார்மடிப் புடைவை வெறும் எலும்பும் தோலுமாயிருந்த உடலைச் சுற்றி மூடியிருந்தது. அந்தப் புடைவையை அவள் தானே தினசரி வெகு கவனமாகத் தோய்த்துக் கட்டுவாள். மூடிய கண்களோடு, சுருக்கம் விழுந்திருந்த அவளுடைய முகத்தை மட்டுமே அது அலாதியாக எடுத்துக் காட்டியது. ஒருகால், இன்னும் ஒரு மணி நேரத்தில் அவள் தரிசனம் செய்யப் போகிற மூர்த்தியைப் பற்றிய உபாசனைதான் அவளை இப்படி அசையாமல் இருக்கச் செய்ததோ, என்னவோ! அந்த அமைதியான தோற்றமே அவளுடைய சருமத்தின் மந்தத் தன்மையைப் போக்கி, சுருக்கங்களுக்கு மெருகிட்டிருந்தது போலத் தோன்றியது. அந்த முகத்துக்கு ஒரு தெய்விக தேஜஸை—மேல் வானத்தின் காந்தியை, நட்சத்திரம் நிறைந்த, நிர்மலமான மேகமற்ற வானத்தின் ஒளியை—அளித்திருந்தது. அவள் எனக்கு மகத்தானதொரு தோற்றம் அளித்தாள். பழுப்பு நிற நார்மடிப் புடைவை அணிந்து, நெற்றியில் வி[illegible] துலங்க, மூடிய கண்களுடன் ஒரு சிலையைப் போல் உட்கார்ந்திருந்த அவள், அதே சமயத்தில் மிக்க பரிதாபகரமாகவும் தோன்றினாள். ஆச்சரியம் ஊட்டும் அவளுடைய அந்தப் புராதனமான புனிதத் தன்மைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை யென்றாலும், நான் அவளிடம் மிக நெருங்கி இருப்பதாகவே உணர்ந்தேன். அவளுடைய பரிதாபகரமான தனிமையில் நானும் ஒரு பகுதியாயிருப்பதாகத் தோன்றியது. அவளை விட்டுவிட்டுப் போக மனம் வரவில்லை. அவளிடமிருந்து என் பார்வையை அகற்ற முடியவில்லை.

* * *

அந்தச் சினிமாப் படம் சர்வ மட்டம்.

ஆனால், அது என் தாயாரும் தங்கையும் கண்விழித்திருக்க உதவி செய்தது. அது மகா பாரதத்தில் உள்ள ஓர் உப கதை. துண்டுப் படங்களைச் சிருஷ்டிப்பதில் பிரசித்தி பெற்ற, கற்பனை மிக்க டைரக்டர் ஒருவர் தம் மேதையைப் பிரயோகித்து அதை வியாக்கியானம் செய்திருந்தார். அதன் பக்தி ரஸத்தைச் சந்தேகிப்பது என் வேலை யல்ல. ஏனெனில், சர சர வென்று ஓடிக்கொண்

டிருந்த அந்தச் 'செலுலாயிட்' படத்தில் வந்த கதா நாயகர்களும், கடவுள்களும் அனுபவித்த உணர்ச்சிகளுடன் சேர்ந்துகொண்டு, படம் பார்க்க வந்திருந்த அத்தனை பேரும் விம்மி வெதும்பிக்கொண்டிருந்ததை நான் கேட்டிருந்தேன்.

முழுக்க முழுக்க மூன்றரை மணி நேரத்துக்கு மேலாக மூச்சைத் திணற வைத்த அந்தச் சூழ் நிலையிலிருந்து என் தாயாரையும் தங்கையையும் வீட்டுக்கு விரைவாக அழைத்துச் சென்றேன். ஒருவேளை திரையில் காட்சி அளித்த கதா நாயகர்களும் கடவுள்களும்கூட இதற்குப் பழக்கப்பட்டிருந்திருக்க மாட்டார்கள்.

அப்பாவையோ, பாட்டியையோ தொந்தரவு செய்ய வேண்டாமென்று, வெளியே போகும் போது முன் க வப் பூட்டிக்கொண்டே சென்றிருந்தோம். சத்தம் ..டாமல் உள்ளே நுழைந்தோம். ஹாலில், ஸ்டாண்டில் வைக்கப்பட்டிருந்த கடியாரத்திலிருந்து மணி நாலே கால் என்று தெரிந்துகொண்டேன்.

படுக்கப் போகுமுன்னர், பாட்டியைப் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆசை எழுந்தது. ராத்திரி முழுவதும் கண் விழித்துக் கொண்டே யிருக்கிறாளா?

வெளியே போகும்போது உடுத்தும் உடையுடனேயே, மெல்லக் கீழே இறங்கிச் சென்றேன். ஹாலின் மூலையில் இருந்த அறையிலதான் பாட்டி இருப்பாள் என்று எதிர்பார்த்து, அங்கே சென்றேன். ஆமாம், அவள் அங்கேதான் இருந்தாள். சில மணி நேரத்துக்கு முன்பு கோவிலிலிருந்து அழைத்துக்கொண்டு வந்துவிட்ட பிறகு, நான் பார்த்த அதே நிலையில், அதே தோற்றத்துடன் அவள் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய பக்கத் தோற்றத்தைக் கூர்ந்து கவனித்தவாறே, நான் சில கஜ தூரங்களுக்கப்பால் நின்றேன். பக்கத் தோற்றத்தைத்தான் நான் பார்க்க முடிந்தது அங்கே எரிந்து கொண்டிருந்த சிறிய நெய் விளக்குக்குப் பக்கத்தில், அமைதியே உருவெடுத்தாற்போல் அவள் உட்கார்ந்திருந்தாள். எப்பொழுதாவது வீசும் இளங் காற்றில் சுடர் அலைந்ததால் ஏற்பட்ட நிழல்

களின் அசைவு ஒன்றுதான் ஜீவனுள்ள ஒரே பொருளாகத் தோன்றியது.

நான் என் அறைக்குத் திரும்பிச் சென்றேன். பல்வேறு விதமான சிந்தனைகள் கொந்தளிக்க என் படுக்கையில் உட்கார்ந்து கொண்டேன். எவ்வளவு நேரம் அப்படி உட்கார்ந்திருந்தேனென்று எனக்குத் தெரியாது. 'ஓம் நமசிவாய!' என்ற லேசான ஒரு முணு முணுப்புக் கேட்டதுபோல் தோன்றியது. என்னை அறியாமலேயே மறுபடியும் மாடிப் படிகளில் இறங்கி நடந்தேன். அன்று இரவு என் பாட்டியை மூன்றும் முறையாக, உன்னிப்பாகப் பார்த்துவிட்டு வர எனக்கு ஓர் ஆவல் எழுந்தது.

இடைவிடாத சப்தமும், நிசப்தமும், தீபமும் தூபமும் நிறைந்த ஓர் அமானுஷச் சூழ்நிலை அவளைச் சுற்றிப் பரவியிருந்தது. அல்லது நானேதான் அத்தகைய ஒரு பிரமையைச் சிருஷ்டித்துக் கொண்டேனோ?

நீண்ட நேரம் அவளை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு திடீரென்று, என்ன செய்கிறேனென்றே தெரியாமல், அவள் பக்கம் ஓடிச் சென்றேன். அவள் முன்னே குனிந்து அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தேன்.

பிரமித்துப்போய் உட்கார்ந்து விட்டேன். நான் இதற்குமுன் கண்டிராத ஒரு விசித்திர அமைதி அவள் முகத்தில் குடிகொண்டிருந்தது. கண்கள் மூடியிருந்தன; உதடுகள் அசையவில்லை. கன்னத்துச் சதை இளமையின் அழகைப் பெற்றுப் பிரகாசித்தது. கையைப் பார்த்தேன்; கையில் இருந்த ருத்திராக்ஷ மணிகள் உருளவில்லை.

தொண்டை கரகரக்க, "பாட்டி!" என்று கத்தினேன். அந்தக் கத்தல் என் தொண்டையிலேயே அமுங்கிப் போயிற்று.

அடுத்த நிமிஷம் நான் இந்தக் கத்தலினால் என் தகப்பனார், தாயார், தங்கை ஆகியோரின் அமைதியான தூக்கத்தைக் குலைத்தேன். "பாட்டி!"—அவர்களுடைய கேள்விகளுக்கு இந்தக் கத்தலைத் தவிர வேறு பதில் இல்லை.

நாங்கள் அவளைச் சூழ்ந்துகொண்டோம்.

சட்டென்று என் தகப்பனார், அவளுடைய மூக்கை லேசாகத் தொட்டுப் பார்த்து, இறுக மூடியிருந்த கண் இமைகளைத் திறக்க முயற்சித்தவாறே, "ஐயோ, அம்மா, அம்மா!" என்று புலம்பினார்.

என் தாயார் தன் புடைவைத் தலைப்பைக் கண்களுக் கருகே கொண்டு சென்றாள்.

என் தங்கை வெறித்துப் போய்ப் பார்த்தாள்.

ஐம்பத்தைந்து வயதாகியும், என் தகப்பனார் குழந்தை யைப் போல விம்மி அழுதார்: "ஐயோ, அம்மா!"

நான் அவர்கள் எல்லாரையும் கவனித்தேன். என் கோட்டுப் பையில் கடினமாயும் தளர்ந்தும் இருந்த ஏதோ ஒன்றை என் வலது கை ஸ்பரிசித்தது. யந்திரம் போல அதை வெளியே எடுத்தேன். 'கிரெசென்ட் தியேட்டரி'ல், அந்தப் பக்திப் படத்துக்காக வாங்கிய டிக்கெட்டுகள். —ஒவ்வொன்றும் ஒரு ரூபாய், இரண்டு அணா!

வங்கக் கடலி லிருந்து சூரியன் மெல்ல எழுந்தான்.

மஞ்சள், ஊதா, சிவப்பு ஆகிய வர்ண ஜாலங்களின் மங்கலான மினுமினுப்பினூடே, சிருஷ்டியின் தொடக் கத்தில் எழுந்தது போலவே, இப்போதும் அவன் எழுந் தான். தங்களுடைய வேதனையையோ, மகிழ்வையோ அவனும் அனுபவிப்பதாக மனிதர்கள் கவிதா பாவத்தில் கூறினாலும், அவன் என்னவோ, மனித வர்க்கத்தின் சுக துக்கங்களைப் பொருட் படுத்துபவனாகக் காணவில்லை. ஆனால், அவனுடைய இந்தத் தனித்து ஒதுங்கி நிற்கும் சுபாவத்திலும், அவன் லேசாகப் புன்னகை பூப்பதாகவே தோன்றியது. ஒருகால், தான் வடதிசை நோக்கிச் செல்லும் உத்தராயண புண்ணிய காலத்தில் ஒரு நல்ல ஆத்மா விடுதலை அடைந்ததைப் பார்த்துச் சந்தோஷப் பட்டான் என்று இதைச் சொல்லலாம் அல்லவா!

*

# விஷப் பரீக்ஷை

'மாயாவி'

'உங்களைக் கடப்பைக்கு மாற்றி யிருக்கிறோம்' என்ற அரசாங்கத்தின் கட்டளைதான் மேஜையின் மீது விரிந்து கிடந்து என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

நானும் அதைப் பார்த்துச் சிரித்தேன். "கடப்பைக் கல்ல; அந்தமான் தீவுக்கே வேண்டுமானாலும் மாற்றும். எனக்கு எல்லாம் ஒன்றுதான்" என்று வெறுப்புடன் அந்தத் தாளுக்குப் பதில் உரைத்தேன்.

நாம் விரும்புவதைவிட விரும்பாதவைகளே வாழ்வில் அதிகமாக நடைபெறுகின்றன. நகரத்தில் பிறந்து அதன் நாகரிகத்தில் வளர்ந்த என்னைக் காட்டுமிராண்டியாகத் திரிய, விதி விதித்திருந்தது. கலா ரசனையுள்ள நான் 'பாரஸ்ட் ஆபிசரா'கி மனித வாடையற்ற காடுகளில் வசிக்க வேண்டுமென்று தலையெழுத்து இருக்கையில், அது தமிழ் நாட்டுக் காடாயிருந்தால் என்ன, ஆந்திர தேசத்துக் காடாயிருந்தால் என்ன?

காட்டு இலாக்காவில் உத்தியோகம் வகிப்பவர்கள் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது அரசாங்கத்தின் முடிவு போலும். சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்களைக் காட்டிலிருந்து நாட்டுக்குப் பிடித்து வந்து கூண்டுகளில் அடைத்து வைப்பது போல, எங்களைப் போன்ற மனித மிருகங்களைக் காட்டிற்குப் பிடித்துக் கொண்டுபோய், அங்கே கட்டப்பட்டிருக்கும் வீடு என்ற பெயர் கொண்ட கூண்டுகளில் அடைத்து வைக்கின்றனர்.

அந்த ரீதியில் ஒரு கூண்டிலிருந்து இன்னொரு கூண்டுக்கு மாற்றப்பட்டு, கடப்பைக் காடுகளை அடைந்தேன்.

நல்ல வேலையாக, சென்னையில் பிறந்து வளர்ந்ததால் சிறிது தெலுங்கு பாஷையைத் தெரிந்து கொண்டிருந்தேன். இல்லாவிட்டால் காட்டில் வசிப்பதிலும், ஊமையாக வேறு இருக்கவேண்டி யிருந்திருக்கும்.

* * *

எனக்குக் கீழ்ப்பட்ட சிப்பந்திகளில் சிலர், என்னை ஜாகைக்கு அழைத்துப் போக, பக்கத்துக் கிராமத்திற்கு வந்திருந்தனர். அவர்களைப் பின்பற்றி என் புதிய கூண்டுக்கு நடந்தேன்.

கிராமத்திலிருந்து நான்கு மைல்களுக்கு அப்பால் காட்டின் ஆரம்பத்தில் இருந்தது கவர்ண்மெண்டார் கட்டிய பங்களா. அதைச் சுற்றிலும் அங்கங்கே குடிசைகள் அமைத்துக் கொண்டு இதர வேலைக்காரர்கள் வசித்து வந்தனர்.

உற்சாகமோ உணர்வோ இன்றிப் புதிய வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த போது, நான் ஒரு நிமிஷம் வியப்புடன் திகைத்து நின்றேன். அவ்வாறு என் கவனத்தைக் கவர்ந்தது, ஓர் அழகிய சித்திரம். எனக்கு முன் அங்கு வேலையா யிருந்தவர் அதை மறதியாக விட்டு விட்டுப் போயிருக்க வேண்டும் என்றே நினைத்தேன்.

'அடர்ந்த காட்டின் நடுவே மரத்தடியில் யாரோ ஒருவன் அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்திருக்கிறான். அவன் மீது பாய்வதறகுக் குறி பார்தது்க் கொண்டிருக்கிறது ஒரு புலி. படுத்திருப்பவன் தலைப் பக்கத்தில் நல்ல பாம்பு ஒன்று படம் எடுத்தபடி, புலியை நோக்கிச் சீறிக் கொண்டிருக்கிறது.'

சிறிது அசாதாரண நிகழ்ச்சிதான்; இருந்தாலும் கலா ரசனையுடன் நோக்கும் கண்களுக்கு ஓர் இனிய உயிரோவியம் அது. உலகின் வெவ்வேறு ஜீவராசிகள் மூன்றின் விநோதமான சந்திப்பிலும், அவை ஒவ்வொன்றின் முகத்திலும், ஜீவகளை நிறைந்து தீட்டப்பட்டிருந்தது. நடக்காத ஒரு சம்பவத்தைத் தன் கைத்திறனால், நடக்கக் கூடியது என்று நம்பும்படி வரைந்திருந்தான் ஓவியன்.

வெகு நேரம் அந்த ஓவியத்தில் லயித்து இருந்து விட்டு, "இது ஏன் இங்கு இருக்கிறது? எனக்கு முன் இருந்தவர் இதை விட்டு விட்டுப் போய் விட்டாரா?" என்று என் சிப்பந்திகளிடம் கேட்டேன்.

"இல்லை, ஸார்; இந்தப் படம் அவருடையதல்ல. பல நாட்களுக்கு முன்னர் இங்கே ஒரு வெள்ளைக்காரர் ஆபீஸராக இருந்தார். இந்தச் சித்திரம் அவரால் எழுதப் பட்டது. தமக்குப் பின் வேலையாக வரும் ஒவ்வொரு வரும் இதைப் பார்க்க வேண்டுமென்று இங்கே மாட்டி விட்டுப் போனார்" என்றான் வயதான கிழவன் ஒருவன்.

என்னைப் போலவே கலைப்பித்து உடைய வேறொரு நபரும் இங்கு வேலையாயிருந்து விட்டுப் போயிருக்கிறார் என்பதைக் கேட்க எனக்குச் சந்தோஷமாக இருந்தது. இருந்தாலும், 'இந்த அசாதாரண நிகழ்ச்சியை ... படமாகத் தீட்டி இங்கே மாட்டிவிட்டுப் போ... வேண்டிய காரணம் என்ன? ஏதாவது அர்த்த புஷ்... யுள்ள சொற் சித்திரமாக இருக்குமா?' என்பன போன்ற கேள்விகள் என் உள்ளத்தே எழுந்தன.

என் கேள்விகளுக்கு விடை அளிப்பதே போன்று அந்தக் கிழவன் சொன்னான்: "அவர் ஆபீஸராக இருந்த போது இங்கு மேஸ்திரியாக இருந்து இறந்துபோன தாசப்பா என்பவனது ஞாபகார்த்தமாக இப்படம் இங்கே தொங்கவிடப்பட் டிருககிறது, ஸார்."

"ஆனால் இந்தப் படத்தில் அவன் நினைவை எழுப்பும் படி என்ன இருக்கிறதப்பா?" என்று நான் ஆச்சரியத் துடன் கேட்டேன்.

"இருக்கிறது, ஸார், அது பெரிய கதை. சாவகாச மாக உங்களுக்கு அதைச் சொல்லுகிறேன். இப்பொழுது வீட்டில் சாமான்களை யெல்லாம் ஒழுங்கு படுத்தி வைப் போம், வாருங்கள்" என்றான் அவன்.

என் ஆவல் அக் கதையை உடனே அறிந்துகொள்ளத் துடித்தது. "சாமான்களை ஒழுங்கு படுத்தி வைப்பது அப்புறம் இருக்கட்டும். நீ உட்கார்ந்து அந்தக் கதையை முதலில் சொல்" என்றேன் நான்.

"ஆமாம், ஸார்; எந்த ஆபீஸர் வந்தாலும், இந்தப் படத்தைப் பார்த்ததும் அதன் கதையைக் கேட்டு முடிக்கும் வரையில் நிம்மதி அடைவதில்லை" என்று கூறி விட்டு அவன் கதையை ஆரம்பித்தான்.

* * *

தாசப்பா உயிரோடிருந்தால், இப்பொழுது கிட்டத் தட்ட என் வயசிருக்கும், ஸார், அவனுக்கு. எனக்கு இந்த வேலை கிடைக்குமுன்பே அவன் இங்கே வேலையா யிருந்தான். தங்கமான குணம். பிறருக்கு உதவுவதைத் தன் கடமையாகக் கருதுபவன். ஆளும் வாட்டசாட்ட மாய் அழகாக இருப்டான்.

இருந்தாலும் சாகும் வரையில் அவன் பிரம்மசாரி யாகவே இருந்து வந்தான். அவனுக்குச் சுற்றத்தார்கள் யாரும் இல்லை. உலகில் எந்தப் பொருள்மீதும் அவ னுக்குப் பற்றுதல் இல்லை. பணமாகட்டும், பதவியாகட் டும், அவன் கொள்கையை அசைத்ததே இல்லை.

"ஏன், தாசப்பா? இப்படிப் பிரம்மசாரியாகவே இருந்தால் சரிப்படுமா? நாளைக்கு வயசாகி ஆட்ட ஓட் டங்கள் ஓய்ந்து போனால், உன்னைக் கவனிக்க வீட்டில் ஓர் ஆள் வேண்டாமா?" என்று கேட்டால், "ஏன் ராமப்பா? நீங்கள் எல்லோரும் அது போன்ற சமயத்தில் என்னைக் கைவிட்டு விடுவீர்களா, என்ன? நீங்கள் கை விட்டு விட்டாலும், என் நாகலக்ஷ்மி என்னைக் காப்பாற்று வாள்" என்ற உறுதியான பதில் அவனிடமிருந்து வரும்.

"நாகலக்ஷ்மி யார்? அவனுக்குத்தான் பந்துக்கள் யாரும் இல்லையென்று சொன்னாயே?" என்று குறுக் கிட்டேன் நான்.

சொல்கிறேன், அவசரப்படாதீர்கள். நாகலக்ஷ்மி என்று அவன் குறிப்பிட்டது தன் சுற்றத்தாரில் எவரை யும் இல்லை. ஏன்? அது ஒரு மனித ஜன்மமாகக்கூட இல்லை. அல்லது நடக்கும் சக்தி பெற்ற ஐந்தறிவுள்ள ஜீவன் கூட அல்ல. வெறும் ஊர்வன வகையைச் சேர்ந்த, அவன் வளர்த்து வந்த ஒரு நல்ல பாம்புதான் நாக லக்ஷ்மி.

கதை கேட்பதில் என் சுவாரஸ்யம் அதிகமாயிற்று.

"என்ன, பாம்பா?" என்று வியப்புடன் கேட்டேன் நான்.

ஆமாம், ஸார்; ஒரு நல்ல பாம்பு. ஒரு நாள் எங்கேயோ காட்டில் சுற்றிவிட்டு வருகையில், வெயிலில் சுருண்டு மயங்கிக்கிடந்த அந்த நல்ல பாம்புக் குட்டியைத் தூக்கி வந்தான் தாசப்பா. அன்று முதல் அதற்குப் பாலூட்டி வளர்க்கவும் ஆரம்பித்தான். என் கேட்கிறீர்கள்?—ஒரு பொருள்மீதும் பற்றில்லாத தாசப்பாவுக்கு இப்பொழுது அப் பாம்புக் குட்டி மீது அளவுகடந்த பற்றுதல் ஏற்பட்டு விட்டது. 'தந்தை - பிள்ளை பாசம்' என்று நாம் ஏதோ சொல்கிறோமே; அதெல்லாம் அவனிடம் பிச்சை வாங்க வேண்டும். பாம்பும அவ்வாறுதான் அவனிடம் இருந்தது. ஒரு நிமிஷமாவது அவர்கள் இ— பிரிந்தது இல்லை. எப்பொழுதும் அவன் கழுத்— சுற்றிக்கொண்டு தோளிலோ முதுகிலோ தலையைச் சாய— துக் கிடக்கும் அது. குளிக்கும் போதும் தூங்கும் போதும் தவிர, அது அவன் தோளை விட்டு எச்சமயமும் இறங்கியது இல்லை. தந்தையின் தோளை விட்டிறங்க மாட்டேன் என்று இருக்குமே நம் குழந்தைகள், அது போன்றிருந்தது அவன் பாமபுக் குழந்தையும்.

தாசப்பாவை ஒருநாள் பார்க்காவிட்டால் என்னவோ போலிருக்கும் எங்களுக்கெல்லாம் இப்போது அவனைக் கண்டால் குலை நடுக்கமாகி விட்டது. எவர் உத்தரவும் இன்றி அவனது வீட்டிற்குள் எச்சமயமும் சாதாரணமாக நுழைந்துகொண்டிருந்த நாங்கள் இப்போது அவ் வீட்டுப் பக்கம் தலைசாய்த்துப் படுக்கவும் பயந்தோம். அது மட்டுமா? 'எந்த ராத்திரியில் அவன் பாம்பு எங்கள் வீட்டிற்குள் புகுந்து எங்களைத் தீர்த்து விடுகிறதோ?' என்ற விசாரம் வேறு.

நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். 'பாம்புக்குப் பால் வார்ப்பார் உண்டோ?' என்று பழமொழியே இருக்கிறது. "உனக்கு என் இந்த வயசில் இவ் விஷப் பரீக்ஷை? அது உன்னோடு மட்டும போகிறதா? இல்லையே. இரவு நேரத்தில் அது எங்கள் வீட்டுக்குள்

ஊர்ந்து வந்து யாரையாவது கடித்து விட்டால் என்ன செய்வது?'' என்று என்னென்னவோ சொல்லி அவன் மனதைத் திருப்பப் பார்த்தோம். பலன் இல்லை.

ஆகவே நாங்கள் அப்பொழுது ஆபீஸராக இருந்த துரையிடம் போய் முறையிட்டுக் கொண்டோம். அவர் எங்கள் பேச்சை நம்பவே யில்லை. "பாம்பையாவது, ஒரு மனிதன் வளர்ப்பதாவது!'' என்று முதலில் சிரித்தார். பிறகு எங்கள் வற்புறுத்தலுக்காகத் தாசப்பாவைக் கூட்டி வரும்படி ஓர் ஆளை அனுப்பினார்.

தோளில் பாம்புடனே அவர் முன் வந்து நின்றான் அவன். துரை ஆச்சரியத்தால் திகைத்துப் போனார். இருந்தாலும், எங்களைப் போன்ற மன வெழுச்சி அவருக்கும் இருந்ததால், அந்தப் பாம்பை எங்கேயாவது கொண்டு போய் விட்டுவிடும்படி சொன்னார்.

ஆபீஸரிடம் எதிர்த்து வார்த்தை யாடியது என்பது —டு இலாக்கா வேலையாட்களிடம் அன்றுவரை இல்லை. ஆனால் அன்று தாசப்பா சற்றும் தயங்காமல், "பாம்பைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது'' என்று கூறினான்.

துரைக்குக் கோபம் வந்து விட்டது. இதர வேலைக் காரர்களைக் கலவரப் படுத்தும் ஒரு விஷ ஜந்துவை அவன் வளர்க்கத் தாம் அனுமதிக்க முடியாதென்றும், அதை உடனே ஒழிக்கவில்லை யானால் அவனை வேலையிலிருந்து நீக்கி விடுவதாகவும் கடுமையாகச் சொன்னார்.

ஆனால் தாசப்பா கொஞ்சமும் கலவரப்படாமல், "துரைக்குச் சலாம். உங்கள் இஷ்டம் அதுவானால் அப்படியே செய்து விடுங்கள். ஆனால், குழந்தையைப்போல் வளர்க்கும் என் நாகலக்ஷ்மியை நான் புறக்கணிக்க உடன் பட மாட்டேன். யாருக்கும் அது எவ்விதத் தீங்கும் செய்யாது. அப்படி ஏதாவது நேர்ந்ததென்றால், பிறகு எனக்கு எவ்விதத் தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்; ஏற்றுக் கொள்கிறேன். அதை விட்டுத் தாயும் பிள்ளையும்போல் இருக்கும் எங்களைப் பிரிக்க முயன்றால், அது உங்களால் முடியாது. இந்த வேலை என் குழந்தை யின்முன் எனக்கு ஒரு பொருட்டல்ல'' என்று தைரிய மாகக் கூறினான்.

துரை அவன் பாசத்தைக் கண்டு மனம் கசிந்து விட்டார். "சாதுவாக, அவனை விட்டு அகலாது இருப்பதால், அந்தப் பாம்பு யாரையும் தீண்டாது என்று தாசப்பன் சொல்வதை நம்புவதற்கு இடம் இருக்கிறது" என்று எங்களுக்குத் தைரியம் சொல்லி எல்லோரையும் சமாதானப் படுத்தி அனுப்பிவிட்டார்.

எங்கள் கலவரமும் சில நாட்களில் நீங்கிப்போயிற்று. அது உயிருடன் இருந்த வரையில் ஒருவரையும் தீண்டியது இல்லை என்பது மாத்திரமல்ல; தன் பழக்கத்தினால், உலகத்திற் கெல்லாம் உதவும் ஒரு விஷ வைத்தியனாகவும் தாசப்பாவை மாற்றிவிட்டது.

ஒரு நாள் காட்டில் வேலை செய்துகொண் டிருந்த எங்கள் கூட்டாளி ஒருவனைக் கரு நாகம் கடித்து விட்டது. அருகில்தான் இருந்தான் தாசப்பா. என்ன தைரிய... அவனுக்கு? தெரியாது. திடீரென்று குனிந்து கடி... இடத்தில் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சிவிட்ட... கடிபட்டவன் பிழைத்துக் கொண்டான். தாசப்ப... செத்தான் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால், என்ன ஆச்சரியம், அவ் விஷம் அவனை ஒன்றுமே செய்யவில்லை.

இதிலிருந்து ஆரம்பித்த தாசப்பாவின் விஷ வைத்தியம் ஊரெங்கும் பரவிற்று. இரவென்றும் பகலென்றும் பாராமல், பரமசிவனைப் போலக் கழுத்தில் பாம்புடன், யார் வந்து கூப்பிட்டாலும் மறுக்காமல் உடனே வைத்தியத்திற்குப் புறப்பட்டு விடுவான் அவன்.

கடப்பை ஜில்லாவைப்போன்ற உஷ்ண பூமியில் விஷப் பாம்புகள் அபரிமிதம் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாள் தவறாமல் தாசப்பாவுக்கு ஒவ்வோர் இடமாக ஓடுவதற்கே பொழுது சரியாக இருக்கும். இந்த வைத்தியத்திற்காக ஒரு பைசாக்கூட அவன் கூலியாகப் பெற்றுக்கொண்டது இல்லை. அவனால் காப்பாற்றப்பட்ட உயிர்களோ கணக்கிட முடியாது. அவன் செய்துவரும் ஜீவிய சேவையை உணர்ந்த துரை, எச்சமயமும் தம் உத்தரவின்றி, இந்த வைத்தியத்தின் நிமித்தம் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம் என்று அவனுக்கு அனுமதி தந்திருந்தார்.

ஆனால், நல்லவன் என்று பெயரெடுத்தவனைத் தான் யமன் அதிக நாள் உயிரோடு வைத்திருப்பதில்லையே.

ஒரு நாள் இரவு எங்கேயோ வைத்தியத்திற்குச் சென்று திரும்பியிருந்த தாசப்பா, மறு நாள் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தான். இரவு முழுவதும் விழித்திருந்ததால் வெயில் ஏற ஏறத் தூக்கம் அவன் கண்களைச் சுழற்றத் தொடங்கிற்று. நிழலான மரத்தடி ஒன்றுக்குப் போய்த் தலையைச் சாய்த்தவன் அயர்ந்து தூங்கிவிட்டான். வழக்கம் போல நாகலக்ஷ்மி அவன் தலைப் பக்கத்தில் சுருண்டு கிடந்தது.

இந்தச் சமயத்தில் பசியுடன் காட்டில் திரிந்துவந்த புலி ஒன்று, பனித வாடையை மோப்பம் பிடித்துக் கொண்டு, தாசப்பா தூங்கும் இடத்திற்கு வந்துவிட்டது.
லப்பு'ச் சப்தம் கேட்டுத் தலையைத் தூக்கிய நாக
, தாசப்பாவுக்கு வரவிருக்கும் ஆபத்தை நிமிஷத்தில்
ார்ந்து கொண்டது. மறு நிமிஷம் அது சீறி யெழுந்து
புலியை நோக்கி விரைந்து பாய்ந்தது.

ஆனால் புலி, பாம்பின் வேகத்தைத் தெரிந்துகொண்டு விட்டது. அருகில் வரும் வரையில் பார்க்காததுபோல் இருந்து விட்டு, அது படத்தை விரித்துத் தன்னைத் தீண்டத் தயாரானதும், கால்களில் ஒன்றைக் குறிப்பாக அதன் தலையில் வைத்துத் தேய்த்துவிட்டது. நாகலக்ஷ்மியின் விரிந்த படம் கிழிபட்டு அது இறந்து போயிற்று.

காட்டில் சுற்றி வந்துகொண் டிருந்த துரை அப் புலியைத் தூரத்தே பார்த்துவிட்டு, அதைத் தேடி வந்தார். இந்த அபூர்வமான காட்சியைப் பார்த்து ரசித்துக்கொண் டிருந்தவர், நாகலக்ஷ்மி இறந்துவிட்டதை அறிந்ததும், நிமிஷமும் தாமதியாமல் புலியைச் சுட்டுத் தீர்த்து விட்டார். தாசப்பாவின் உயிர் தப்பிற்று. ஆனால் தன் நாகலக்ஷ்மியின் கதியை அறிந்ததும், அவன், 'தான் தப்பியதைவிட இறந்திருப்பதே மேல்' என்று பிரலாபித்து அழுதான்.

துரை அவனைச் சமாதானம் செய்து வீட்டிற்கு அழைத்து வந்தார். நாகலக்ஷ்மியின் கிழிந்த சடலத்தையும் எடுத்துவரச் செய்து ஓர் இடத்தில் புதைத்து அதற்கு ஒரு சமாதியும் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். அந்தச்

சமாதியண்டை இரவு நேரங்களில் தாசப்பா புலம்பி அழுதுகொண் டிருக்கும் காட்சியை நாங்கள் தொடர்ந்து அநேக தடவை கண்டோம். யார் என்ன தேற்றியும் அவன் மனம் தேறவில்லை.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் துரையின் குழந்தைகளில் ஒன்றைப் பாம்பு கடித்துவிட்டது. தாசப்பாவின் வைத்தியம் இனிப் பலன் அளியாது என்று துரை, குழந்தைக்கு விஷம் ஏருதவாறு கட்டுகள் போட்டுப் பக்கத்து ஊர் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்ல எத்தனித்துக் கொண்டிருந்தார்.

விஷயம் அறிந்த தாசப்பா தன் வீட்டிலிருந்து விழுந்து அடித்து ஓடிவந்தான். தன் உடல், எச்சமயமும் விஷத்தைத் தாங்கும் அளவு பலம் பெற்றிருக்கிற தென்று கூறிக்கொண்டு எவர் தடுத்தும் கேளாது, குழந்தை விஷத்தை உறிஞ்சிவிட்டான். மறு நிமிஷம் அவன் மாக விழுந்தான்; குழந்தை பிழைத்துக் கொண்டது.

கடைசியாக, நாகலக்ஷ்மியைப் பிரிந்திருக்க முடியாமல் வேண்டு மென்றே தன் வாழ்வை முடித்துக் கொண்டு விட்டான் தாசப்பா.

அவன் நினைவை என்றும் நிலைநாட்டத் தீர்மானித்தார் துரை. சித்திரம் வரைவதில் தேர்ச்சி பெற்றிருந்த அவர், தாசப்பாவின் வாழ்க்கையை மாற்றக் காரணமாயிருந்த இக் காட்சியைப் படமாகத் தீட்டி இங்கே தொங்க விட்டார்.—

கிழவன் கதையை முடித்தான்.

விசித்திரமான அப் படத்தின் பின் மறைந்து நின்ற விசித்திரமான கதையைக் கேட்டதும் நான் ஆவலுடன் அந்தச் சொற் சித்திரத்தை இன்னொரு முறை பார்த்தேன். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து இறுதியில் அமர வாழ்வு எய்திய தாசப்பாவின் படத்தை இப் பொழுது காலையில் கண் விழித்ததும் பார்ப்பது என் தின சரி வழக்கங்களில் ஒன்றாகிவிட்டது.

✲

# பைத்தியக்காரன்?

ஸத்தியாவதி தேவி

அன்று காலை லாஹுரிலிருந்து புறப்படும் பஸ்களில் ஜனங்கள், கூட்டங் கூட்டமாய், ஸ்ரீநகருக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். ஸ்ரீநகரில் என்ன விசேஷமோ எனக்குத் தெரியாது. ஷிகார்பூரில் எனக்கு வேலை இருந்ததால், நானும் அதே மார்க்கம், பஸ்ஸில் போக வேண்டியதாயிற்று. கூட்டத்தோடு கூட்டமாய் நெருக்கித் தள்ளிக்கொண்டு, பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துவிட்டேன்.

பஸ் புறப்படச் சிறிது நேரமே இருந்தது. அப்போது, இரண்டு ஜெயில் சிப்பாய்கள், ஒரு கிழவனை இழுத்துக்கொண்டு வந்து பஸ்ஸில் ஏற்றினார்கள். "பஸ்ஸில் ஏறாதீர்கள்; இடமில்லை; இடமில்லை" என்று கத்திக்கொண்டிருந்த கண்டக்டர், ஜெயில் சிப்பாய்களைக் கண்டதும் பேசாமல் இருந்துவிட்டான்.

சிப்பாய்கள் வண்டியில் கொண்டுவந்து ஏற்றிய கைதிக்கு, கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டப்பட்டு, சங்கிலி கோக்கப்பட்டிருந்தது. கைதி அறுபது வயதுக்கு மேற்பட்ட கிழவன்; ஆனால் துடிதுடிப்பும், கை கால்களில் நல்ல வலுவும் உடையவனாய்க் காணப்பட்டான். கிழவனது தாடி நீண்டு வளர்ந்து நெஞ்சுவரை தொங்கிக்கொண்டிருந்தது; வாய் இருக்குமிடமே தெரியாதபடி, மீசை மயிர் உதடுகளை மூடிக்கொண்டிருந்தது; கண் புருவ மயிர், பாதிக் கண்களை மூடிய வண்ணம் தொங்கிக்கொண்டிருந்தது; கண்களில் பீளை நிறைந்து கன்னங்கள் குழி விழுந்து, உடல் வற்றிப்போய்க் காணப்பட்டான் அக் கிழவன்.

'அவனோ கிழவன்; ஓடிப்போக முடியாதவன்; அவனுக்குக் கை கால்களில் விலங்கு எதற்கு? சிப்பாய்கள்

இருவரும், இரு பக்கத்தில் விடாப் பிடியாய் அவனைப் பிடித்துக்கொண் டிருந்தது ஏன்?' — இப்படி நான் யோசித்துக்கொண் டிருக்கையில், கிழவன் ஏதோ பட பட வென்று பேசினன். பக்கத்திலிருந்த ஒரு சிப்பாய், 'பட்'டென்று அவன் தலையில் ஒரு தட்டுத் தட்டி, ஏதோ வைதான். கிழவன் வாய் மூடினன். அவர்கள் பேசியதும் ஏசியதும காஷ்மீர மொழி; எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் அந்தப் பாஷை புரியும். ஆனல் கிழவன் பேசியது கொச்சையாய் இருந்ததால் எனக்கு விளங்கவில்லை.

* * *

பஸ், கனவேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. கைதிக் கிழவன் தனக்குள் ஏதோ பேசிக்கொண்டும் சேஷ்டை செய்துகொண்டும் இருந்தான். அவனது குழிந்த கண்களிலிருந்து சுடர்விட்ட இரு விழிகள் ம
என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சுமார் முப்பது வயது
ஒரு ஸ்திரீயையும், அவளுடனிருந்த எட்டு வயதுப் பைய
யும் ஓயாமல் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தன. ஆனல், அந்தப் பெண், கிழவனது தோற்றத்தில் அருவருப்புற்றவளே போலும், மனத்துள் ஏதோ பயம் ஏற்பட்டவளே போலும் காணப்பட்டாள். பையன், கிழவனது கோலத்தைக் கண்டு பயந்து ஒடுங்கி, அம்மாவை அணைத்து உட்கார்ந்து கிடந்தான்.

பகல் மணி பன்னிரண்டு இருக்கும். பஸ், ஜம்மூன் நகருக்குரிய கடைசி எல்லையில், காஷ்மீர் ரோடும டில்லி ரோடும் சந்திக்கும் இடத்திலிருந்த ஒரு பெட்ரோல் 'பங்க்' கொட்டகை யருகில் போய் நின்றுவிட்டது. "பஸ் கொஞ்ச நேரம் இங்கே தங்கிச் செல்லும்" என்று டிரைவர் சொன்னன்.

கைதியின் நிலைமை எனக்கு மிகப் பரிதாபகரமாய் இருந்தது. கிழ வயதில் இவனுக்கு இந்தக் கதி நேரிட வேண்டுமா என்று இரங்கினேன். கிழவனைப்பற்றி ஏதேனும் தகவல் தெரிந்துகொள்ள வேண்டும் என்று என் மனம் விழைந்தது. நான், அந்தக் காவல் சிப்பாய்களில் ஒருவனுடன் துணிந்து பேச்சுக் கொடுத்தேன்.

"அஜி, சிப்பாய், இந்தக் கிழவனுக்கு உடம்பு சௌக்யமில்லையா?"

"ஆம், தேவி! ஆனால் சாகத்தான் மாட்டேனென்கிறான். சனியன், இவனை வைத்துப் பாதுகாப்பது போதும் போதுமென்றாய் விடுகிறது எங்களுக்கு."

"கொஞ்சம் சித்த சுவாதீனமும் இல்லைபோல் தெரிகிறது; வாஸ்தவமா?"

"சந்தேகமா! கொஞ்ச நாட்களாய் பைத்தியமே பிடித்துப் போய்விட்டது, இவனுக்கு."

* * *

பஸ் புறப்பட்டுவிட்டது; கரடு முரடான பாதையில் பஸ் ஓடும் இரைச்சலில் பேசமுடியவில்லை. ரோட்டின் இரு புறமும் இயற்கைக்காட்சிகள் நிறைந்த மலைப்பிரதேசம். பல இடங்களில் கோதுமை வயல்; சில இடங்களில் ஆப்பிள், ஆரஞ்சுத் தோட்டம்; மற்றும் சில இடங்களில் முட்செடிகள் அடர்ந்த காடு; வேறு சில இடம் ஒன்றும் விளையாப் பொட்டல் தரை. ஒரு பக்கம் நதியும் ஓடிக் கொண்டிருந்தது சலசலவென்று!

நதியில் ஜலம் ஓடுவதைக் கண்டதும் அந்தக் கைதிக் கிழவன், தன் கையை நதியை நோக்கி நீட்டி, "பானீ, பானீ" என்று கத்தினான்.

"சீ, சும்மாக் கிட! வண்டி ஒரு மணி நேரம் நின்று கிடந்தது. அப்போது தாகம் எடுக்கவில்லையாம், இவனுக்கு; இப்போ வண்டி ஓடும்போது தண்ணீராம், தண்ணீர்" என்று கிழவன் தலையில் வழக்கம்போல் ஒரு தட்டுத் தட்டினான் சிப்பாய்.

கிழவன் அடங்கவில்லை; "பானீ, பானீ" என்று ஓயாமல் கத்திப் பதறினான்.

பஸ்ஸில் இருந்தவர்கள், கிழவன்மீது இரக்கப்பட்டு, சிப்பாய்களின் முகத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்தனர். ஒரு சிப்பாய் ஜனங்களின் எண்ணத்தைத் தெரிந்து கொண்டு கிழவனை நோக்கி. "அரே, பாபா! கொஞ்சம்

பொறுத்திரு. வண்டி எங்கேயாவது நிற்கட்டும்; தண்ணீர் கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறினான்.

கிழவன், "பானீ, பானீ" என்று கத்துவதை நிறுத்தவில்லை.

என் பக்கத்திலிருந்த ஸ்திரீ, தன் கூஜாவைக் கையில் எடுத்து, சிப்பாய்களை நோக்கி, "இவருக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கலாமா, நான்?" என்று மிகப் பணிவோடு கேட்டாள்.

சிப்பாய்கள் இருவரும், அந்த மாதின் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"பரவாயில்லை, கொடு, அம்மா! கொடு" என்று நான் தைரிய மூட்டினேன் அவளுக்கு.

சிப்பாய்களும் தலையசைத்தனர்.

அம்மாது, கூஜாவிலிருந்து ஒரு 'பியாலா' தண்ணீரை ஊற்றி, கிழவனிடம் கொடுத்தாள்; கிழவன் 'லபக்' கென்று அப் பாத்திரத்தைப் பிடுங்கி, வாயில் வைத்துக் கடித்து மட மடவென்று ஒரே மூச்சில் எல்லாத் தண்ணீரையும் குடித்துவிட்டுப் பாத்திரத்தைக் கீழே போட்டுவிட்டான்.

அந்தப் பெண் அதற்காகக் கோபித்துக் கொள்ளவோ, முகம் கோணவோ இல்லை; "இன்னம் தண்ணீர் வேண்டுமா?" என்று கேட்டாள்.

கிழவன், "ரோட்டீ! ரோட்டீ" என்று கத்தலானான்.

சிப்பாய், அவன் தலையில் மீண்டும் ஒரு முறை தட்டி, "ரோட்டி இப்போது கிடைக்காது; சாயந்திரந்தான்; பேசாமல் ஒடுங்கிக் கிட; பாபம், பிரயாணிகளுக்குத் தொந்தரவு கொடுக்காதே" என்று அதட்டினான்.

கிழவன், ஒரு க்ஷணம் சும்மா இருந்துவிட்டு, மீண்டும், "ரோட்டி, ரோட்டி" என்று கத்தத் தொடங்கிவிட்டான்.

தண்ணீர் கொடுத்த மாது, அக் கிழவன் முகத்தை மீண்டும் இரக்கத்தோடு பார்த்தாள்.

மாதுடன் இருந்த பையன், "அம்மா! எனக்காக வைத்திருக்கிறாயே ரொட்டியும், மிட்டாயும். அதைக் கொடுத்துவிடு, அம்மா!" என்று அன்பு ததும்பும் பாவனையில் கூறினான்.

அம்மாது, ஒரு பொட்டணத்தை அவிழ்த்தாள்; இரண்டு ரொட்டிகளை எடுத்து, ஹல்வா போன்ற மிட்டாயை அதில் கொஞ்சம் வைத்துக் கிழவனிடம் கொடுத்தாள்; கிழவன் பரபரப்புடன் அதை வாங்கி, பெரிய பெரிய கவளமாய் முறித்து வாயில் திணித்து, சிரமத்துடன் விழுங்கிக்கொண்டிருந்தான். ரொட்டிகளைத் தின்றுவிட்டு, கையிலும் விரல்களிலும் ஒட்டிக் கொண்டிருந்த ஹல்வாவை நக்கிச் சுவைக்கத் தொடங்கினான் கிழவன்.

அந்த மாது இன்னொரு பொட்டணத்தை அவிழ்த்து; மாம்பழத்தை எடுத்துக் கிழவனிடம் கொடுத்தாள். ந்தப் பழத்தைப் பக்குவமாய்த் தின்னத் தெரியாமல் கிழவன், சின்ன பிள்ளையாய்க் கடித்துத் தின்றதால், பழ ரஸம் அவன் முகத்திலெல்லாம் பரவி, தாடி வழியாய் வழிந்து விழுந்து கொண்டிருந்தது.

இவனது சேஷ்டைகளைக் கண்டு சிப்பாயின் முகம் கடுகடுத்தது; அந்த மாதின் முகம் இரக்கக் குறியைக் காட்டியது; சிறுவனின் முகம் ஹாஸ்யத்தைப் பிரதி பலித்தது.

* * *

எனக்கோ, அந்தக் கிழக் கைதியின் வரலாற்றை இன்னம் சற்றுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆவல் உண்டாகியது.

நான் ஒரு சிப்பாயை நோக்கிக் கேட்கத் தொடங்கினேன்: "அஜி, சிப்பாய்! உங்கள் சிறையில் கைதிகளுக்கு என்ன உணவு கொடுப்பீர்கள்?"

"இரண்டு முரட்டு ரொட்டியும் கொஞ்சம் மசித்த பருப்புந்தான் கைதிகளுக்கு ஒருவேளை உணவு. இரவில் ரொட்டிச் சட்டினியோடு ஒரு துண்டு இறைச்சியும்

கிடைத்தாலும் கிடைக்கும்; ஆனல் இந்தக் கிழவன் இறைச்சித் துண்டைத் தின்னமாட்டான்: தூக்கி எறிந்து விடுவான்.''

"ஓஹோ; அதனல்தான் மிருதுவான ரொட்டியையும் ஹல்வாவையும் தின்றுவிட்டு, விரல்களை நக்கினனே? சரி, மாம்பழம் கிடைக்குமோ சிறையில் கைதிகளுக்கு?"

"இந்தக் கிழவன் சிறைக்கு வந்து ஏழு வருஷத்திற்கு மேலாகிறது; மாம்பழம் என்ன, ஒரு வாழைப்பழம் கூடத் தின்றிருக்க மாட்டான்."

"ஐயோ, பாவம்! சிறை வாழ்க்கை இப்படிப் பட்டதா?"

"இவன் கிழவனென்பதால் இதாவது கிடைக்கிறது; சாதாரணக் கைதிகளுக்கு இன்னம் கடுமையான காவல் இருக்கும், அம்மா!"

"சரி, இக் கிழப் பிராயத்திலே இவன் சிறை அடைக்கப்பட வேண்டிய காரணமென்ன? என்ன தப்பு செய்தானே?"

"எங்களுக்கு அந்த விபரமெல்லாம் தெரியாதம்மா! ஆனல் இவன் இறந்து போன தன் மனைவியை நினைத்து அடிக்கடி வருந்தி அழுவான்; புலம்புவான்; கதறுவான்; தன் பாபங்களை மன்னிக்கும்படி அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வான். இதற்குமேல் எங்களுக்குத் தெரியாது!"

"இந்தக் கிழவனையே கேட்டால் ஒருகால் சொல்லுவானே?"

"அவன்தான் பாகல் (பைத்தியக்காரன்) ஆயிற்றே; ஏதாவது உளறுவான்."

கிழவன் திடுக்கிட்டவன்போல் எங்கள் பக்கம் நோக்கி 'ஹி-ஹி-ஹி' என்று சிரித்தான்.

"நானு பாகல்! எனக்கா பைத்தியம்? உலகத்தில் யாருக்குத்தான் பைத்தியமில்லை...செத்துப்போன என் மனைவிக்குப் பைத்தியம். அந்தப் பைத்தியக் காரியை நான் கொன்று போட்டேன். என் மகள், என் பேரன் எல்லோரும் பைத்தியங்கள்தான்...நான் பைத்தியக்காரன்

என்று என் மகளும் என்னைச் சிறைக்கு அனுப்பி ஹ, ஹி, ஹி-நான் பைத்தியக்காரன்; பாகல்; பாகல்; ஹி, ஹி, ஹி."

இம்மட்டும் அந்தக் கிழவன் தானே கூறிவிட்டுத் தலை கவிழ்ந்தான்; நான் அவனைக் கூர்ந்து நோக்கினேன். அவனது உட்குழிந்த கண்களிலிருந்து நீர் அருவிபோல் பெருக்கெடுத்துக் கன்னங்கள் வழியே வழிந்து கொண்டிருந்தது.

என் பக்கத்திலிருந்த பெண், "பாபா" என்று கூறினாள். சட்டென்று நான் அவள் பக்கம் திரும்பினேன். அவள் தன் பார்வையை அந்தக் கிழவனிடமிருந்து சட்டென்று திருப்பித் தன் மைந்தனை மார்போடு அணைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டுத் தேம்பலானாள்.

எனக்கொன்றும் புரியவில்லை. "பாபா" என்று அவள் யாரை அழைத்தாள்? அந்தப் பைத்தியக்காரக் கிழவனையா? அல்லது தன்னுடைய குமாரனையா? ஒன்றையும் நான் தெளிந்து அறிய முடியாமல் கிழவன், மாது, பையன், மூவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துப் பிரமிப்பு அடைந்தேன்.

* * *

பஸ் நின்றது. "ஷிகார்பூர் டிக்கட்டெல்லாம் இறங்கலாம்" என்று பஸ் கண்டக்டர் கூவினான்.

சிப்பாய்கள் பைத்தியக்காரக் கிழவனை அவ்விடத்தில் இறக்கி அழைத்துக்கொண்டு எங்கோ போய்விட்டனர். நானும் அங்கேயே இறங்கி வேறு மார்க்கமாய் நடந்தேன்.

# வெறுக்கப்பட்டவர்கள்

'யசப்பால்'

லக்ஷ்மணபுரியிலுள்ள 'மீனுத்தௌலா' பார்க்கில் அநேகமாகச் சதா சர்வ காலமும் ஏதேனும் திருவிழாக்களோ, களியாட்டங்களோ நடந்துகொண்டேயிருக்கும். ஊசி குத்தக்கூட இடயில்லாமல் கூடியிருக்கும் கூட்டத்தில் இடியும், மிதியும் படாமல் அங்கு நடக்கும் கேளிக்கைகளைப் பார்க்க வேண்டுமானால், வீதி ஓரமாக இருக்கும் இரண்டு அடுக்குள்ள வீட்டுப் 'பால்கனி'யில் நின்று கொள்வதுதான் நல்லது. இதற்காகத்தான் நான் அடு ஸ்ரீ சுக்லாவின் வீட்டிற்குப் போவது வழக்கம். மா காலத்தில் இரவுப் போஜனத்தை முடித்த பின்பு, நான் சுக்லாவின் குழந்தைகளுக்கு ஏதேனும் ஆரஞ்சுப் பெப்பாமிண்டு போன்ற தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு, வெற்றிலையை மென்றபடியே, பிரம்பைச் சுழற்றிக் கொண்டு அவர் வீட்டிற்குப் போவது வழக்கம். அவர் வீட்டின் 'பால்கனி'யில் நாங்கள் உட்காருவோம்.

ஸ்ரீ சுக்லா எப்பொழுதும் குதூகலமாகவே இருப்பார்; அன்னியோன்யமாகப் பழகும் இனிய சுபாவம் படைத்தவர். அவர் மனைவியும் அப்படித்தான். பகல் முழுதும் பல அலுவல்களிலே ஈடுபட்டு, மனமும் உடலும் பல வேறு தொந்தரவுகளால் சோர்ந்து போய்க் கிடக்கும்பொழுது, மாலை வேலைகளில், இத்தகைய படித்த, பண்புடைய மனிதர்களோடு அளவளாவுதல் மனத்திற்குப் பேரின்பத்தைத் தந்தது. அதில் ஒரு தனி இன்பத்தை நான் நுகர்ந்தேன். நான் மாடியில் காலடி வைக்க வேண்டியதுதான் தாமதம். எனது காலடிச் சத்தத்தைக் கேட்டு, ஸ்ரீ சுக்லாவின் குழந்தைகளான லல்லூவும், ஸவிதாவும் என்னை யாரென்று நொடிப் பொழுதில் தெரிந்து கொண்டு என்னிடம் ஓடி வருவார்கள்;

"ஸ்ரீ சுக்லா" என்று நான் கூப்பிட்டு வாயை மூடு வதற்குள் என் சட்டைப் பையிலுள்ள பொருள்களை எல்லாம் நொடிப் பொழுதில் காலிசெய்து விடுவார்கள்.

ஸ்ரீமதி சுக்லா வராந்தாவுக்குப் பக்கத்திலுள்ள ஓர் அறையிலிருந்து எட்டிப்பார்த்து, "நீங்கள் ஏன் உள்ளே வரக்கூடாது? முன்பின் பழக்கமில்லாத புது மனிதரைப் போல் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்களே!" என்று பதில் சொன்னாள்.

பார்க்கில் நூறு விளக்குகள் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அன்று விடுமுறைத் தினமாதலால், பிரம்மாண்டமான ஜனத்திரள் ஒன்று அங்கே கூடியிருந்தது. பேச்சை ஆரம்பிப்பதற்காக, "அடேயப்பா, எவ்வளவு பெரிய கூட்டம்! ஜலானுக்கும், ...பூருக்கும் இடையே இன்று வாணவேடிக்கைப் ...ட்டிப் பந்தயம் நடக்கப்போகிறதா, என்ன?" ...ன்று சிரித்தவண்ணம் கேட்டேன் நான்.

மரியாதைக்காகச் சிரித்துக்கொண்டு, ஸ்ரீமதி சுக்லா பதில் சொன்னாள்:

"அப்படித்தான் ஏதோ நடக்கப் போகிறதுபோல் இருக்கிறது! ஜனங்களிடமிருந்து பணத்தைப் பறிக்க ஏதேனும் சாக்கு வேண்டாமா?"

வழக்கத்திற்கு நேர்மாறாக அன்று ஸ்ரீ சுக்லா மௌனமாகவே உட்கார்ந்திருந்தார்; அவர் 'கான்வாஸ் ஈஸிசேரி'ல் கால்களை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந் தார். தமது வலக் கையால் மோவாய்க் கட்டையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, நாற்காலியில் தலையைச் சாய்த்துக் கூட்டத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். ஏராளமான விளக்குகளின் அபூர்வ மான ஒளியில் லயித்துப் போய், பயித்தியம் பிடித்தவர் களைப் போல் தோன்றிய அந்தக் கூட்டத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார் அவர். அவர் என் பக்கம் பார்க்காமல் வேறுபுறம் பார்த்துக் கொண்டிருந்தார் என்றாலும், நான் உட்காருவதற்காகக் காத்துக்கொண் டிருந்தார்.

நான் உட்கார்ந்தவுடனே அவர், "பிரபஞ்சத்தில் என்னதான் நடக்கப் போகிறதோ தெரியாது..." என்று செருப்புகளை மெதுவாகக் கழற்றிக் கொண்டு ஆச்சரியத்தோடு கூறினர். அவருடைய பீடிகைக்குப் பதில் சொல்வது போல், ஸ்ரீமதி சுக்லாவின் முகத்திலிருந்து என்னை வரவேற்பதற்காகத் தோன்றிய புன் முறுவல் மறைந்தது. ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு அவள் தன் முகத்தைத் திருப்பி, "என்னதான் நடக்கப் போகிறது என்பது கடவுளுக்குத்தான் தெரியும்" என்ருள்.

ஸ்ரீமதி சுக்லாவின் முகத்தில் தோன்றிய சிரத்தையிலிருந்து அவள் இந்தப் பீடிகை எதற்காக என்னும் விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவல் உடையவளாக இருக்கிருள் என்பதை யறிந்ததும் ஸ்ரீ சுக்லா மேலும் பேச ஆரம்பித்தார் :

"இந்தக் காலத்தில் என்ன வேண்டுமானலும் ... கும், தெரியுமா! அந்த ஊமை நவாபின் வேலி உங்களுக்குத் தெரியுமல்லவா? அதற்குப் பின்னல், ஊருக்குப் பொதுவான கக்கூசு இருக்கிறது. அந்தப் பகுதியில் சில இடிந்த மண் குடிசைகளும் இருக்கின்றன. நேற்றிரவு, அங்கு ஒரு கொலை நடந்தது. கொலை செய்தவன்...... ஐந்து வயசுச் சிறு குழந்தை!"

ஸ்ரீ சுக்லா நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். இந்த அபூர்வமான செய்தியை என்னிடம் தெரிவிக்க முயற்சி செய்த பொழுது, அவர் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. "நீங்கள் இந்தச் செய்தியை நம்ப முடியுமா?" என்று என்னை உற்று நோக்கியவண்ணம் கேட்டார்.

"ஐந்து வயசுக் குழந்தை எப்படிக் கொலை செய்ய முடியும்?......" என்று எனது ஆச்சரியத்தைக் காண்பிக்கும பொருட்டு நான் கேட்டேன். "ஏதாவது திடீரென்று விபத்து நேர்ந்திருக்க வேண்டும். ஒருகால் கூரையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள்...... பட்டம் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் பொழுது..." என்றேன். ஆதரவு தேடி நான் ஸ்ரீமதி சுக்லாவைத்

திரும்பிப் பார்த்தேன். அவள் முகத்தில் துக்கத்தின் நிழல் ஆழ்ந்து படர்ந்திருந்தது; ஒரு கையால் கன்னத்தைத் தாங்கிக்கொண்டு ஒரு பெரு மூச்சு விட்டாள். ஆனால் ஒரு வார்த்தைகூட அவள் வாயிலிருந்து வெளிவரவில்லை.

உணர்ச்சியால் தூண்டப்பட்ட ஸ்ரீ சுக்லா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"என்ன சொல்கிறீர்கள்?" மேலே தாம் சொல்லுவதை விளக்கிக் காட்டுவதே போலத் தம் கைகளை இறுக்கிப் பிடித்துப் பிசைந்துகொண்டு, "கொலை! ஐந்து வயசுக் குழந்தை...கழுத்தை நெறிந்து......கொலை செய்தது...." என்று தெரிவித்தார். ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன. "இது எப்படிச் சாத்தியமாகும்?" என்று கேட்டேன்.

"அந்தச் சுவருக்கு அருகாமையிலுள்ள குடிசையில் பட்டை தூக்கிப் பிழைக்கிறவன் ஒருவன் இருக்கிறான். அவன் அஹீர் ஜாதியைச் சேர்ந்தவன். ஜ்வாலா என்று பெயர். அவனுக்கு ஐந்து வயசு மகனும், மூன்று வயசு மகளும் இருக்கிறார்கள். ஆனால் அவனால் எவ்வளவுதான் சம்பாதிக்க முடியும்? சில அணுக்கள் தானே தினசரி கிடைக்கும். சில சமயங்களில், கொஞ்சம் அதிகமாகவும், சில சமயங்களில் குறைவாகவும் கிடைக்கும். ஏதோ ஒரு மைல் தூரத்தில் உள்ள அமினுபாத்திலிருந்து, பாத்தேகஞ்சிற்கு ஒரு மூட்டையை உங்களுக்காகத் தூக்கிக் கொண்டு வருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு கொடுப்பீர்கள்? சில பைசாக்கள் தானே அல்லவா? அவனுடைய மனைவி பாத்தேகஞ்சிற்குப் போய்ப் பருப்பு வகையறுக்களை அரைத்துக் கொடுப்பது வழக்கம். அவளும் ஒரு அணா, ரண்டணா அல்லது சிறிது தானியம் சம்பாதிப்பாள். எப்படியோ இந்த இரண்டு குழந்தைகளையும் பராமரித்து வந்தார்கள். இப்போது காலம் எப்படி மாறியிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு ரூபாய்க்குப் பன்னிரண்டு சேர் விற்ற தானியம் இப்போது இரண்டரை, மூன்று சேர்தான் கிடைக்கிறது. அதுவுங்கூடப் படுமோசமான தானியம். எப்படியோ அவர்கள் வாழ்க்கையை நடத்தி

வந்தார்கள். கடந்த சனிக்கிழமை யன்று அந்த ஸ்திரீ மற்ெருரு குழந்தையைப் பிரசவித்தாள்.

" அஹீரின் வருமானத்தையே அவர்கள் அனைவரும் அண்டிப் பிழைத்து வந்தார்கள் - வாழவில்லை, உயிரோடிருந்தார்கள் ; அவ்வளவுதான் - உமியையும், பிறர் உபயோகமில்லை யென்று கழித்த பதார்த்தங்களையும் உண்டு, அரை வயிற்றைக் கழுவினார்கள். சிலசமயங்களில் குழந்தைகளுக்கு மாத்திரம் உணவு கொடுத்து, பெற்றோர்கள் பட்டினி கிடப்பார்கள். ஆனால் இப்போது புதிய குழந்தையை எப்படிப் போஷிப்பது? குழந்தைக்குக் கொடுக்கத் தாயிடம் தாய்ப் பாலை இல்லை. அவள் தினசரி எலும்பும் தோலுமாக மாறிக் கொண்டே யிருந்தாள். வெறும் ஜலத்தைப் பாலாக மாற்றவிட முடியுமா? பசுவும்கூட, புல்லும் வைக்கோலும் போட்டால்தான் பால் கொடுக்கிறது."

ஒரு பசுவையும் ஒரு தாயையும் ஒப்பிட்டுப் பேசும்போது, என் கண்கள் ஸ்ரீமதி சுக்லாவை நோக்கின. அவள் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தாள். மனவேதனையைக் கொடுக்கும் இந்தப் பேச்சைக் கேட்டவுடன் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளைப் பொருட்படுத்தாமல் ஸ்ரீ சுக்லா மேலும் பேசினார் :

" இன்றைக்கு என்ன நடந்தது, தெரியுமா? தகப்பன் காலையில் ஸாப்ஸி மண்டிக்கு ஒரு கூடையுடன் சென்றான். தாய் தன்னிடமிருந்த மாவை எல்லாம்-கொஞ்சந்தான்-ஒரு லோட்டாவில் போட்டுக் கரைத்து, வயசு முதிர்ந்த குழந்தைகள் இருவருக்கும் அதைக் கொடுத்தாள். அவர்கள் இன்னும் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் தாய் அவர்களைத் திட்டி, சிறிது மாவைத் தனியாக எடுத்து வைத்துக்கொண்டாள். அவளிடம் தாய்ப்பாலே இல்லை. ஆகவே அந்தக் கஞ்சியிலே ஒரு துணிக் கந்தலை நனைத்து அந்தச் சின்னஞ் சிறு குழந்தை வாயில் அதைச் சொட்டி ஊட்டினாள்.

" தாய்க்கு உடல் நலம் சரியாக இல்லை. கக்கூசுக்குச் சென்றாள். அவள் திரும்பி வந்தபொழுது, அவள் அலறி

விட்டாள். அந்தச் சிறு பையன் குழந்தையின் கழுத்தை நெறித்து விட்டான். அது பிணமாகக் கிடந்தது. தாயோ, தன் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு அலறி அழுதாள்.

"ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. குழந்தைகளை நயமாகவும், மிரட்டியும் என்ன நடந்தது என்று கேட்டார்கள். பெண் குழந்தை, 'அண்ணாதான் பாப்பாவைக் கொன்றான்' என்றது. "பையனுக்குத் தின் பண்டங்கள் கொடுப்பதாக ஆசை வார்த்தை கூறி உற்சாகப்படுத்தினார்கள். அவன் என்ன சொன்னான் தெரியுமா? 'தாய் எங்களுக்கு அந்தப் பால் தண்ணியைக் கொடுப்பதே இல்லை. பாப்பாவுக்கே கொடுக்கிறாள். நாங்கள் ரொம்பப் பசியாக இருந்தோம்' என்று சொன்னான்.... இப்பொழுது தெரிகிறதா? என்ன உலகம் இது?......"

வெறுப்புத் தட்டிய குரலுடன் ஸ்ரீ சுக்லா சொன்னார். "அவர்களுடைய குழந்தைகளுக்கு இந்தச் சிறு பிராயத்திலேயே இத்தகைய திருட்டு மனோபாவம் வந்து விடுகிறது. ஐந்து வயசுக் குழந்தைக்குக்கூட, தன்னுடைய பங்காளி ஓர் எதிரி என்ற உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. நம்ம ஸவிதாவுக்குக் கார் காலத்தில தான் ஐந்து வயசு நிறைந்தது; இப்பொழுது ஆறாவது வயசு நடக்கிறது. அவளுடைய தட்டிலிருந்து உணவைத் திருடும் நாயை அவள் கட்டிக் கொஞ்சுகிறாள்."

நான் ஸ்ரீமதி சுக்லாவையே பார்த்துக்கொண்டிருந்தேன். என் பார்வையைத் தம்மிடம் ஆகர்ஷிப்பதற்காக, அவர் மேலும் உரக்கப் பேசத் துவங்கினார்.

"நீங்கள் என்ன சொல்ல முடியும்? இவ்வளவு தூரம் கேடு நிறைந்து நிற்கும் ஒரு தேசத்திலிருந்து பஞ்சம், பிளேக், பூகம்பம் முதலியவைகளைத் தவிர வேறு எதைத் தான் எதிர்பார்க்க முடியும்? அதனால் தான் நம் தேசத்தில் வரட்சி கோர தாண்டவமாடுகிறது......பால் குடிக்கும் குழந்தைகள் மனத்தில் கூட இத்தகைய பகைமையும் பலாத்காரமும் குடிகொண்டிருக்கின்றன. இந்தப் பாபச் செயல்களுக்காக நாம்தான் கஷ்டப்படுகிறோம்."

என்னை நோக்கி மேலும் முன் சாய்ந்து, "சிறிது சிந்தித்துப் பாருங்கள்! இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு இந்தக் குழந்தைகளின் கதி என்னவாகும் என்பதை?" என்று சொன்னார்.

"பசி......" என்று நான் சொல்ல ஆரம்பித்தேன். அதற்குள் ஸ்ரீ சுக்லா சற்றே உரத்த குரலில் இடை மறித்துப் பேசினார்.

"இத்தகைய செயல்களின் விளைவாகப் பசியைத் தவிர வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும்? இத்தகைய தீய காரியங்களுக்கு ஓர் அழிவைத் தேடுவதுதான் ஏற்ற முடிவு. அதற்குக் குறைந்த எதுவும் பலன் அளிக்காது. அவர்களை அறவே அழித்து விட வேண்டும். அது கூடப் போதாது......"

தர்க்கம் செய்ய என் மனம் தயாராக இல்லை.

"...பிறந்த நாள் முதல் தீய காரியங்களைச் செய்யப் படி நிர்பந்திக்கப்படும் இந்த வெறுக்கப்பட்டவர்கள் இந்தத் துன்பக் கடலிலிருந்து எப்பொழுதாவது விடுதலையடைவார்களா?" என்று நான் சிந்தனை செய்ய முயன்று கொண்டிருந்தேன்.



# பத்தாவது கிரகம்

பி. வி. சுப்பிரமணியன்

சில நாட்களுக்கு முன்பு ஸ்ரீ பிரணதார்த்திஹரன் அவசர அவசரமாகப் பத்து மணிக்கு ஆபீஸுக்குப் புறப்பட்ட போதே, அன்றைக்கு ஏதோ ஓர் அதிசயம் நடக்கப்போகிறது என்று நிச்சயமாயிற்று. பிரணதார்த்தி அவசரமாகப் புறப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. என்றைக்கும், எதிலும் அவருக்கு ஒரே தலைபோகிற அவசரந்தான். அதனு நண்பர்கள் அவருக்குத் 'தத்துக்கிளிப் பிரண ஃதி' என்று நாமகரணம் செய்திருந்தனர். சாப்பிட்ட ம சாப்பிடாததுமாகச் சட்டைகளைத் திருப்பி மாட்டிக் கொண்டு, தலைப்பாகையும் கையுமாக அவர் ஆபீஸுக்கு ஓடுவதைப் பார்த்த நண்பர்கள் அவருக்குத் தத்துக்கிளியின் பெயரைச் சூட்டி யிருந்ததில் அதிசயம் இல்லை. ஆனல் அதில் விசேஷம் என்னவென்ருல், அவர் அன்று பத்து மணிக்குள் ஆபீஸுக்குப் புறப்பட்டதுதான்.

ஒவ்வொருநாளும் பதிெருரு மணிக்குக் குறைந்து அவர் ஆபீஸுக்கு வந்தது இல்லை. அவர் அங்கு வந்து சேர்ந்ததும் ஆபீஸ் மானேஜருக்கும் அவருக்கும் ஒவ்வொரு நாளும் ரசமான சம்பாஷணை ஆரம்பமாகும். "என்ன, பிரணதார்த்தி! பதிேனாரு மணி ஆகிறதே?" என்று மானேஜர் ஆரம்பிப்பது வழக்கம்.

"ஆமாம், உடம்பு சரியாக இல்லை. அதனுல்தான் சற்று நேரமாகிவிட்டது" என்று பிரணதார்த்தி பதில் அளிப்பார்.

"உடம்புக்கு என்ன?"

"ராத்திரி வேளைகளில் தூக்கமே வரவில்லை. சில நாட்களில் தூங்குவதற்கு ராத்திரி மூன்று அல்லது நாலு மணிகூட ஆகிறது."

"அது எப்படித் தூக்கம் வரும், பிரணதார்த்தி? காலை பதினொரு மணியிலிருந்து சாயங்காலம் ஐந்து மணி வரையில் ஆபீஸில் தூங்கிவிட்டு, அப்புறம் போய் வீட்டி லும் தூங்கவேண்டுமென்றால் சாத்தியமாகிற காரியமா அது? ரொம்பவும் அது சிரமம்தான்."

ஒவ்வொரு நாளும் பிரணதார்த்திஹரன் ஆபீஸ் மானேஜரிடம் மேற்கூறியபடி கேலிக்கு உள்ளாக நேரிட் டிருந்தது. அவ்வளவு வேடிக்கையும் அன்றைக்கு இராது என்று எண்ணிக்கொண்டு, பிரணதார்த்தி பஸ்ஸில் ஏறினார். பஸ் சிறிது தூரமே போயிருக்கும். அதன்மேல் 'டப்' பென்று ஒரு கல் வந்து விழுந்தது. அடுத்த நிமிஷம், அது என்னவென்று பார்ப்பதற்குள் தடதடவென்று ஏழெட் டுக் கற்களும், மண்ணாங்கட்டிகளும் வந்து விழுந்தன.

முதலில் பிரணதார்த்தி தலையை உள்ளே இழு கொண்டார். பிறகு பஸ்ஸுக்குள்ளும் கற்கள் வந்து ஆரம்பித்தவுடன், ஸீட்டுகளுக்கு அடியில் நகர்ந்து போ பதுங்கிக்கொண்டார். ஆனால் அங்கேயும் சரியாகப் பதுங்க முடியவில்லை. அவருக்கு முன்பே அங்கு ஒருவர் ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டு, பிரணதார்த்திக்குத் தூக்கி வாரிப்போட்டது. மனத்தைச் சற்றுத் திடப் படுத் திக்கொண்டு, "யார் அது?" என்று கேட்டார்.

அங்கே பதுங்கி யிருந்தவர் அதற்குப் பதில் அளிக்க வில்லை. பதிலாக, "கல் வந்து விழுவது நின்று போயிற்றா, அல்லது அது இன்னும் வந்து விழுந்துகொண்டுதான் இருக்கிறதா?" என்று கேட்டார்.

அதற்குப் பிரணதார்த்தியும் பதில் சொல்லவில்லை. 'ஐயோ, ராமா. தாங்களும் அதற்குப் பயந்துதானா இங்கே பதுங்கி இருக்கிறீர்கள்!' என்று எண்ணிக் கொண்டே, "என்ன இது? சமீபத்தில் பைத்தியக்காரக் கும்பல் ஏதாவது திரிகிறதா?" என்று ஒரு போடு போட்டார்.

அதெல்லாம் ஒன்றுமில்லை என்பதாக அவருடைய பாதாள ஜோதி நண்பர் தெரிவித்தார். "நகரத்தில் பஸ் ஸ்டிரைக் ஆரம்பித்திருக்கிறது உங்களுக்குத் தெரியாதா?

அடாடா, நேற்று மூன்று ஆட்களுக்குத் தலையில் காயம். ஒருவருக்கு மூக்கில் அடி. இந்த நாட்களில் வெளியில் புறப்பட்டால், உயிரையே நம்ப முடியவில்லை, சார்'' என்று அவர் பிரலாபித்தார்.

"ஆமாம். ஸ்டிரைக் நடக்கிறது என்று கேள்விப் பட்டேன். ஸ்டிரைக்கர்கள் செய்கிறது ரொம்பவும் அநியாயம். பிரயாணிகளுக்குக் காயம் படும்படியாக அவர்கள் அடிக்கலாமா?''

அப்படிப் பிரணதார்த்திஹரன் சொல்லும்போது 'டக்' கென்று மற்றொரு கல் அவருக்கு வெகு சமீபத்தில் வந்து விழுந்தது. உடனே பிரணதார்த்திக்குச் சப்த நாடியும் ஒடுங்கி[illegible]து போல் இருந்தது.

அதைக் கண்டதும் நண்பர் ஆரம்பித்துவிட்டார்: வீசுவதைப்போய் ஒரு பெரிய விஷயமாகப் பிரமா . படுத்துகிறீர்கள்! ஸ்டிரைக் ஆரம்பித்ததும், பஸ் [illegible]டுகிறவர்கள் வேலைக்கு வருவதில்லை அல்லவா? அவர்களுக்குப் பதிலாகச் சில விபீஷணர்களை முதலாளிகள் புதிதாக நியமிக்கிறார்கள். அவர்கள் பஸ் ஓட்டிப் பழக்கம் இல்லாதவர்கள். சிலர் கற்றுக்குட்டிகளாகவும் இருக்கலாம். போலீஸ்க்காரன் எந்தப் பக்கம் கை காட்டுகிறான் என்பது கூட அவர்களுக்குத் தெரிவதில்லை. நேற்று ஒரு டிரைவர் என்ன செய்தான் தெரியுமா? 'நிறுத்து, நிறுத்து' என்று போலீஸ்க்காரன் கை காட்டும்போதே பஸ்ஸை நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு வந்துவிட்டான். எதிர்ப்புறத்திலிருந்து மற்றொரு மோட்டார் வந்துவிட்டது. அவை இரண்டும் மோதிக்கொள்ளப் போகும் சமயத்தில், நல்ல வேளையாக எதிரிலிருந்து வந்த மோட்டார்க்காரன் சட்டென்று ஒடித்துத் திருப்பிவிட்டான். எங்களுடைய உயிரும் தப்பியது'' என்றார்.

அதைக் கேட்டதும், "ஐயையோ'' என்று பிரணதார்த்தி கத்திவிட்டார். அவர்கள் பெஞ்சுகளுக்கு அடியில் பதுங்கியபடியே பேசிக் கொண்டிருக்கையில், "யாரையா அது? வெளியில் வாரும்'' என்ற சத்தம் கேட்டது. பிரணதார்த்தியும், அவருடைய சிநேகிதரும் வெளியில் வந்தார்கள்.

எல்லா ஸீட்டுகளிலும் ஆட்கள் உட்கார்ந்திருந்தனர். அடியிலிருந்து கிளம்பியவர்களுக்குப் பஸ்ஸில் நிற்கவும் இடமில்லை. அதிலே இருபத்து மூன்று பேர்களே பிரயாணம் செய்யலாம் என்ற போர்டு மாட்டப்பட்டிருந்தது. பிரணதார்த்தியையும், அவருடைய பாதாள ஜோதி நண்பரையும் சேர்த்தால், இருபத்து நாலு பேர்கள் ஆகிவிட்டார்கள். பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லோரும் சத்தம் போட ஆரம்பித்து விட்டனர்; டிக்கட் கொடுப்பவனைப் பார்த்து, "இது என்ன பஸ்ஸா, புளி மூட்டையா? நிறுத்து, பஸ்ஸை நிறுத்து" என்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

டிரைவர் வண்டியை நிறுத்திவிட்டான். டிக்கட்டுகளைக் கிழித்துக் கொண்டிருந்தவன், "இருபத்து நாலு பேருக்கு இடமில்லை. இருபத்து மூன்று பேருக்கு [illegible] இடமிருக்கிறது. யாராவது ஒருவர் தயவு செய்து இ[illegible] விடுங்கள், சார்" என்றான்.

ஒருவரும் இறங்கவில்லை. யார் இறங்குவார்கள்? "நீயேதான் இறங்கி விடேன்" என்று டிக்கட் கொடுப்பவனைப் பார்த்து ஒரு பிரயாணி கூறினார்.

மேலும் கீழும் ஒருதரம் பார்த்துவிட்டு, "சரி" என்று அந்த ஆசாமி கீழே இறங்கிவிட்டான். அதற்குள் வேறு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. "என்ன, அப்பா, அது? நீ கண்டக்டர் அல்லவா? நீ இறங்கி விட்டால், பஸ்ஸில் டிக்கட் கொடுக்கிறது யார்?" என்று மற்றொருவர் கோபித்துக் கொண்டார்.

விபீஷண கண்டக்டருக்கும் அப்போதுதான் அது ஞாபகம் வந்தது. "ஓஹோ, நான் கண்டக்டரா? நல்ல வேளை அதை ஞாபகப் படுத்தினீர்களே! வேறு யாரேனும் ஒருவர் இறங்குங்கள், சார்" என்று உட்கார்ந்திருந்தவர்களை மீண்டும் அவன் அவசரப்படுத்தினான். அதைக் கேட்டதும் சிலருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்துவிட்டது.

அதனால் இரண்டு பேர் இறங்கியும் விட்டனர்.

"இரண்டு பேர் இறங்கிவிட்டார்களே, அப்பா, கண்டக்டர். ஒரு ஸீட்டுக் காலி என்று சொல்லு" என்று டிரைவர் சொல்லிக்கொடுத்தான்.

பஸ் புறப்பட்ட இடம் திருவல்லிக்கேணி. புறப்பட்ட இடத்திலிருந்து அது ஒன்றரை பர்லாங்கு தூரம் கூடப் போயிருக்காது. அங்கே இருவர் இறங்கியவுடன், கண்டக்டர், "திருவல்லிக்கேணி, திருவல்லிக்கேணி" என்று கத்தினான்.

"என்ன, கண்டக்டர்? திருவல்லிக்கேணியில் இருந்து கொண்டே திருவல்லிக்கேணி என்று கத்துகிறாயே. பஸ் பிராட்வேக்கு அல்லவா போகிறது" என்று ஒரு பிரயாணி ஞாபகப்படுத்தினார்.

"ஓ! மறந்துவிட்டேன், சார். நான் இந்த வேலைக்குப் ..." என்று கூறிவிட்டு, "பிராட்வே—ஒரு ஆள" ... கத்தினான் விபீஷண கண்டக்டர்.

திடீரென்று நாலைந்து கற்கள் வந்து பஸ்மீது விழுந்தன. "டிரைவர்! பஸ்ஸை ஓட்டு, ஓட்டு" என்று எல்லாப் பிரயாணிகளும் கூச்சலிட்டனர். டிரைவர் வண்டியை வேகமாக ஓட்ட ஆரம்பித்தான்.


பாதாள ஜோதி ஆசாமி பிரணதார்த்திஹரனைப் பார்த்து, "பார்த்தீர்களா, சார். எந்த நிமிஷத்திலும் நம்முடைய உயிருக்கு ஆபத்து வந்து விடலாம் என்பதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மனித சரீரம் நிலையற்றது. ஆகையால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நீங்கள் உயிரை இன்ஷ்யூர் செய்து கொள்ளுவது நல்லது" என்று போதனை செய்து முடித்தார்.

பிரணதார்த்திக்கு வந்த உயிர் போக ஆரம்பித்தது. "சுவாமி! தங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே. தாங்கள் யாரோ?" என்று கேட்டார் கொஞ்சம் யோசனையுடன்.

"அடியேன் தர்மராஜா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஏஜெண்டு. எங்களுடைய கம்பெனியில் நீங்கள் இன்ஷ்யூர் செய்தால் எவ்வளவோ நல்லது. சாவுக்குப் பயப்பட

வேண்டியதில்லை. ஸ்டிரைக் நடக்கும்போது பயமில்லாமல் பஸ்களில் பிரயாணம் செய்ய முடியும்'' என்று அவனுடைய நண்பர் பரிவுடன் கூறினர்.

பிரணதார்த்திஹரனுக்குத் தலை சுற்றிற்று. ''நீ தானா? வா, அப்பா. நீ ஒருவன்தான் பாக்கி. என் ஜாதகத்தில் ஒன்பது கிரகங்களும் வக்கரித்துக் கொண்டிருக்கின்றன என்று நினைத்தேன். நீ பத்தாவது கிரகமாக இருக்க வேண்டும். ஏனென்ருல், என்னைப் பிடித்து ஆட்டி வைக்க இந்தப் பஸ்ஸிலும் வந்து நீ ஏறிவிட்டாய் அல்லவா?'' என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்தார் பிரணதார்த்திஹரன்.



# களத்து மேட்டில்.....

ய. லக்ஷ்மிநாராயணன்

அந்திமயங்கும் நேரம். மஞ்சள் வெயில் எங்கும் படர்ந்து பொன் மெருகிட்டது. ஆங்காங்கே களத்து மேடுகளில் குவிக்கப்பட்டிருந்த நெற் பட்டறைகளும் அவைகளைச் சுற்றிலுமிருந்த வைக்கோற் போர்களும் சிறு சிறு குன்றுகளைப் போலக் காட்சி அளித்தன.

மந்தமான குளிர்ந்த காற்று வீசியது. இதுகாறும் ...ி வேர்வை நிலத்தில் சிந்த உழைத்த குடியானவர் ...ன களைப்பைத் தெளிவித்தது மந்த மாருதம்.

செல்லாயி இடுப்பிலே கூடையையும் முறத்தையும் சுமந்துகொண்டு கொஞ்சம் வேகமாகத்தான் நடந்தாள். அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டே நின்று நின்று இளைப்பாறி, திரும்பவும் வரப்புகளில் வேகமாய் நடந்தாள்.

அதோ தெரிகிறதே மேலைக் களத்து மேடு! அங்கே தான் அவள் போகவேண்டும்,

முன்னைவிட இப்போது நடையின் வேகம் தளர்ந்தது. 'அம்மாடி!' என்று அப்படியே வரப்பில் உட்கார்ந்து அவள் ஆச்வாஸப் படுத்திக்கொண்டாள். சாதாரணமாகவே வரப்பிலே ஏறி இறங்கி நடந்துபோவது ரொம்பச் சிரமம்தான். அதிலும் செல்லாயி பூரண கர்ப்பிணி. "அவுரு இன்னும் காணுமென்னு எதிர்பார்த்துக்கிட்டிருப்பாரு! உம், அதோ சூரியனும் மலைவாயிலே உளுந்துட்டான்!" என்று அவள் வாய்விட்டு முணுமுணுத்துக் கொண்டே எழுந்தாள். நெற்றியிலே அரும்பிய வேர்வையைப் புடைவைத் தலைப்பால் துடைத்து விட்டுக் கூடையை எடுத்து முன்போல் இடுப்பில் வைத்து நடந்தாள்.

'இன்னிக்கு ஒரு நாளைக்குத்தானே இந்தச் சிரமம்? நாளைக்குத்தான் நரிக்குடிக்குப் போறோமே!' என்று அவள் மனத்திலே நினைத்தபோது உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

'"மாசம் ஒன்பது ஆச்சே! இப்படி வச்சிருக்கலாமா, பொறந்த ஊட்டுக்கு அனுப்பாமே?"ன்னு, பொன்னுத்தா கேட்டபோது இவுரு என்ன சொன்னாரு தெரியுமா? "ஒரு நிமிசங்கூட அவளை உட்டுட்டு நான் இங்கேருக்க முடியாது. நாளைக்கு அறுப்பு முடிஞ்சதும் நானே அவ கூடப் போறேன்" னுட்டு வெக்கமில்லாமே சொல்றாரு!' என்று முதல் நாள் நடந்த சம்பவத்தை அவள் மீண்டும் நினைததபோது அவள் அடைந்த புன்னகை பூரிப்பாக மாறி அவளுக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது.

'இந்த ஆம்புள்ளைகளே இப்படித்தான்! ஊ பேசறது, என்ன செய்யறதுங்கற நிதானம் இல்லாதவங்க. பின்னே என்ன? காலேலே கஞ்சி கு கறபோது அவுரு இப்படிச் செய்யலாமா?

கருவ மரத்தடிலே குளுகுளுன்னு காத்தடிச்சிச்சு; நல்ல நெழல்; கஞ்சியைக் குடிச்சுக்கிட்டே பாடல்ல ஆரம்பிச்சுட்டாரு! பெரிய படையாச்சி, "எலே, என்னடா பாட்டெல்லாம் அமக்களப்படுது? செல்லாயி பாடச் சொன்னளா?" என்று கண்ணைச் சிமிட்டிக் கேட்ட போது எனக்கு வெக்கம் தாங்காமே உடம்பு குன்னிப் போச்சு!

'"இந்தா செல்லாயி, பெரிய பண்ணைகிட்டே நாங்க போன விசயம் என்ன ஆச்சு, தெரியுமா?" என்று அவர் கேட்டதுந்தான் எனக்கு அந்த ஞாபகம் வந்தது.

'"என்ன சொன்னாரு?"

'"சொல்றது என்ன? நாயமான கூலி கொடுக்கிறேன்னு ஒப்பந்தத்திலே எழுதிக் கொடுத்துட்டாரு. இதிலே ஒரு முக்கிய விசயம் என்ன தெரியுமா? நான் தான் நம்மூருக்கு இப்போ நாட்டாமைக்காரன். மத்தவங்கள்ளாம் இவன்தான் எங்க நாட்டாமைன்னு பெரிய

பண்ணை கிட்டே சொல்லிப்புட்டாங்க''ன்னு அவுரு சொன்னதும் எனக்கு எம்மாஞ் சந்தோஷமா யிருந்தது. இன்னைக்குக் கூலி நிறையக் கெடைக்கும் இந்தக் கூலிக் கணக்கை நேத்திக்குப் பார்த்திருபபாரு இவுரு!

'நேத்து ராவிலே என்ன சொன்னாரு தெரியுமா?

'"செல்லாயி, துகிலிப் பொடவைக் கொண்டான்னு கோமுட்டி ஐயாகிட்டே சொல்லிட்டேன். ஒரு சின்னத் தொட்டிலுக்குக் கூட......'' நான் சட்டுனு அவுரு வாயைப் பொத்திப்புட்டேன். இல்லாட்டி அவுரு வெக்கமில்லாமே நாளைக்குப் பொறக்கப் போற குழந்தைக்கு இப்பவே புடிச்சுத தொட்டிலும்......

'"இந்தா," நான் அதுக்கு என்ன பேரு வக்கப் போறேன் தெரியுமா'' ன்னாரு அவுரு நானும் விட்டேனா? கொல தெய்வத்துப் பேருதான் வக்கணும்மின்னேன்.

'"ஊஹூம்! செல்லப்பன்னுதான் நான் பேரு வப்பேன்!''னு அவுரு சொன்னதும் எனக்குச் சிரிப்புத் தாங்க முடியல்லே. பொண்ணுப் புறந்துட்டா என்ன பேருன்னு நான் வெக்கமில்லாமே வாயை விட்டுக் கேக்க முடியுமா?

'என்னமோ என் மனசுலே தோணறதைத் தெரிஞ்ச மாதிரி, "பொண்ணுப் பிறந்தா செல்லக் கண்ணுன்னு அழைப்பேன்''னதும நான் குப்புன்னு சிரிச்சுட்டேன். சடக்குன்னு பக்கத்திலே வந்து உட்கார்ந்துக்கிட்டு......

'அப்புறம் அவுரு பக்கத்திலே எண்டிய்மா உக்காந் துட்டோம்னு ஆயிடிச்சு!'

வரப்பிலிருந்து இறங்கி வயல் நடுவே உள்ள பாதை வழியாக நடந்தாள். மஞ்சள் வெயில் மறைந்து லேசான இருளும் வெளிச்சமும் கலந்து பரவியது. ஜில்லென்ற காற்று. வான வீதியிலே பறவைகள் 'காகூ' என்று கத்திக்கொண்டே பறந்தோடின. களத்துமேடு இன்னும் கொஞ்ச தூரந்தான் இருந்தது. இவ்வளவு நேரமாக அவள் மனத்திலே நிரம்பியிருந்த சிந்தனை அலை கள் மறைந்து, சின்னப்பனைப் பார்க்கத் துடித்தாள். தான்

இப்படி மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க ஓடி வருவதைப் பார்த்தால் அவன் கோபித்துக் கொள்ளுவான் என்று கொஞ்சம் நடையைத் தளர்த்தினாள்.

தொலைவிலே, களத்துமேட்டில் குடியானவர்கள் ஏதோ தடபுடலாகப் பேசும் சத்தம் அவள் காதில் விழுந்தது. என்னவோ ஏதோவென்று அவள் மனத்திலே ஒரு திகில்கூட உண்டாயிற்று. முகத்திலே தேங்கிய வேர்வையை நன்றாகத் துடைத்துக் கொண்டாள். தலைமயிரை விரலால் கோதிவிட்டாள். அவன் எதிரே செல்லும்போது களைப்பு அடைந்தவளாகத் தெரியக்கூடாதல்லவா?

குடியானவர்கள் பலர் அங்கே நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார்கள். ஏஜெண்டு முத்தையாப் பிள்ளை என்ன இரைந்து கத்தினார். கூட்டத்திலே ஒரு சல ச குடியானவர்களுக்குள்ளே ஏதோ சச்சரவு!

செல்லாயி நடையைத் துரிதப்படுத்தினாள். வயலில் குத்தாக நின்ற அடித்தாள்கள் காலிலே 'சுறுக்' கென்று தைத்ததைக்கூட அவள் லட்சியம் செய்யவில்லை.

"அண்ணமார்களே, வேணாம், நாம்ப நியாயத்துக்குக் கட்டுப் பட்டவங்க!" என்று இரைந்து கத்திய குரல் யாருடையதென்று அவளுக்குத் தெரிந்ததும் நடை ஓட்டமாகி விட்டது! 'எம் புருசன் ஏன் இப்படிக் கத்த வேணும்?' என்று மனம் துடித்தபடியே ஓடினாள்.

'சடேர்! சடேர்!' என்று நாலைந்து தடவை தொடர்ந்து கேட்ட சத்தம் புளிய மிலாறு அடிதான்! அவளுக்குத் தெரியாதா? 'எம் புருசனையா அடிக்கிறாவ?' இதை அவளால் நம்ப முடியவில்லை.

"வேணாம், யாரும் தடுக்கவேணாம். நாயத்துக்காக இந்த அடி இல்லே! உசிரே போனாலும் சரி!" என்று திரும்பவும் சின்னப்பன் இரைந்து கத்தியபோது அவன் வார்த்தைகள் தழுதழுத்தன. ஆயினும் அடிச் சத்தம் நிற்கவில்லை.

இருள் எங்கும் கவிந்து கொண்டது. களத்துமேட்டிலே செல்லாயி ஏறிவிட்டாள்.

"என்னடா ஒப்பந்தம்? நாயம் எல்லாம் பேசறே? நாங்க படி யளக்காட்டி வயறு காஞ்சுல்லா சாவணும் நீங்களாம்!" என்று ஏஜெண்டு முத்தையாப் பிள்ளை ஊளையிட்டார். குடியானவர்கள் நின்ற இடத்தைவிட்டு அசையாமல் பற்களைக் கடித்தனர்; கைகளைப் பிசைந்தனர். இரண்டோர் இளைஞர்கள் துடிதுடித்து ஏஜெண்டு அருகில் பாய்ந்தபோது, மீண்டும் சின்னப்பன் தடுத்தான். "கலெக்டரு, தாசில்தாரு எதுக்க நாம்ப தப்புத் தண்டாவா எதுவும் செய்யறதில்லேன்னு ஆணை சொல்லிருக்கோம். பண்ணை ஏசெண்டு பண்ற அநியாயத்துக்கு 'அவுங்க' நியாயமாத் தண்டிக்காட்டிப் பின்னாலே பாத்துக்கலாம்!" என்று கர்ஜித்தான் சின்னப்பன்.

ஏஜெண்டு முத்தையாப் பிள்ளை இரைக்க இரைக்க ஓடிவரும செல்லாயியை வெறிக்கப் பார்த்தார். சிரிப்புத் தாங்கவில்லை அவருக்கு!

"ஏ! குட்டி, உம் புருசன் படுறபாட்டைப் பார்த்தியா?" என்று ஆத்திரங் கலந்த தொனியில் கேட்டுவிட்டு புளிய மிலாறைத் திரும்பவும் வீசினார். ஆனால் ஒரு மின்வெட்டு நேரத்துக்குள் அவள் முன் வந்து நின்று தடுத்தாள். மிலாறு அடி அவள்மீது விழுந்ததும், "ஐயோ" என்று தீனக்குரலில் கூக்குரலிட்டுச் சுருண்டு விழுந்தாள்.

குடியானவர்களின் பொறுமை கட்டு மீறிவிட்டது! இதுகாறும் சின்னப்பனை அடித்த இறுமாப்புக்கார முத்தையாப் பிள்ளை, "ஐயையோ! ஐயோ!" என்று கதறித் துடித்துச் சுருண்டுவிழ எங்கோ ஒரு மூலையில் தூக்கி எறியப்பட்டார்.

செல்லாயியின் நெற்றியிலே வடிந்த ரத்தத்தைத் துடைத்தபடி, சின்னப்பன், "வேண்டாம், அண்ணமாரே, இப்படி நாம்ப நடந்துக்கிறதாலே நாயம் அடிபட்டுப் போயிடும். உண்மை மறைஞ்சு பொய்தான் பரவும்!" என்று சூசகமாகச் சொன்னதுகூடக் குடியானவர்களின்

கோபத்தை மட்டுப் படுத்தவில்லை. எவ்வளவு நேரந்தான் அவர்கள் பொறுமையைச் சோதிக்க முடியும்?

"நிறுத்துங்கள்!" என்று இரைந்து கத்திக்கொண்டே ஓடிவந்தான் சின்னப்பன். மற்றவர்கள் திகைத்து நின்றார்கள். ஏஜெண்டை அவர்களுடைய கைகளிலிருந்து விடுவித்து, "நாயம் கெடைக்கணும்னு பொறுமையும் உண்மையும் வேணும். இல்லாட்டி நம்ப சிரமம் விழலுக் கிரைச்ச நீர்தான். என்னை நாலு அடி அடிச்சாத்தான் என்ன? இல்லே, செல்லாயியைத்தான் அடிச்சுப்புட்ட தாலே—நாங்க செத்தாக்கூட சரி—அப்புறமாவது நாயம் நெலக்கணுமில்லே. பழிக்குப்பழி வாங்கிட்டாப்பலே நாயம் பொறந்திடுமா?" என்று படபடப்பாகக் கூறினான்.

சின்னப்பனுடைய இந்த ஆவேசமான வார்த்தைகள் அவர்களுடைய கோபத்தை மாற்றி விட்டன. கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னுக்கு நகர்ந்தார்கள்.

செல்லாயி மிகவும் சிரமத்துடன் எழுந்தாள். அவளைப் போல் கூலி வாங்க வந்திருந்த பொன்னாயி அவளைத் தூக்கி நிறுத்தினாள்.

"ஏண்டி, மவளே, இப்படி அந்தப் பாவிகிட்டே படணும்?" என்று புலம்பி அழுதுவிட்டாள். ஆனால் செல்லாயி கண்ணிலே ஒரு சொட்டுக்கூட நீர் வரவில்லை! தன் கணவனை உன்னிப்பாக பார்த்தாள். முரடனை அவனுக்கு இப்படிப்பட்ட பொறுமைக் குணம் எப்பொழுது எப்படி வந்தது என்பதுதான் அவளுக்கு ஆச்சரியமா யிருந்தது.

ஏஜெண்டு முத்தையா மீண்டும் நெஞ்சைக் கனைத்துத் தம்மை ஒருவாறு தைரியப்படுத்திக் கொண்டு, "சரி, அப்போ, ஒங்களுக்கு மாமூல் கூலி வேணும்னு நான் ஒங்க இஷ்டப்படி அளக்க முடியாது. ஆமாம்" என்று எப்படியோ துணிச்சலுடன் சொல்லிவிட்டார். சின்னப்பனுக்கும் மற்றவர்களுக்கும் மேற்கொண்டு என்ன செய்வது, அல்லது அவருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. தவிரவும் நிமிஷத்துக்கு நிமிஷம் குடியானவர்களின் கோபம் தேள் கொட்டிய வேகத்தில் அதிகரித்

தது! இனியும் அவர்களைப் பொறுமையுடன் இருக்கச் சொல்வது எப்படி?

சிரமத்துடன் கீழே பொன்னுயி மடியில் சாய்ந்திருந்த செல்லாயி மெதுவாக எழுந்தாள். கூடையைத் தள்ளி விட்டு, தன் கணவன் பக்கததில் போய் நின்முள்.

'தனக்கு விழ வேண்டிய அடியை அவள் தாங்கிக் கொண்டது உண்மை அன்பின் சின்னம் அல்லவா?' என்று அவன் நினைத்தான்.

'இவ்வளவு பேருக்கு எதிரில் ஒரு சுண்டைக்காய் மனுஷனிடம் அடி வாங்கியும் பொறுமையாக இருந்தாரே இவர்! பெரிய அதிசயம் இல்லையா இது?' என்று நினைத்தாள் அவள்.

'[illegible]ரென்று கூட்டத்திலே ஒருவன் கேட்டான், [illegible]ன, சின்னப்பா? அப்போ கூலி இல்லாமலேயா ஊட் [illegible]க்குப் போறது?'' என்று. அவன் சும்மாக் கேட்க வில்லை; கர்ஜித்தான். ''முடியாது! முடியாது!'' என்று எல்லாரும் ஆட்சேபித்தார்கள். 'தன்னையும் மீறி விட்டால்?' என்று பீதியடைந்தது சின்னப்பன் மனம்.

ஏஜெண்டு முத்தையா இடிஇடி யென்று சிரித்து விட்டு, ''அதான் தெரியுமே எனக்கு அப்பவே? இஷ்டம் இருந்தா வாங்கிக்கிட்டுப் போங்க. இல்லேன்னு...'' என்று சொல்லி முடித்தார்.

'' சரிதான், ஏசெண்டய்யா, நாள்பூரா உழைச்ச குடியானவன் வெறுங் கையோடல்ல ஊட்டுக்குப் போவான்!'' என்று துணிச்சலாகக் கேட்டுவிட்டுத் தன் கணவனை ஒரு தரம் உற்றுப் பார்த்தாள் செல்லாயி.

'' அப்படின்னு எனக்கு இஷ்டமில்லே '' என்று கொக்கரித்தான் ஏஜெண்டு.

''ரொம்ப சரி, நாயமான ஒப்பந்தப்படி நடக்கறது தான் எங்க இஷ்டம். நீங்க அளக்காட்டி நாங்களே அளந்து கூலியை எடுத்துக்கிட்டுப் பட்டறைக்குக் குறி போட்டுட்டுப் போயிக்கிறோம் '' என்று சொன்னதும் சின்னப்பன் திடுக்கிட்டு அவளை வியப்புடன் பார்த்தான்.

குடியானவர்களுக்கோ மகிழ்ச்சி எல்லை தாண்டியது. குவித்திருந்த நெல்லை அளக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"ஐயையோ! கொள்ளை, கொள்ளை!" என்று அலறிக் கொண்டே பெரிய பண்ணையார் வீட்டுக்கு ஓடினன் ஏஜெண்டு முத்தையா.

* * *

எல்லோருக்கும் முன்னலேயே தூக்கங் கலைந்து எழுந்தவன் சின்னப்பன்தான். அவனுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. அதற்கு ஏற்றாப்போல் பெரிய பண்ணையாரும், ஏஜெண்டும போலீஸார் புடைசூழ அந்த அதிகாலை வேளையிலே கிராமத்துள் பிரவேசித்தனர்.

ஏற்கெனவே தான் ஊகித்தபடிதான் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று தெரிந்து கொண்டான் சின்னப்பன். போலீஸ்த் தலைவர் முதலிலே ஒப்பந்தம் ஏற்பட்ட போது கூட இருந்தவராதலால், சின்னப்பனைப் பார்த்ததும், "உளைச்சுப் பாடுபடுற குடியானவன் ஒரு போதும் நாயம் பிசிக மாட்டான்னு சொன்னது நீதானேப்பா?" என்று கோபமும், ஏளனமும் கலந்த குரலில் கேட்டார். சின்னப்பன் நிதானமாக, "ஆமாங்க, நான்தான் சொன்னேன். நடக்கவும் நடந்துக் கிட்டோம்" என்று சொன்னதும் பெரிய பண்ணையாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது! "அப்போ, நேத்திக்குச் சாயங்காலம் ஏண்டா அக்கிரமமாகக் கொள்ளை யடிச்சீங்க? ஒரு மணி நெல்லை வெக்காமே களத்து மேட்டையே காலியாக்கிட்டிங் கன்னு பிள்ளை சொன்னரே!" என்று கத்தினர். சின்னப்பன் முன் போலவே நிதானமாக, "களத்து மேட்டுக்குப் போனீங்களா?" என்று கேட்டான்.

"எதுக்கடா அங்கே போவணும்? நேரே இங்கையே வந்துட்டோம், கையிலே விலங்கு மாட்டி உன்னை யெல்லாம் இளுத்துக்கிட்டுப் போக!" என்று முன்னைவிட ஆத்திரமாகக் கத்தினர்.

அப்பொழுதுதான் முகத்தை அலம்பிக்கொண்டு வந்த செல்லாயி தன் வீட்டு வாசலிலே கூடியிருக்கும் கூட்டத்

தையும் போலீஸ் படையையும் கண்டு வெளியே ஓடி வந்தாள்.

"சரிங்க, இப்படியே களத்து மேட்டுக்கு நீங்க வாங்க!" என்று போலீஸாரை அழைத்தான் சின்னப்பன். தன் மனைவியைக் கண்ட பிறகுதான் அவனுக்கு இந்த யோசனை உண்டாயிற்று!

"எதுக்குங்க அங்கே?" என்று ஏக காலத்தில் பண்ணையாரும் முத்தையாப் பிள்ளையும் போலீஸாரைத் தடுத்தனர். போலீஸ்த் தலைவர் சின்னப்பனைத் தொடர்ந்ததும் மற்றவர்களும் பின்னே நடந்தனர்.

களத்து மேட்டிலே நெல் பட்டறை கலைக்கப்படாமல் அப்படியே இருந்தது. சின்னப்பன் திரும்பி ஏஜெண்டைப் பார்த்து, "நேத்தைக்குக் கண்டு முதல் எம்மாங்க?" ... வேகமாகக் கேட்டான்.

"நானூறு கலம்!" என்று சடக்கென்று பதில் வந்தது.

"ஒப்பந்தப்படி கூலி அளந்துக்கிட்டோம். மீதி சரியாயிருக்குதா இல்லையான்னு அளந்துக்கச் சொல்லுங்க!" என்று சின்னப்பன் சொன்னதும் போலீஸ்த் தலைவர் அப்படியே உத்தரவிட்டார்.

உண்மையிலேயே ஒரு மணி நெல்கூடக் கொள்ளை போகவில்லை!

"ஒப்பந்தப்படி கூலி கொடுக்க அவுரு இஷ்டப் படல்லே. நாங்க ஒப்பந்தத்துக்கு மேலே ஒரு மணி நெல்லுக்குக்கூட ஆசைப்படல்லே!" என்று சின்னப்பன் சொன்னதும் பெரிய பண்ணையார் தலை குனிந்தார்.

"நாயம் பெசகினது யாருன்னு நீங்களே பாருங்க!" என்று ஒருவன் கேட்டுக் கொண்டே சின்னப்பனைப் பிடித்துத் திருபபி நிற்க வைத்தான். அவன் முதுகுத் தழும்புகள் போலீஸ் கண்களுக்குப் 'புலி வரிக் கோடு'களாகக் காட்சியளித்தன. தலைவர் வியப்பும் கோபமும் கலந்த குரலில், "இது என்ன?" என்று கேட்டார்.

"இதுதான் அவுங்க செஞ்ச நாயம்! ஏசெண்டய்யா காட்டின கைவரிசை. இவ்வளவு பட்டும்கூட

பொறுமையா யிருந்தது யாருன்னு கொஞ்சம் யோசனைப் பண்ணிப் பாருங்க!' என்று மற்றொருவன் சொன்னதும் ஏஜெண்டு முகத்திலே திகில் உண்டாகி விட்டது. போலீஸ்த் தலைவர் பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டே, "பேஷ், பண்ணையாரே, உங்கள் தர்பார் ஜோராகத்தான் இருக்கிறது. அக்கிரமத்தைச் செய்து விட்டு அதை மறைப்பதற்கு இந்தச் சூழ்ச்சியா!" என்று நெருப்பைக் கக்குவதுபோலக் கேட்டார்.

அவருக்கே மேலே பேசப் பிடிக்க வில்லை. சட்டென்று, "குற்றவாளியை இப்படியே விட்டுவிடக் கூடாது. ஏஜெண்டையே அரஸ்டு செய்!" என்று போலீஸாரை உத்தரவிட்டார். பண்ணையார் திடுக்கிட்டு விழித்தார். ஏஜெண்டோ, குய்யோ முறையோ என்று அலறினார்.

விலங்குகள் ஏஜெண்டின் கைகளில் மாட்டப்பட்டன. இதுகாறும் ஏதோ யோசித்தபடி நின்ற சின்னப்பன் சட்டென்று நிமிர்ந்து போலீஸ்த் தலைவரிடம், "வேணுங்க, இதெல்லாம் கொஞ்ச நாளைக்கு முந்தி சஹஜமாகத்தான் நடந்திச்சிங்க. இப்போ காலம் மாறிடிச்சுன்னு அவுங்க தெரிஞ்சிக்கிட்டு அதுக்குத் தகுந்தபடி நடந்துக்கிட்டாப் போதும். நாந்தான் அவுருகிட்டே அடி வாங்கினேன். நானே அவுரை ஒண்ணும் செய்ய வேணான்னு கேட்டுக் கறேன். இப்பவாவது அவுங்களுக்குப் புத்தி வந்தா சரி!" என்று பணிவாக வேண்டிக் கொண்டான்.

போலீஸ்த் தலைவர் வியப்பே உருவாய் வாய் திறவாமல் நின்றார். சர்வ சாதாரணமான குடியானவனிடம் இப்படிப்பட்ட நியாய புத்தியா இருக்கிறது என்பதை எண்ணிப் பிரமித்து நின்ற அவர் சின்னப்பன் வேண்டுகோளை மறுதளிக்க மனம் இல்லாமல் ஏஜெண்டை விடுவிக்கும்படிக் கட்டளையிட்டார்.

அவமானம், வெட்கம், மனச்சாட்சியின் குத்தல் இவைகளுக்கு இலக்காகிய முத்தையாப் பிள்ளை உடலும் உள்ளமும் குன்றி நின்றார்!

"உழைக்கிறவனுக்கும், அவன் உழைப்பினால் சுகம் அனுபவிக்கிறவனுக்கும் இதுதான் வித்தியாசம்!" என்று

சொல்லிவிட்டுத் திரும்பவும், "பேராசைக்காரனுக்கு நியாயமாவது ஒப்பந்தமாவது?" என்று உதாசீனமாகவே பேசிவிட்டார் போலீஸ்த் தலைவர். அநாவசியமாக அவர்களை அலையவைத்தால் ஆத்திரம் ஏற்படாதா?

சின்னப்பன் இதைக் கவனிக்காதவன்போலத் தன் காரியத்திலேயே கண்ணுயிருந்தான்.

அவன் வயலில் இறங்கியதைப் பார்த்ததும் மற்றவர்களும் அறுவடை வேலையை மும்முரமாகத் தொடங்கினர்கள்.

"உண்மையாகப் பாடுபட்டு உழைப்பவர்கள், உறுதியும் நல்ல ஒழுக்கமும் உடையவர்களாயிருப்பார்கள் என்பதை இனியாவது நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று பண்ணையாருக்கு உபதேசம் பண்ணிக்கொண்டே சென்றார் போலீஸ்த் தலைவர்!

போலீஸார் திரும்பிச் சென்றார்கள். பெரிய பண்ணையாரின் முகத்திலே தோல்வி கலந்த அசட்டுக் களை தாண்டவமாடியது!

உச்சி நேரத்திலே கஞ்சி கொண்டுவந்த செல்லாயியிடம், சின்னப்பன் மகிழ்ச்சியுடன், "நேத்தைக்குக் குடியானவங்களுக்கு எம்மாம் ஆத்திரம் தெரியுமா? என்னமோ நீ சொன்னத்துக்காவததான் கட்டுப்பாடா இருந்தாங்க!" என்று சொல்லித் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டான்!

அவளும், "இன்னிக்கு அறுப்பாயிடும், நாளைக்கு..." என்று கேட்டு முடிவதற்குள், "போவலாம் நீ பிறந்த ஊட்டுக்கு!" என்று குதூகலமாய்க் கூறினன் சின்னப்பன்!

*

# இதுவும் காதல் கதைதானா ?

ரா. ஆறுமுகம்

மத்தியானச் சாப்பாட்டை முடித்ததும் தடதட வென்று மாடிப்படியிலேறி, தன் அறைக்குச் சென்று, மின்சார விசிறியை வேகமாக ஓடவிட்டுக்கொண்டு அதனடியில் கிடந்த சோபாவில் தொப்பென உட்கார்ந்தான் விநாயகம். பக்கத்திலிருந்த மேஜைமீது ஒரு பத்திரிகை கிடந்தது; அன்றுதான் தபாலில் வந்தது. அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டு வருகையில் அவன் அடிக்கடி படித்துப் பழக்கப் பட்ட ஒரு கதாசிரியனுடைய கதையும் அதில் வந்திருப்பதைக் கண்டு, ஆவலாய் ஒரே மூச்சில் படித்து விட்டு, 'சை! என்ன கதை எழுதுகிறான் இவன்? எப்பப் பார்த்தாலும் காதல்தானா? அதிலும் துன்பத்தில் முடியும் காதல், அல்லது இன்பத்தில் முடியும் காதல்; இதையும் விட்டால் பசியையும் பட்டினியையும் வர்ணிக்கும், மனத்தைக் கெடுக்கும் கதைகள். ஒரு வேளை இந்தக் கதாசிரியர்கள் எல்லோரும் காதல் நோய் பீடிக்கப்பட்ட வர்களோ? அல்லது காதல் முயற்சியில் அபஜயம் அடைந்த வர்களோ? இல்லையென்றால் பசியையும் பட்டினியையும் வாழ்க்கையாக கொண்டவர்களோ? அப்படியானால் இந்த மாதிரிக் கதைகள் எழுதி வீண் பொழுதைப் போக்காமல் ஏதாவது உத்தியோகத்தைத் தேடிப்போய்ச் சௌகரி யமா யிருக்கலாமே. இவர்கள்கஷ்டம் இவர்களோடு தொலையாமல் என்னைப் போல் உல்லாசமாய் இருப்பவர் களின் மனத்தை யெல்லாம் ஏன் இப்படிக் கெடுக்கிறது?' என்று எண்ணம் இட்டவனாய் எரிச்சலோடு கையிலிருந்த பத்திரிகையை மேஜை மீது விசிறி எறிந்தான். அந்தச் சமயத்தில் தான் அவனுடைய நண்பன் சுந்தரமும்

அங்கே நுழைந்தான். நல்ல வேளையாக அவன்மீது பத்திரிகை படவில்லை.

"என்ன, விநாயகம், யார்மேல் கோபம்? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறுய்? சாப்பாடு ஆகிவிட்டதா?" என்று கேட்டுக்கொண்டே மேஜைக்கருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் சுந்தரம்.

"சாப்பாட்டுக்கு என்ன குறைவு. அதிலும் இன்றைக்கு விசேஷமாகச் செய்திருந்தாள் கனகம். நீ வந்திருக்கக் கூடாதா என்று கூட நினைத்தேன். சாப்பாடு ஆனந்தம். அந்தச் சந்தோஷத்திலே வந்து, அதோ கிடக்கிறதே மேஜைமேல், அந்தப் பத்திரிகையை எடுத்துப் பிரித்துப் பார்த்தேன். அதில் இருந்த கதைதான் என் கோபத்தை கிளப்பிவிட்டது."

"ஏன், கதை உன் மனத்திற்குப் பிடிக்கவில்லையோ?"

"கதைகள் எல்லாமே நம மனத்திற்குப் பிடித்ததாக இருக்க முடியுமென்று எப்படிச் சொல்லுவது? எழுதுகிறவர்களின் மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஆனால் எழுதுகிறவர்களெல்லாம் காதல் கதைகள்தானு எழுத வேண்டும்! வேறு விஷயமே அகப்படாதா அவர்களுக்கு?" என்று மறுபடியும் கதாசிரியர்கள் மேல் தனக்கு உள்ள கோபத்தைக் காட்டினுன் விநாயகம்.

"விநாயகம், நீயும் நானும் அதைப்பற்றி யோசித்து என்ன பயன்? எழுதுகிறவர்களுக்கு அல்லவா அந்த யோசனை வேண்டும்?" என்றுன் சுந்தரம்.

"நான் யோசனை செய்வதோடு நின்று விடவில்லை. ஒரு கதையே எழுதி வைத்திருக்கிறேன்!"

"என்ன! நீ கதை எழுதி வைத்திருக்கிறுயா? எங்கே, எடு பார்க்கலாம்?"

"அந்த மேஜையின் அறையைத் திறந்து பார். அதற்குள்ளே இருக்கிறது."

சுந்தரம் ஆவலோடு அறையைத் திறந்து அதில் விநாயகம் எழுதி வைத்திருந்த கதையை எடுத்துப் படித் தான், தனக்குள்ளேயே.

"சத்தமாகவே படி. நானும் கேட்கிறேன். எங்கேயாவது குறைகள் இருந்தால் நிவர்த்திசெய்துவிடலாம்" என்று விநாயகம் சொல்லவே சுந்தரமும் உரக்கப்படித்தான்.

*　　　*　　　*

வாசு கௌரவமான குடும்பத்தில் பிறந்தவன். அவன் தந்தைக்கு ஏராளமான ஆஸ்தி இருந்தது. ஒரே பையன் ஆதலால் அவனை,பி.ஏ.,முடித்ததும லண்டனுக்கும் அனுப்பினர் மேல் படிப்பிற்காக. அங்கே அவன் படித்துக் கொண்டிருக்கும் போதே தந்தை இறந்து விட்டதாகத் தந்தி வந்தது. அதைத் தொடர்ந்தே, அவன் படிப்பைக் கெடுத்துக் கொண்டு வர வேண்டாமென்று அவனுடைய தாய் ஒரு தந்தி அனுப்பியிருந்தாள். ஆனல் அதற்கு அடுத்த மாதமே அதே கவலையால் அந்தம்மாளும் போய்விட்டதாக மூன்ருவது தந்தி வந்தது. அதைப் பார்த்த பின்பு வாசு தன் படிப்பை லக்ஷியம் செய்யாமல் கப்பலேறிவிட்டான். தன் பெற்ரோர்களுக்கு ஒரே குமாரனயிருந்துங்கூட அவர்களுடைய கடைசி நாட்களில் அவர்கள் அருகில் தான் இருக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று நினைத்து அவன் மனம் பட்ட பாடு இவ்வளவு அவ்வளவு அல்ல!

கப்பலில் அவன் இரண்டாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். கப்பலும் பிரம்மாண்டமானது. அவனுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் அதில் இருந்தன. மனசு சஞ்சலம் அடைந்தாலோ, யாத்திரையில் அலுப்புத் தட்டினலோ அதை மறந்து உல்லாசமாய் பொழுது போக்குவதற்கு, பிரயாணிகளின் சௌகரியத்தை உத்தேசித்து அங்கேயே ஒரு'சினிமாத் தியேட்டர்' கூட இருந்தது. அங்கேயாவது போய் உட்கார்ந்து விட்டு வரலாமென்று தன் அறையைப் பூட்டிக்கொண்டு தியேட்டருக்குள் போய் அமர்ந்தான். நல்ல படம்தான்; மற்றவர்கள் எல்லோரும் ரஸித்துப் பார்த்தார்கள்.

ஆனல், அவனுக்கோ அதிலும் மனம் செல்லவில்லை. மறுபடியும் அறைக்குச் சென்ருல் பழைய கவலைகள் வந்து

அல்லல் படுத்துமே யென்று பயந்து, கப்பலின் மேல் தளத்திற்குச் சென்ருன். நடுநிசி. குளிர் காற்று 'விர்'ரென அடித்துக்கொண் டிருந்த படியால் யாருமே அங்கு வரவில்லை. அவன்மாத்திரம் பரந்த கடலை நோக்கி நாலு பக்கத்திலும் ஒரு தரம் பார்த்துவிட்டு, கையைப் பின் புறமாகக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண் டிருந்தான். 'ஊருக்குப் போய் என்ன செய்வது? தந்தையின் ஆஸ்தியை வைத்துக் கொண்டு, சோம்பேறித்தனமாகக் காலங் கழிப்பதா? அல்லது திரும்பவும் லண்டனுக்கு வருவதா?' இம்மாதிரி எண்ணங்களே மேலும்மேலும் அவன் மனத்தில் குவிந்து கொண் டிருந்தன. நடந்து நடந்து கால்கள் அலுத்துப் போனபடியால் சிரம பரிகாரமாக அங்கே போட்டிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தான். பிற்காலத்தில் செய்யப்போகும் காரியங்களைப் பற்றி மனத்தை அலட்டிக் கொள்வதை நிறுத்தி விட்டுச் சற்று நேரமாவது தன் சிந்தையை வேறு விஷயத்தில் திருப்ப முயற்சி செய்த அவன், கப்பல் போகும் திக்கிற்கு எதிர்ப் புறமாய்த் திரும்பி உட்கார்ந்துகொண்டு, வெகு தூரத்தில் மினுக் மினுக்கென்று விட்டு விட்டுப் பிரகாசிக்கும் கலங்கரை விளக்கையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தான்.

மேல் தளத்தின் கோடியில், அவன் பார்த்துக்கொண் டிருந்த திசையிலேயே ஓர் உருவம் அசைவது அந்த இருட்டில் இலேசாகத் தெரிந்தது. ஆணு, பெண்ணு என்று அவனுல் நிச்சயிக்க முடியவில்லை. தான் ஒருவனே தன்னந் தனியாய் அங்கே யிருப்பதாக இதுவரை எண்ணியிருந்த அவனுக்கு அது ஓர் ஆறுதலைக் கொடுத்தது. எனினும், 'அந்த நேரத்தில் அங்கே அவ் வுருவம் வரக் காரணம்? தன்னைப் போலவே அதுவும் மன அமைதியை நாடி அங்கு வந்திருக்கிறதா? அப்படியானுல் அதற்கு என்ன மனத் துயரமோ?' என்று யோசித்துக்கொண் டிருக்கையில், அந்த உருவம் தளத்தின் ஓரத்திலேயே அசையாமல் நின்று கொண்டே யிருந்தது. வாசுவிற்குச் சந்தேகம் உண்டாகியது. ஒரு வேளை கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கிறதா? இந்த

எண்ணம் எழுந்ததும் அந்த இடத்தை நோக்கி மெதுவாகப் போனான் வாசு. கோட்டுப் பையிலிருந்த 'டார்ச்சை' எடுத்துப் பொத்தானை அழுத்தினான். அந்த உருவம் சட்டென முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டது. இது வரை அவனையேதான் அதுவும் பார்த்துக்கொண் டிருந்திருக்கிறது. முகத்தைத் திருப்பிக் கொண்டாலும் அதன் உடையிலிருந்து அது பெண் என்று கண்டுவிட்டான் வாசு! 'பெண்! இந்த நள்ளிரவில் இவ்விதம் தனித்து நிற்பதற்குக் காரணம்? காரணம் இல்லாமலா இருக்கும்? கேட்டுப் பார்க்கலாமே' என்று தீர்மானித்து, "மன்னிக்க வேண்டும், நீங்கள்......" என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்தான்.

அவன் கேள்வி முடிவதற்குள்ளேயே அவள் சட்டெனத் திரும்பி, "தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள், உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போங்கள்" என்று கடுகடுத்தாள்.

அந்தப் பதிலில் ஒரு வெறுப்புத் தொனித்தது. அதைக் கேட்டு அவன் ரோஷப்பட்டுப் போய்விடுவானென்று அவள் நினைத்தாள் போலும். அவள் பதிலும் ஆங்கிலத்திலேயேதான் இருந்தது. லண்டனுக்கு வருகிறவள் ஆங்கிலம் தெரியாமல் இருப்பாளா? அதைக் கேட்டு அவன் ஆச்சரியப் படவில்லை. அவளுடைய உடையிலிருந்தும் தோற்றத்திலிருந்தும் அவள் ஓர் இளம் மாது, பணக்காரி யென்பவை நிச்சயமாக விளங்கின; ஆனால் கல்யாண மானவளா, ஆகாதவளா என்பது தெரியவில்லை.

"நான் உங்களைத் தொந்தரவு செய்வதாக நினைக்கக் கூடாது. எனக்கு உங்கள்பேரில் சந்தேகம் ஏற்பட்டது......" என்று மறுபடியும் ஆரம்பித்தான் வாசு.

"என்பேரில் சந்தேகமா? என்ன சந்தேகம்?" என்று கோபமாய்க் கேட்டாள் அவள்.

"வேறு ஒன்றும் இல்லை. ஏதோ, வாழ்க்கையில் ஏற்பட்ட மனக் கசப்பினால் உயிரை......"

"ஆம். உயிரை மாய்த்துக் கொள்ளத்தான் மார்க்கம் தேடிக்கொண் டிருக்கிறேன்! அதில் உங்களுக்கு என்ன சிரத்தை?"

"என் கண்ணுக்கு எதிரில் அப்படி ஒரு காரியம் நடக்க நான் பார்த்துக்கொண் டிருப்பது, மனித தர்மத் துக்கே சரியல்ல. அதைத் தடுத்து நிறுத்துவதே பொருத்த மாகும்."

"இந்த உபந்நியாசத்தை யெல்லாம் நான் உங்களிடம் கேட்கத் தயாராயில்லை. என் நிலைமையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்களென்பதை எண்ணிப் பார்க்க வேண் டும். ஒரு பெண் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்து விட்டா ளென்ருல் அவள் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகி யிருப்பாளென்பதை ஒரு க்ஷணம் யோசித்தால், நீங்கள் இப்படிப் பேசமாட்டீர்கள்."

"அது தெரியும். ஆனுல்......"

"உங்களோடு வாதாடிக் கொண்டிருக்க எனக்கு இஷ்டமில்லை. திடீரென்று தண்ணீரில் குதித்து விட்டால் நீங்கள் என்ன செய்ய முடியும்?"

"இதோ, இங்கே இருக்கிற பொத்தானை அழுத்தினுல் மாலுமியின் அறையிலுள்ள மணி அலறும். உடனே இதற்கென்று தயா ராயிருக்கும் சிப்பந்திகள் கடலில் குதித்து உங்கள் உயிரைக் காப்பாற்றிவிடுவார்கள்!"

"பின்பு, தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த குற்றத்திற்காக நான் சிறைவாச தண்டனை பெற்றுச் சித்திரவதை யடையவேண்டும். அதுதானே உங்கள் விருப்பம்? இதனுல் எனக்கு நன்மை செய்து விட்ட திருப்தி உங்களுக்கு ஏற்பட்டுவிடுமா?" என்று முன்னிலும் கோபமாகக் கேட்டாள் அவள்.

அந்தச் சமயத்தில் இன்னும் யாரோ படியேறிக் கீழிருந்து மேல் தளத்திற்கு வரும் காலடிச் சத்தம் கேட்டது. மேலே வந்ததும் சிகரெட்டைப் பற்ற வைப்ப தற்காகத் தீக் குச்சியைக் கிழித்தார் ஒருவர். அந்த வெளிச் சத்தில், வந்தவர்கள் ஆணும் பெண்ணுமாக இருவர் என் பது தெரிந்தது. அவர்கள் காதலர்கள்! ஏகாந்தமாய்ச் சிறிது நேரம் இருந்துவிட்டுப் போக வந்தவர்கள்போலும்.

"சரி, இனி என் காரியம் பலிக்காது. எனக்கு இடைஞ்சலாக நீங்கள் வந்தீர்கள். போதாதற்கு இவர்

களும் வந்து விட்டார்கள். நான் கீழே போகிறேன்'' என்று சொல்லிவிட்டு அந்தப் பெண் படிப் பக்கம் வந்து மடமடவென்று இறங்கினாள். வாசுவும் அவள் பின்னாலேயே இறங்கினான்.

"நீங்கள் என்னிடம் உண்மையைச் சொல்லாவிட்டால், இப்போதே மாலுமியிடம் போய்த் தெரிவித்து உங்களைக் கண்காணிப்பில் வைக்கும்படி வேண்டிக் கொள்வேன்'' என்று வாசு பயமுறுத்தினான்.

அவள் 'டக்' கென படியில் நின்று, "இதுதான் செய்ய முடியுமா, இதற்கு மேலும் முடியுமா?'' என்று அதட்டிக் கேட்டாள்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! தயவு செய்து என் அறைக்கு வந்து உங்கள் கஷ்டங்களைச் சொல்லுங்கள். உங்களுடைய துன்பங்கள் தவிர்க்க முடியாதனவாயிருந்தால், நானே உங்களைக் கடலில் தள்ளிவிடுகிறேன்!'' என்று அவளுக்கு அனுசரணையாகப் பேசினான் வாசு. அவள் சற்று யோசித்து விட்டு மறுபடியும் படிகளில் இறங்கிக் கீழ்த் தளத்திற்கு வந்தாள்.

வாசு அவளுக்கு முன் நடந்துகொண்டே, "வாருங்கள், இரண்டாம் வகுப்பு அறையில்தான் நான் இருக்கிறேன். சௌகரியமான இடம்; யாரும் வரமாட்டார்கள்'' என்று சொல்லி அவளைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றான். அறையைத் திறந்து அவளை உட்காரச் சொல்லிவிட்டு, எலக்ட்ரிக் மணியை அடித்து ஒரு 'பட்லை'ரைக் கூப்பிட்டு, சூடாக இரண்டு கப் காபி கொண்டுவரச் சொன்னான். காபியைக் குடித்ததும் அவர்கள் உடம்பில் சூடேறியது. அவனுக்கு அது உற்சாகத்தை மூட்டியது. தான் சொல்லப்போவதை ஆவலோடு கேட்க அவன் தயாராயிருப்பதைத் தெரிந்து கொண்டு அவள் பேச ஆரம்பித்தாள்.

"என் துயரங்களைத் துடைக்கவோ அல்லது எனக்கு உதவி செய்யவோ உங்களால் முடியுமென்று நம்பி நான் உங்கள் விருப்பத்திற்கு இணங்கி இங்கே வரவில்லை யென்பதை முதலில் சொல்லி விடுகிறேன். சமயமும் சந்தர்ப்ப

மும் என்னை இங்கே பலவந்தமாகக் கொண்டுவந்து தள்ளி விட்டன. ஆகையால் என் கதையைச் சுருக்கமாகவே சொல்லி முடித்து விடுகிறேன். என் தகப்பனர் இந்தியா வில் சர்க்கார் உத்தியோகத்தில் உயர்ந்த பதவியில் இருந் தார். மாசம் ஒன்றுக்குச் சம்பளம், வரும்படி எல்லாம் சேர்த்து மூவாயிர ரூபாய் கிடைக்கும். அதனுல் என்னை நன்ருகப் படிக்க வைத்தார். நான் அவருக்கு ஒரே பெண். என் கல்லூரிப் படிப்பு முடிந்த சமயம் என் தாயர் இறந்து விட்டாள். என் தகப்பனருக்குத் துக்கம் தாங்க முடிய வில்லை. எங்கள் இருவர் மனமும் நிம்மதி யடைய வழியே தோன்றவில்லை. அயல் நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாமே என்ருர். நானும் சரி என்றேன். அவருக்கு ஒரு பெரிய வீடும், பாங்கியில் ரொக்கமாக ஒரு லக்ஷ ரூபாயும் இருந்தன. வேலையிலிருந்து ஒரு வருஷம் முன்னதாகவே பென்ஷன் வாங்கிக்கொண்டு என்னேடு புறப்பட்டுவிட்டார். ஐரோப்பாவை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, லண்டனுக்கு வந்தோம். அங்கே ஒரு மாசம் தங்குவதாகவே திட்டம் போட்டிருந்தபடியால் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டோம். அடிக்கடி என் தாயாரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்த என் தகப்பனர் லண்டனுக்கு வந்தபிறகு சிறிது சிறிதாக அதை மறந்துவிட்டார். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு அடிக்கடி ஆங்கில மாது ஒருத்தி வந்து என் தகபபனரிடம் வெகு நேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டுப் போவாள். அவள் யாரென்று கேட்டபோது, இந்தியாவி லிருக்கை யில் அவளும் தன்னேடு வேலை பார்த்ததாகச் சொன்னர் என் தந்தை. ஆயினும் அவள் நடந்துகொண்ட முறையி லிருந்து எனக்குச் சந்தேகம் தட்டியது. கடைசியாக என் தாயாரின் ஸ்தானத்தை அவள் பெற்றுவிட்டாள். இரவில் அவளுக்குப் படுக்கை எங்கள் ஜாகையில்தான். இதனுல் எனக்கும் என் தந்தைக்கும் வாக்குவாதம் முற்றி அவளை அங்கேயே விட்டு விட்டு நான் மாத்திரம் திரும்பிப் போகி றேன். மன அமைதியைத் தேடிவந்த அவருக்கு அது கிடைத்து விட்டது. ஆனல் எனக்கோ? இந்தியா போய்த் தான் நான் என்ன செய்யப் போகிறேன்? கல்யாணம் ஆகாத நான் தனியாய் வீட்டில் இருந்தால் பலரும் பலவித

மாய்ச் சொல்லுவார்கள். கல்யாணம் செய்துகொண்டாலோ, அதனால் என்னென்ன இன்னல்களோ? இதையெல்லாம் யோசித்துத்தான் நான் தற்கொலை செய்து கொள்ள முயன்றேன்........"

வாசு, ஆழ்ந்து யோசித்துவிட்டு, "உங்கள் தகப்பனார் இன்னும் ஒரு மாசத்தில் திரும்பிவிடுவார். கையில் உள்ள பணம் கரையும் வரைதானே அந்தப் பெண் இருப்பாள்?" என்றான்.

"பணத்தோடு, அவர் உயிரையும் உறிஞ்சி விடுவாள் அவள். அவர் திரும்பி வருவாரென்ற நம்பிக்கையே எனக்கு இல்லை."

"அப்படியானால் என் கதையையும் நீங்கள் கேட்டு விடுங்கள். மேல் படிப்பிற்காக லண்டனுக்கு வந்தேன். படிப்பு முடிய இன்னும் ஒரு மாசந்தான் இருக்கிறது. அதற்குள் என் பெற்றோர்கள் அங்கே இறந்து விட்டார்கள். ஊரில் நிறையச் சொத்து இருக்கிறது. அதெல்லாம் என்ன ஆகுமோ என்ற கவலையால் படிப்பை நிறுத்தி விட்டுப் புறப்பட்டுவிட்டேன். எனக்கு நெருங்கிய உறவினர் யாரும் இல்லை. நானும் உங்களைப் போலவே என் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை" என்று அவன் சொல்லி முடிக்குமுன் அவள் குறுக்கிட்டு, "அதனால் உங்களோடு வந்து என்னைத் தங்கி இருக்கச் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம். நீங்கள் வேறு ஒன்றும் தப்பாக எண்ணி விட வேண்டாம். உங்களை என் சொந்தச் சகோதரி போலப் பாவித்து நடத்தி, உங்களுக்குத் தக்க இடத்தில் மணம் செய்து வைக்கிறேன்" என்று உறுதியாய்க் கூறினான் வாசு.

"அது எப்படி முடியும்? உங்கள் ஊரில் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள். சீமைக்குப் போய் யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து வைத்திருக்கிறான் என்றுதானே சொல்லுவார்கள். உங்களுக்கு அந்த அபக்யாதியைக் கொடுக்க நான் விரும்பவில்லை."

"யார் என்ன வேண்டுமானுலும் சொல்லட்டுமே. கடவுளுக்குப் பயந்து, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்துகொண்டால், கடைசியில் ஒரு நாளைக்கு ஊராருக்கும் உண்மை தெரியாமலா போய்விடும்?"

"இப்போது நீங்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லலாம். ஆனல் நாளடைவில் நம் மனம் எப்படியெல்லாம் மாறுமோ?"

"அந்தப் பயமே வேண்டாம் உங்களுக்கு. நான் வாக்குத் தவறமாட்டேன். சத்தியம் வேண்டுமானுலும் செய்து தருகிறேன்" என்று அழுத்தமாகச் சொன்னுன் வாசு.

"வேண்டாம், வேண்டாம். அப்படியெல்லாம் செய்து விடாதீர்கள். நான் இதைப் பற்றி நன்ருய் யோசித்து உங்களுக்கு நாளைக்குச் சொல்லுகிறேன்" என்று சொல்லி எழுந்து விட்டாள் அவள்.

"சரி, சந்தோஷம். மறுபடியும் மனதை மாற்றிக்கொண்டு மேல் தளத்திற்குப் போய்விடாதீர்கள்" என்று சிரித்துக்கொண்டே சொல்லி அவளை வழியனுப்பினுன் வாசு. அவளும் பெண்களுக்கென்று பிரத்தியேகமாக இருந்த இரண்டாம் வகுப்பு அறைப்பக்கம் போய் விட்டாள்.

'இவ்வளவு பெரிய பெண்ணைத் தனியாகக் கப்பலில் அனுப்பிவிட்டு, ஓர் ஆங்கில மாதின் மையலில் மயங்கிக் கிடப்பவனும் மனிதானு?' என்று சபித்துக்கொண்டே வாசு படுக்கையில் படுத்தான். அவளை அவனுல் மறக்க முடியவில்லை.

அடுத்த நாள் காலை அவள் வாசுவிடம் வந்தபோது, "கடைசியாக என்ன முடிவு செய்தீர்கள்?" என்ற கேள்வியைத்தான் முதலில் அவன் கேட்டான்.

அவனுக்கு எதிரேயிருந்த சோபாவில் உட்கார்ந்த படியே, "அதைத்தான் சொல்ல வந்தேன். இந்தியாவில் நம் இருவருடைய ஊர்களுக்கும் இடையில் வெகுதூரமில்லையே. நூறுமைல்தானே! நான் என் வீட்டிலேயே

இருக்கிறேன். உங்களுக்குச் சௌகரியப்பட்ட போதெல்லாம் என்னை வந்து பார்த்துவிட்டுப் போகலாமே!" என்றாள்.

"வீட்டில் உங்களுக்கு யார் துணை?"

"ஒரு வேலைக்காரியை அமர்த்திக் கொண்டால் போகிறது!"

அவன் சிறிது யோசித்து விட்டு, "சரி, உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டான். அவள் எதிர்பார்த்தபடி அவன் அவளைத் தன் வீட்டிலேயே வந்திருக்கும்படி வற்புறுத்தவில்லை.

"இப்படி நான் சொல்வதால் உங்களுக்கு ஏதாவது வருத்தம் உண்டா?" என்று மறுபடியும் கேட்டாள்.

அவன் சிரித்துக்கொண்டே, "என்னுடைய முக்கிய நோக்கம் ஒன்றே ஒன்றுதான். உங்கள் உயிரைக் காப்பாற்றி, உங்களை இந்தியா கொண்டுபோய்ச் சேர்த்து, சரியான இடத்தில் மணம் செய்து வைத்துவிட வேண்டும். அவ்வளவுதான். இதில், முதல் பாதி முடிந்துவிட்டது. இனி, தாய் நாடு சென்றபின் உங்களை நான் அடிக்கடி சந்தித்துக் கல்யாண விஷயத்தையும் முடித்து விடுகிறேன். அதோடு என் பொறுப்பும் தீர்ந்துவிடும்" என்றான்.

அதற்குமேல் அவளுக்குப் பேச இடமில்லை யாதலால் விடைபெற்றுக் கொண்டு எழுந்து போய்விட்டாள். ஆனால் அதற்குப் பிறகு, கப்பல் பம்பாய்க்கு வரும்வரை அவர்கள் இருவரும் கப்பலிலேயே அடிக்கடி சந்தித்துப் பேசுவார்கள். அவள் நினைத்தபோதெல்லாம் வாசுவின் அறைக்கு வந்து வெகுநேரம் அவனுடன் பேசிக்கொண்டிருப்பாள். அவனே அவளிடம் ஒரு சகோதரன் போலவே நடந்துகொண்டான். அவளுக்கே அது ஆச்சரியமாயிருந்தது! பம்பாய்த் துறைமுகத்தில் இறங்கியதும் அவள் ஊரைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்று பிரியப்பட்டபடியால், இரண்டு நாட்கள் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு இருவரும் ரயில் ஏறிவிட்டார்கள். வழியில் அவளை

அவளுடைய ஊரில் இறக்கிவிட்டு, தானும் அவள்வீட்டில் போய் ஒருநாள் தங்கிவிட்டுப் புறப்பட்டான் வாசு.

தன் சொந்த ஊரில் அவனுக்கு ஒரு மாத காலம் வேலையிருந்தபடியால் அவளைப்போய் பார்க்க முடியவில்லை. ஆனால் கடிதம் மாத்திரம் எழுதிக்கொண்டிருந்தான். அவளிடமிருந்தும் பதில் வந்துகொண் டிருந்தது. 'செலவிற்குப் பணம் அனுப்பட்டுமா?' என்று வாசு ஒரு சமயம் எழுதியதற்கு, 'என்னிடமிருக்கிறது. என் தகப்பனாரும் அனுப்பியுள்ளார்' என்று அவள் எழுதிவிட்டாள்.

ஒருநாள் காலை நான்கு மணி யிருக்கும். வாசல் பக்கத்துக் கதவை யாரோ தட்டுவது கேட்ட அவள் ஓடிப்போய்த் திறந்து பார்த்தாள். வாசு நின்றுகொண் டிருந்தான்! அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஒரு க்ஷணம் ஸதம்பித்து இருந்து விட்டு, "என்ன இப்படித் திடீரென்று? கடிதங்கூட எழுதவில்லையே? இந்நேரத்தில் ஏது ரயில்?" என்று அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். அவளுடைய மேஜைமீது ஒரு கடிதம் இருந்தது. "இதோ ஒரு நிமிஷம்" என்று சொல்லிவிட்டு அதில் ஏதோ இரண்டு வரிகள் எழுதி முடித்துக் கையெழுத்திட்டாள்.

"இந்நேரத்தில் யாருக்குக் கடிதம் எழுதிக் கொண் டிருக்கிறாய்?" என்று வாசு அதைப் பார்க்க முயன்றான்.

"வேண்டாம். இதை நீங்கள் பார்க்கக் கூடாது" என்று சொல்லி அதை மேஜைக்குள் வைத்துவிட்டு, "இரவெல்லாம் ரயிலில் தூக்கம் இருந்திருக்காதே. சிறிது நேரம் படுத்துச் சிரமபரிகாரம் செய்து கொள்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"இனிமேல் என்ன தூக்கம் வரப்போகிறது? ரயிலில் நன்றாய்த் தூங்கிக் கொண்டுதான் வந்தேன். ஸ்நானம் செய்து விட்டால் சரியாகிவிடும்."

"அப்படியானால் வேலைக்காரியை எழுப்பி வெந்நீர் போடச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று வீட்டிற்குள் விரைந்தாள்.

'இந்நேரத்தில் இவ்வளவு அக்கறையாக யாருக்கு எழுதிக் கொண்டிருக்கிருள்! நானும் பார்க்கக் கூடா தென்று மறைத்துக் கொண்டாளே! இந்த ரகசியத்தைக் கண்டு பிடிக்கவேண்டும்......கடிதம் மேஜைக்குள் தானே இருக்கிறது. எடுத்துப் பார்த்தால் என்ன?...வேண்டாம். ஒரு சமயம் அது அவள் காதலன் எவனுக்கும் எழுதப் பட்டிருந்தால், என் மனம் எப்படி மாறுமோ? அதனுல் அவளுக்குக் கப்பலில் வாக்களித்த உதவியைச் செய்ய என் மனம் இடம் கொடுக்காமல் போகலாம்...ஏன், கடிதத் தைப் பார்த்தால் என்ன?......அதைப் படித்துக்கொண் டிருக்கும்போது அவள் வந்து விட்டால்?...' இந்த எண்ணங்களெல்லாம் அவன் மனத்தில் ஒரு நொடியில் தான் தோன்றின. அடுத்த விநாடியே ஒரு முடிவிற்கு வந்து மேஜையைத் திறந்து, அந்தக் கடிதத்தை எடுத்தான். அதே சமயம அவளும் உள்ளே வந்துவிட்டாள். அவன் கைகள் அவனையறியாமலே நடுங்கின.

"வேறென்றுமில்லை, மேஜைக்குள் ஏதாவது புத்தகம் இருக்குமா என்று பார்க்கத் திறந்தேன். இந்தக் கடிதம் முன்னுல் இருந்தது......"

"ஹா! அதைப் பிரித்துப் பார்த்து விட்டீர்களா?..."

"இல்லை, நான் பிரிக்கக்கூட இல்லை. எடுத்தேன், அதற்குள் நீயும் வந்து விட்டாய்."

"நல்ல வேளை. அதை இப்படிக் கொடுத்து விடுங் கள்" என்று சொல்லிக் கொண்டு அவன் கொடுக்கும் முன்பே அதை அவன் கையிலிருந்து பிடுங்கி விட்டாள்.

அவன் ஒன்றும் பேசாமல் சோபாவில் போய் உட் கார்ந்தான். அவளும் உட்கார்ந்து கொண்டே, "ரயிலில் வந்த களைப்பில் புத்தகம் கூடவா பார்க்க வேண்டும்? இன்னும் சிறிது நேரத்தில் வெந்நீர் தயாராகி விடும். அதுவரை ஏதாவது பேசிக்கொண் டிருக்கலாமே...... ஊரில் உங்கள் வேலையெல்லாம் முடிந்து விட்டதா?" என ஆரம்பித்தாள்.

கடிதத்தை அவள் பிடுங்கிக் கொண்டதால் அவனுக் குச் சந்தேகம் வலுத்து விட்டது. அதனுல் முகம் உடனே

மாறுதல் அடைந்தது. அவளுடைய பேச்சில் கவனம் செலுத்தாமல் அசட்டையாக இருந்தான். இதை அவள் கண்டு விட்டாள்.

"ஏன் ஒருமாதிரி இருக்கிறீர்கள்? இந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டதனுல் என்மேல் சந்தேகம் வந்து விட்டதோ?" என்று புன்னகை பூத்தாள்.

"அதெல்லாம் இல்லே. உனக்கு இஷ்டம் இல்லாததை நான் ஏன் பார்க்க வேண்டும்?"

"இல்லே, நீங்கள் ஏதோ நினைத்து விட்டீர்கள் என்று தெரிகிறது. அவசியம் பார்த்து உங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டு விடுங்கள்" என்று அவள் தன் கையி லிருந்த கடிதத்தை அவனிடம் நீட்டினுள். அவன் அதை வாங்க மறுத்தான். அவள் வற்புறுத்தவே, இஷ்டமில்லா தவன் போல வாங்கி, அசிரத்தையாகப் பார்ப்பது போலப் படித்தான். ஆனுல் உண்மையில் அவன் மனம் அதை முழுதும் படிக்கத் துடித்துக் கொண்டுதான் இருந்தது. அதைப் படிக்கும்போது அவன் முகம் எப்படி மாறுகிறது என்பதை அவளும் ஆவலோடு பார்த்துக்கொண் டிருந்தாள். அதில் எழுதியிருந்தது:—

"அன்புள்ள அப்பாவிற்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. பணமும் வந்தது. எனக்குக் கப்பலில் பழக்கமானவரைப்பற்றி உங்க ளுக்குத் தெரிவித்திருந்தேன். அவரே என் காதலராக மாறிவிடுவார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன். ஆனுல் அவரோடு பழகிய இந்த ஒரு மாசத்தில், அவர் ஒரு தனிப் பிறவி யென்றே தெரிகிறது. என்னைத் தம் சொந்தச் சகோதரிக்கும் மேலாகப் பாவிக்கிருர். என் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளிலே முயற்சி செய்துவருகிருர். மணமகனைத் தேர்ந் தெடுக்கும் விஷயத்தில் அவர் என் சம்மதத்தையே விரும்புகிருர். இன்னும் நான் அதை முடிவு செய்ய வில்லே. என் மனம் ஒவ்வொரு சமயங்களிலும் ஒவ்

வொரு தினுசாக மாறுகிறது. அவர் என்னிடம் காட்டும் அன்பிற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேனே, தெரியவில்லை. அவரையே... அதை நினைக்கும் போதும், அதைப்பற்றி இங்கே எழுதும்போதும் எனக்கு நடுக்கம் எடுக்கிறது. ஏனென்றால் அவர் என்னிடம் இதுவரை, சகோதரப் பான்மையிலேயே நடந்து வருகிறார்...இதை எழுதி முடிக்கும்முன் அவரே இப்போது வந்து விட்டார். அவர் என்ன பேசினார் என்பதையும், என் முடிவான அபிப்பிராயத்தையும் உங்களுக்கு அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

தங்களன்புள்ள,
சூர்யா."

கடிதத்தைப் படித்துவிட்டுச் சிரித்துக்கொண்டே அதை அவளிடம் நீட்டினான் வாசு. அவள் வெட்கப் பட்டுக்கொண்டே அதை வாங்கி வைத்துக் கொண்டாள்.

* * *

விநாயகம் எழுதி வைத்திருந்த கதை அதோடு நின்று விட்டது. சுந்தரம் அதைப் படித்துவிட்டு, 'சரி, எப்படி இதை முடிக்கப் போகிறாய்?" என்று கேட்டான்.

"அதுதான் பெரிய கஷ்டமாக இருக்கிறது. சூர்யாவை, வாசு சகோதரியாகவே பாவித்து வந்தான். இப்போது அக்கடிதத்தின் மூலம் அவளுடைய மனத்தை அறிந்துகொண்டு விட்டான். அவனும அவள்மீது காதல் கொண்டு கல்யாணம் செய்து கொண்டதாக எழுதி விடலாமா என்று யோசிக்கிறேன்."

"என்ன, விநாயகம், கதாசிரியர்கள் எழுதும் கதைக ளெல்லாம் காதலிலேயே முடிகிறதென்றும், அவர்களுக் குப் படிப்பினையாக நீ ஒரு புதுத் தினுசில் எழுதியிருக்கிற தாகச் சொன்னாயே" என்று பரிகாசமாகக் கேட்டான் சுந்தரம்.

"இன்னும் நான் அதை முடிக்கவில்லையே! வாசு கடைசிவரை மன உறுதி தளராமலிருப்பதாகவும், சூர்யா

அவனைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேனென்று இருப்பதாகவும், அவர்கள் வாழ்நாள் அப்படியே கழிந்து வருவதாகவும் எழுதலாமா என்று நினைக்கிறேன்.''

"எனக்கு ஒன்று தோன்றுகிறது. வாசு தன் வாக்குறுதியைக் காப்பாற்றுவதிலேயே கவனமாயிருக்கிறபடியால் சூர்யாவின் காதலுக்கு இடம் கொடுக்காமல் இருக்கிறுன். ஆனுல் அவனுல் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொள்ளவும் முடியாமல் வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறுன். சூர்யா அவன் வீட்டிற்கே சென்று அவன் மனைவிக்குத் துணையாக இருக்கிறுள் என்று எழுதிவிடேன்'' என்று யோசனை கூறினுன் சுந்தரம்.

"அது நடக்கக் கூடிய காரியமா?'' என்று சந்தேகத்தோடு கேட்டான் விநாயகம்.

"இது நடக்காதென்றுல் அவர்கள் கல்யாணம் இல்லாமலே இருப்பதும் நடக்காது'' என்று வாதாடினுன் சுந்தரம்.

"சுந்தரம், பதருதே. நான் இதற்கு ஒரு நல்ல முடிவு வைத்து எழுதுகிறேன். இப்போது என் மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டும். வா, எங்கேயாவது சினிமாப் பக்கம் போய்விட்டு வரலாம்."

"இதே கதை ஒரு கதாசிரியன் கையில் அகப்பட்டிருந்தால் இதற்கு ஒரு முடிவைக் கட்டி எழுதாமல் அவனுடைய பேனு முனை நிற்காது. கதையை முடித்துவிட்டுத்தான் அவன் மறுவேலை பார்ப்பான்; உன்னைப் போல இப்படி மனத்தை அலட்டிக் கொள்ளமாட்டான்'' என்று மேலும் நையாண்டி செய்தான் சுந்தரம்.

தனக்குத் தெரியாத ஒரு பாதையில் இறங்க முயற்சித்ததற்காக விநாயகம் தன் மனத்திற்குள்ளேயே வருத்தப் பட்டுக் கொண்டான்.

*

# சாந்தி எங்கே?

ஆர். கே. பார்த்தசாரதி

பரந்த வானவெளி வெளுத்திருந்தது. பஞ்சுப் பட்டைகள் போன்ற மேகத் துண்டுகள் மனித வாழ்க்கையின் கைகூடாத லட்சியங்கள்போல் சிதறிக்கிடந்தன. இந்தச் சோபையற்ற வானவிதானத்தின் கீழ், கடமையிலேயே கண்ணும் கருத்தும் பொருந்திய கர்ம வீரனைப்போல், காற்றைக் கிழித்தவாறே பறந்துகொண்டிருந்தது சென்னையிலிருந்து கிளம்பிய புகை வண்டித் தொடர். என்ஜினின் ராட்சஸ வாயிலிருந்து கிளம்பிய புகைச் சுருள், ஏற்கெனவே இருண்டிருந்த வானத்தை மேலும் கருமையாக்கியது. ரயிலின் 'கட கட' என்ற ஏகதாளத்தை—வேதனைச் சத்தத்தை—தவிர்த்து, சுற்றிலும் கொடிய மௌனம் நிலவியது.

வண்டியின் ஓர் ஓரத்தில் ஜன்னல் பக்கமாக இளைஞன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அலங்கோலமாக உடுத்திருந்த அவனுடைய உடையும் நெற்றியில் ஆழமாக வேர் ஓடியிருந்த சுருக்கங்களும் அவன் உள்ளத்தில் புரண்டு கொண்டிருந்த மனோ வேதனையைப் பிரதிபலித்தன. ஒரு நிலையிலடங்காமல் உட்கார்ந்திருந்த அவன் மேல் வேஷ்டியிலிருந்து ஒரு நூலை இழுத்தெடுத்துவெளியே எறிந்தான். அவனுடைய வாழ்க்கை லட்சியங்கள், சந்தர்ப்பங்களால், திசை மாறி, எங்கேயோ விழுந்து சிதறியதைப்போல் அச் சிறு நூலும் காற்றினால் உந்தப்பட்டு எங்கேயோ விழுந்து மறைந்தது.

அவனுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த கிழவர் தம் பேத்தியைப் பார்த்து, "ஏண்டி விசாலம்! இந்த வண்டி திண்டிவனத்துக்குத்தான் போறதுன்னு நன்னாத் தெரிஞ்சுண்டியா?" என்று கவலையுடன் கேட்டார். இளைஞன் சட்டென்று திரும்பினான். உடனே கிழவர்

அவனைப் பார்த்து, "ஏண்டாப்பா! நீ எந்த மட்டும் போறே?" என்று சுற்றி வளைத்துத் தம்முடைய சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ளத் தொடங்கினார். "திண்டிவனத்துக்கு" என்று அவன் பதில் சொன்னவுடன், கிழவர்களுக்கே உரிய முறையில், "உன் பேர் என்ன? திண்டிவனம்தான் உன் சொந்த ஊரா? உனக்கு எங்கே வேலை? இப்ப ஊருக்குப் போற வேலை என்ன?" என்றெல்லாம் பல கேள்விகளைத் தமது பொக்கை வாயினின்றும் உதிர்த்தார் அந்தப் பெரியவர். அவனுடைய அப்போதைய நிலையில் இக் கேள்விகளெல்லாம் ஆத்திரத்தைத்தான் கிளப்பின. என்றாலும் வயதுக்கு மரியாதை காட்ட வேண்டாமா? எனவே, "என் பேர் கோபாலன்; தங்கை கலியாணத்துக்காகப் போறேன்" என்று மட்டுமே அவன் பதில் சொல்லிவிட்டு ஜன்னற் கதவைத் திறந்து தலையை வெளியே நீட்டிக்கொண்டான். கோபாலனது அதிருப்தியை ஒருவாறு அறிந்துகொண்ட கிழவர் அதற்குமேல் பேசவில்லை ஆனாலும் அவர் கூறிய 'விசாலம், திண்டிவனம்' என்ற இரு வார்த்தைகள் மட்டும் அவன் மனத்தை ஆயிரம் கேள்விகள் கேட்க ஆரம்பித்தன. அவை அவன் வாழ்க்கையில் அதுவரையில் நடந்துள்ள அவ்வளவு விபரீதச் சம்பவங்களையும் அகக் கண் முன் கொண்டுவந்து நிறுத்தின—துச்சாஸனன் திரௌபதியை அலங்கோலமாக அரச சபையில் அன்று கொண்டு வந்து நிறுத்தியதைப் போல்.

இச்சமயத்தில் ரயில் வண்டி எழும்பூருக்கு அடுத்த ஸ்டேஷனில் ஒரு குலுக்குக் குலுக்கி நின்றது. ஒரு வயதான ஸ்திரீயும் இளங் கர்ப்பிணி யொருத்தியும் தன வண்டியில் ஏறுவதைக் கோபலன் கவனித்தான். அதுவரை மௌனமாக நின்று கொண்டிருந்த ஆடவன்—அந்த இளம பெண்ணின் கணவன் போலும்—வண்டி புறப்படும்போது கண்ணீர் பெருக்கிக்கொண்டே, "விசாலம்! ஊருக்குப் போய்ச் சேர்ந்தவுடனே கடுதாசு போடு" என்று உணர்ச்சியுடன் கூறினன். அந்தப் பெண்ணும் கணவனை நின்று கொண்டிருந்த பக்கமே வெகு நேரம பார்த்துக் கொண்டிருந்தாள். பிரிவுத் துயரின் வேதனைச் சித்திரத

தைக் கண்ட கோபாலன் கண்களை மூடிக் கொண்டான். ஆனால் அவனுடைய அகக்கண் நன்றாகத் திறந்து கொண்டது. கிழவரின் கேள்விகளில் பிறந்த பழைய சிந்தனை, பலம் பெற்று நடமாடத் தொடங்கியது, 'விசாலத்தை'ப் பிடிப்பாகக் கொண்டு

* * *

அப்பொழுது கோபாலன் - மிராசுதார் வைத்தீசுவரையரின் ஒரே பிள்ளை - சென்னையில் இருந்தான். தகப்பனாரின் அர்த்தமற்ற கண்டிப்புத்தான் தனயனைச் சென்னைக் கலாசாலை யொன்றில் மாணவனாக அழுத்தி மிதித்துக் கொண்டிருந்தது. உண்மையில் அவனுக்குத் தன் கிராமத்தை விட்டு வெளியே செல்ல ஒரு சிறிதும் இஷ்டமில்லை. இதற்கெல்லாம் அவள்தான் காரணம்! ஆம்! விசாலத்தின் குறுகுறுப்பான கண்களும், விசாலமான நெற்றியும், நெற்றியில் பூர்ண சந்திரனுக்கு வரம்பு கட்டி விளையாடும் மேகக் கீற்றைப் போல் கொஞ்சித் தவழும் சுருண்ட மயிரும், இவற்றுக் கெல்லாம் மேலாக அவளுடைய மலர்ந்த யௌவனமும், காதல் நிறைந்த உள்ளமும் க்ஷண நேரங்கூட அவளை விட்டுப் பிரிவதை அசாத்திய மாக்கிவிட்டன கோபாலனுக்கு. ஆனால் இதே காரணங்களாலேதான் வைத்தீசுவரையரின் கண்டிப்பும் அவனைச் சென்னைக்கு, நிர்ப்பந்தமாகத் தள்ளிக் கொண்டு சென்றது என்பது அவனுக்கு அப்பொழுது தெரியாது. தூய காதலின் 'பைத்தியக்கார'ப் போக்கை நன்றாக அறிந்த அவர்—பணத்திலேயே குறியாக விருந்த அவர்—நொடித்துப் போன ஒரு தூர பந்துவின் பெண்ணை, விசாலத்தைத் தனக்குக் கல்யாணம் செய்து வைப்பாரா என்ற சந்தேகத்தின் நிழல்கூட அவன் மனத்தில் ஆடவில்லை. எவ்வளவு முன் எச்சரிக்கையுடன், முன்னேற்பாட்டுடன், தன்னை விசாலத்தினிடமிருந்து அவர் பிரித்திருக்கிறார் என்பதை அவன் சிந்தித்துப் பார்க்கவேயில்லை. அன்று, தான் குழந்தையாக விருந்த பொழுது, விசாலத்தின் கழுத்தில் எவ்வளவு சுலபமாக நார்த் தாலியைக் கட்டி அவளை மனைவியாகக் கொண்டு, குடும்ப விளையாட்டு விளையாடினானோ அதை விடச் சுலபமாக அவள் கழுத்தில்

உண்மையாகவே மண மாலையிட்டு, அவளுடன் இனிமை யாக இல்லறம் நடத்தலாம் என்று அவன் நிச்சயமாக நம்பினான்.

அன்றுதான் அவன் நம்பிக்கையை அவன் தகப்ப னார் தளர்த்தினார்—இல்லை, தகர்த்தார். அன்று அவன் 'கிரிஸ்மஸ்' லீவிற்குக் கிராமத்திற்குக் கிளம்பத் தயாராக விருந்தான். ஆர்வத்தின் மிகுதி விவரிக்க முடியாத ஒரு வேதனையாக மாறிக்கொண் டிருந்தது. மூன்று மாசங் களாகப் பிரிந்திருந்த விசாலத்தை அடுத்த நாள் சந்திக் கப் போகிற ஆநந்தத்தால் அவனுடைய இதயம் விம்மி வலித்தது. அப்பொழுதுதான் அவன் லட்சியச் சிதைவென ஒரு கடிதம் அவன் தலையில் இடித்தது. அவனுக்குப் பணக்கார இடத்தில் பெண் பார்த்திருப்பதாகவும் உடனே அவன் புறப்பட்டு வரவேண்டுமென்றும் வைத்தீசுவ ரையர் கடிதம் எழுதி யிருந்தார். கோபாலனது இதயத்தில் ஆயிரம் சாட்டைகள் சொடுக்கின. வெகு காலமாகவே கோபாலன் தகப்பனாரின் கண்டிப்பை அனுபவித்து, வாய் பேசாமல் குமுறிக்கொண் டிருந்தான். இப்பொழுது, அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் காலசர்ப்பம்போல் சீறியது. "விசாலத்தைத் தவிர வேறு ஒருத்தியையும் நான் மனைவியாக ஏற்கமாட்டேன்" என்று தகப்பனாரை நோக்கி ஒரு தந்தியை ஏவினான். பேதை! தந்தை உடன் பட்டு விடுவார் என்று நம்பினான்.

மறு நாளைக்கு மறு நாள்; வைத்தீசுவரையரே சென் னைக்கு வந்துவிட்டார். தந்தைக்கும் தநயனுக்கு மிடையே பலத்த வாக்குவாதம் நடந்தது. அன்று தந்தியில் ஏற்றிய அபிப்பிராயத்தையே கோபாலன் ஊர்ஜிதப்படுத்தினான். அவ்வளவுதான்! பையனின் எதிர்பாராத எதிர்ப்பு அவ ருடைய கண்டிப்புக்கு ராட்சஸத் தன்மையை அளித்தது. "அப்படியானால் நீ கிராமத்திற்குள் மறுபடியும் காலடி எடுத்து வைக்காதே. என் சொத்தில் தம்பிடிகூட எதிர் பார்க்க வேண்டாம். விசாலத்தையா நீ கலியாணம் செய்துகொள்கிறாய் என்று பார்த்துவிடுகிறேன்!" என்று கோப வார்த்தைகளை வாரி யிறைத்துவிட்டு வெளியே சென்றார். தம்முடைய மிரட்டல் பையனை வழிக்குக்

கொண்டுவந்துவிடும் என்று நினைத்தாரே யல்லாது அது அவனை வழி தவறச் செய்து எங்கேயோ இழுத்துச் சென்றுவிடும் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

* * *

சிந்தனையின் இந்தக் கட்டத்தில், "திண்டிவனம் திண்டிவனம்" என்ற அலறல் கோபாலனின் காதைத் துளைத்தது. உடனே வண்டியிலிருந்து இறங்கினான். 'ஒரு லட்சிய வாதியை விட்டுச்செல்கிறேமே' என்ற வருத்தத்தில் பெருமூச்சு விட்டுக்கொண்டே வண்டி நகர்ந்தது. புற்றில் நுழையும் பாம்பின் வாலைப்போல் கடைசி வண்டியும் ஒரு வளைவில் மறைந்த பிறகுதான் கோபாலன் 'பிளாட் பார'த்தை விட்டு நகர்ந்தான். அப்பொழுது, 'ஐயோ! வண்டி தவறிவிட்டதே!' என்று ஏக காலத்தில் கத்திக் கொண்டே ஓர் ஆணும் பெண்ணும் கோபாலனை இடித்துக் கொண்டு ஓடும் வண்டியை நோக்கி ஓடினார்... ம், எங்கள் வாழ்க்கை வண்டியும் அப்படித்தான்' என்று முணு முணுத்துக்கொண்டே கோபாலன் தனது கிராமத்தை நோக்கி நடந்தான். அப்பொழுது கோபால னுடன் வந்த கிழவர், "ஏண்டியம்மா? அப்பறம் அவ சங்கதி என்ன ஆச்சு?" என்று தம் பேத்தியைக் கேட்டது அவன் காதில் விழுந்தது அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது போல் அவன் மனம், 'என்ன ஆறது? எங்க அப்பாவே விசாலத்தை ஒரு கிளப்புக்காரனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டார். அவ அப்பா வுக்குக் கல்யாணச் செலவுக்காக பணம் எல்லாம் அவரே கொடுத்தாராம். ஊருலே வேறே என்னைப்பத்தி எல்லாம் பொய்ப் பிரசாரம் செஞ்சு நான் பட்டணத்துச் சக வாசத்துலே ரொம்பக் கெட்டுப் போயிட்டேன்னு சொன் ஞராம். விசாலத்துக்கு இது எங்க அப்பாவின் விஷமம்னு தெரியுமாம். இருந்தாலும் ஒரு குடும்ப மனஸ்தாபத்துக்கு, காரணமா இருக்க வேண்டாம்னு, தியாக நெருப்புலே குதிச்சு அவரையே பொசிக்கிண்டுட்டா' என்று பேசியது.

இப்போது, கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த நீண்ட சாலையில் ஒரு பேய்க் காற்று "உஸ், உஸ்" என்று சீற ஆரம்பித்தது. மழையும் புயலும் கிளம்புவதற்கான

அறிகுறிகள் தோன்றின. கறுத்த ஆகாசம் கணத்திற்கொருதரம் மின்னல் பாய்ச்சிக் கொண்டிருந்தது. கோபாலனின் இருண்ட உள்ளத்திலும் விட்டுப்போன பழைய எண்ணங்கள் தொடர்ந்து மின் வெட்டின.

* * *

ஏமாற்றத்தில் பிறந்த வைராக்கியம் கோபாலனைப் பித்தனாக்கியது. தாங்க முடியாத மனத்துயரைத் துடைக்கப் பல இடங்களுக்குச் சென்றான்; எங்கும் சாந்தியில்லை. விசாலத்தின் ஞாபக ரேகை அவன் உள்ளத்தினின்றும் மறையவே யில்லை. ஆண்டுகள் பலவாயினும், தந்தை இறந்ததற்குக் கூட அவன் கிராமத்திற்குச் செல்லவில்லை. காதல் செத்தபின் கடமைக்கு இடம் எங்கே?

சுழலும் பம்பரம் எப்பொழுதாவது ஓயத்தானே வேண்டும்! கோபாலனின் கால்களும் கடைசியாக அந்த ஊரில் ஓய்ந்து நின்றன. இயற்கையின் சாந்தமான இனிமையின் நடுவே அமைந்திருந்த ஒரு சிறு வீட்டில் வாடகைக்குத் தங்கினான்; ஆனால் உள்ளத்தில் சாந்தி தங்கவில்லை.

இரவு ஒரு மணி இருக்கும். மனித சமூகம் அன்றைக் கொடுமைகளைப் புரிந்துவிட்டுச் சிரமபரிகாரம் செய்து கொள்ளும் சமயம்—மீண்டும் சக்தி பெற. கோபாலன் இன்னும் தூங்கவில்லை. அவன் கையில் எங்கெல்லாமோ சுற்றிக்கொண்டு வந்திருந்த தாயாரின் கடிதம் இருந்தது. அடுத்த மாசம் நடக்கவிருக்கும் தங்கையின் கல்யாணச் செய்தி அவன் மனத்தை வெகுவாகக் கலக்கிக் கொண்டிருந்தது.

அச்சமயம் தெருவில், "கோபாலா, கோபாலா" என்ற அலறல் சத்தம் கேட்டது; கோபாலன் துணுக்குற்றான். எவளோ ஒரு பெண்ணின் வேதனைக் குரல் அது. அச்சத்தம் அவன் வீட்டினருகே ஓய்ந்துபோகவே அவன் கதவைத் திறந்துகொண்டு வாயிற்பக்கம் ஓடினான். அவன் வீட்டு வாயிற்படியிலேயே ஒரு பெண் மூர்ச்சித்து விழுந்திருந்தது அவன் கண்களுக்கு மங்கலாகத் தெரிந்தது. சமூகம் அவன் கண்முன் கோரமாகக் கூத்தாடி ஒரு

கணம் பயமுறுத்தியது! ஆனால் கடமை அவன் உள்ளத்திற்கும் கைகளுக்கும் சக்தி கொடுத்தது. அவளை லாகவமாகத் தூக்கினான்; உள்ளே எடுத்துச் சென்றான்.

உடனே அவளைப் படுக்கையில் கிடத்தி முகத்தில் தண்ணீரைத் தெளித்தான். பின்னர், நீரைத் தன் துண்டினால் துடைக்கக் குனிந்தபோது அவன் இதயமே நின்றுவிடும்போல் ஆயிற்று. திகைப்பை எவ்வாறுதான் அடக்கிக் கொண்டானோ? அந்தப் பட்டான முகத்தில்தான், எத்தனைப் பச்சைப் புண்கள்; ஆறிய வடுக்கள்? என்ன அலங்கோலம்!

பிரஞ்ஞை வந்து அவள் கண்களை மலர விழித்தாள். கோபாலனது முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். அடுத்த விநாடி அவள் வாயினின்றும், 'என் கோ[illegible]...' என்ற வார்த்தைத் துணுக்குகள் வேகமாகக் கிள[illegible]கின. ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு எழு[illegible]டகார்ந்தாள். எத்தகைய எதிர்பாராத சந்திப்பு! ஒரு காலத்தில் கணவனும் மனைவியுமாகப் போவதாகக் கனவு கண்டவர்கள் வெவ்வேறு நிலையில் ஒருவரையொருவர் கண்டனர்.

அவ்வளவு நாட்களாக அவள் உள்ளத்தையும் உடலையும் அரித்துக்கொண்டிருந்த துயரம் சோகக் கதையாகப் பீறிட்டது. கல்யாண சமயத்தில் கிளப்பு முதலாளியாக இருந்த அவள் கணவன் குடியிலும் சூதாட்டத்திலும் பணத்தை இழந்து கிளப்பு வேலைக்காரனாகச் சீரழிந்து விட்டான். அன்று முதல் அவளையும் அவள் ஒரே பிள்ளை—ஐந்து வயசுப் பிள்ளை—கோபாலனையும் கட்டி இழுத்துக் கொண்டு அவன் போகாத இடமில்லை; கடைசியில் அந்த நாடோடி இந்த ஊரில் குடியேறினான். அன்றைத் தினம் அந்த மனித எருமை அவளையும் அவள் குழந்தையையும் கொன்று கொலைவாங்கி விட்டது. அவள் அடிபட்டுக் கொண்டிருந்தபோதே குழந்தை எங்கேயோ சென்றுவிட்டான். குழந்தையை அழைத்து வர வாயிற் படியைத் தாண்ட நினைத்தவள் நிலைப்படியிலேயே மூர்ச்சையாக விழுந்து விட்டாள். மூர்ச்சை தெளிந்து எழுந்தவள் குழந்தையையும் கணவனையும் காணவில்லை. எனவே, அந்த அர்த்த ராத்திரியில்,

குழந்தையைத் தேடத் தெருவில் காலடி எடுத்து வைத்து விட்டாள். கோபாலனின் வீடு நெருங்கியபொழுது களைப்பால் அவள் பலமற்ற சரீரம் சாய்ந்து விட்டது.

இதனைச் சொல்லிவிட்டு விசாலம், 'கோபாலா கோபாலா' என்று கூறிக் கொண்டே மேலும் குழந்தையைத் தேட, தள்ளாடியவாறு வெளியே வந்தாள். அவளுடன் தானும் போகக் கோபாலன் தயாரானான்.

இருவரும் வாயிற்படியைத் தாண்டியிருப்பார்கள். அப்பொழுதுதான், விசாலத்தின் கணவன் குழந்தையைப் பிடித்துக்கொண்டு, அதை அடித்தவாறே வந்து கொண்டிருந்தான். விசாலத்தைப் பார்த்துவிட்டான். கோபாலன் சிறிது அவன் தலையை தயங்கினான். அவ்வளவுதான்! "ஹூம்! உனக்[illegible]த் தொழிலும் உண்டா?" என்று உறுமிக் கொண்டே அவளைத் 'தர தர' என்று இழுத்துச் சென்றான். கோபாலன் அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். பிரமிப்பு நீங்கி அவன் பார்த்தபோது அந்த மூன்று உருவங்களும் காரிருளில் கலந்து விட்டன. இனி விசாலத்தின் வாழ்வு? என்று கேட்டுக் கொண்டிருந்த தன் இதயத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டே கோபாலன் வேறு பக்கம் நடந்தான்.

* * *

கிராமத்தில் கேட்ட இடி போன்ற மேளச் சத்தமும் நாதஸ்வரத்தின் அபஸ்வரமும் கோபாலனது சிந்தனைச் சரட்டை அறுத்தெறிந்தன. நடையை முடுக்கி மாப்பிள்ளை அழைத்து வரும் ஊர்வலம் இருக்குமிடம் சென்றான். பல வருடங்களாகப் பார்க்காத அன்னையை அவன் கண்கள் துருவித் தேடின. அதற்குள், "கோபாலா?" என்று 'அச்சானிய'மும் பார்க்காமல் அலறிக் கொண்டே தாய் அவனை நோக்கி ஓடிவந்தாள். ஊர்வலத்தின் 'பளபள'ப்பில், சாந்தியின் சாயையே பார்க்க முடியாமல் தவித்த கோபாலன், தாயார் பின் தொடர, தன் வீட்டிற்குச் சென்றான். உணர்ச்சியின் உத்வேகத்தில் பேசாமலேயே இருவரும் வீடு நோக்கி நடந்தனர்.

கோபாலன் விரக்தனைப் போல் உட்கார்ந்திருந்தான், அந்த அறையில். என்ன என்னவோ கேட்கத் துடித்துக் கொண்டிருந்தனர் கோபாலனின் தாயாரும் அவன் தங்கையும்; ஆனால் ஒரு வார்த்தைகூட அவர்களுடைய உலர்ந்த நாவினின்றும் வெளி வரவில்லை. அந்த அறை முழுவதும் சிதறிக் கிடந்த ஞாபகச் சிதைவுகளை மௌன மாகக் கோபாலன் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் போலும்! அவனும் பேசவில்லை.

இச்சமயத்தில் எவளோ ஒரு பெண் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தது கோபாலனது கவனத்தை இழுத்தது. ஒரு கணம். கோபாலன் கதவுப் பக்கம் திரும்புவதற்கும் உள்ளே வந்தவள் வெளியே சென்றதற் கும் சரியாக விருந்தது.

“ஏண்டி, விசாலம்! அதுக்குள்ளே [illegible]யே! உக்காரக்கூடாதோ?” என்று கேட்டுக்[illegible]ண்டே வந்தவளை அழைத்து வரக் கோபாலனின் தாயார் வெளியே சென்றாள். ‘விசாலம்’ என்ற பெயரைக் கேட்டவுடன் கோபாலன் திடுக்கிட்டான். அதற்குள் அவன் தங்கை “அண்ணா! நம்ப விசாலம் வந்தாளே, பாத்தியோ?” என்று கேட்டாள்.

“நம்ப விசாலமா! பாக்கலியே!” என்ற கோபாலன் பதிலில் ஆயிரம் தேள் கொட்டிய உணர்ச்சி பரவி யிருந்தது.

“அடடா! அப்ப, அவ குழந்தை கோபாலனைக்கூடவா பாக்கலே? அதுக்குக்கூட, தேமேன்னு, உன் பேரை வச்சிருக்காடா!” என்றாள், அவள் கோபாலனின் ஏமாற்றத்தை அறியாமல்.

“இல்லியே, அதையும் பாக்கலியே!”

“போடா, பைத்யமே! உன்னைப் பாக்கத்தான் வந்திருக்கா! அதுக்குள்ளே வெக்கம். இப்பத்தான் ஒரு மாசமா இங்கே இருக்கா. அவ எங்கியுமே கிளம் பறதே இல்லே. ரொம்ப ரொம்ப வலுக்கட்டாயமாச் சொன்னதன் பேரிலே, என் கல்யாணம், உன்னையும்

ஒரு சமயம் பாக்கலாம், அப்படின்னு வந்தா. பாவம்! அவ ஆம்படையான் - நம்ப அப்பா பண்ணி வச்சாரே வேணும்னு—அந்த ப்ரும்மஹத்தி அவளைத் தள்ளி வைச்சுடுத்துடா.''

"தள்ளி வச்சுட்டானா?" என்று அலறினான் கோபாலன், கொடிய சர்ப்பம் தீண்டியது போன்ற விஷ வேகத்துடன்.

"ஆமாண்டா! அந்தப் பாவி குடி, சீட்டு இன்னும் என்னெல்லாமோ, அதுலேல்லாம் காசைத் தோத்துட்டு அவளைப் படாதபாடு படுத்தி வைச்சானாம். கடைசியாத் தள்ளியும் வச்சுட்டான். தள்ளி வச்சதுக்குக் கூட ஏதோ 'கன்னு[illegible]ரு'ன்று யாரோடயோ......''

கேட்டு அவன் மனத்தில் ஏதோ 'சுருக்'கென்று தைத்[illegible] தலையை[illegible]னி அவள் வாழ்வு?' என்று அன்று கேட்ட [illegible]திருப்பதி இதோ பதில். சுழலுகின்ற தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டான். ஆனால் மனச் சாந்தியை நாடி மீண்டும் சுழலத் துடித்த கால்களை அவனால் அடக்க முடியவில்லை. 'இதோ வந்து விடுகிறேன்' என்று கோபாலன் வெளியே சென்றான்.

'எங்கேடி கோபாலன்?' என்று கேட்டுக்கொண்டே கோபாலனின் தாயார் உள்ளே வந்தாள் - விசாலத்தைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு.

* * *

கொட்டுகின்ற மழையிலும் கண்ணீரருவியிலும் 'சொட்டச் சொட்ட' நினைந்து கொண்டிருந்த ஓர் உருவத்தை, அதே நீண்ட சாலையின் வழியாகத் 'தள்ளி வைச்சுட்டான்' என்ற பயங்கர வார்த்தைகள் எங்கேயோ தள்ளிக் கொண்டே சென்றன.

'விசாலத்தை வாழாவெட்டியாக அடித்தது நீதானே!' என்று அறைந்து கேட்பது போல் காற்றில் படபடத்துக் கொண்டிருந்த மேல் வேஷ்டி அவன் முகத்தில் சவுக்கடி கொடுத்துக் கொண்டிருந்தது.

# சக்தி காரியாலயம் — சென்னை-14

## நாவல்கள்

SIVAGNANA MUNIVAR LIBRARY
TINNEVELLY.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| வனிதாலயம் | சகுந்தலா ராஜன் | 2 | 0 |
| பவானி | லக்ஷ்மி | 2 | 8 |
| வானவில் | வின்டா வாஸிலெவ்ஸ்கா | 5 | 0 |
| காதல் | | 3 | 12 |
| சுந்தரி | வ. ரா. | 5 | 0 |
| ஜெய காதல் கீதம் | துர்கனேவ் | 0 | 8 |

## சிறு கதைகள்

| | | | |
|---|---|---|---|
| பெண்சாதி | கதைத் தொகுதி | 1 | 0 |
| முதல் சந்திப்பு | ,, | 1 | 0 |
| பழிக்குப் பழி | ,, | 1 | 0 |
| கதைக் கடல் 1 | ,, | 0 | 12 |
| கதைக் கடல் 2 | ,, | 1 | 0 |
| கதைக் கடல் 3 | ,, | 1 | 0 |
| சிங்காரி | மஞ்சேரி ஈச்வரன் | 3 | 0 |
| சஞ்சீவி | 'குகப்ரியை' | 3 | 4 |
| சரித்திரக் கதைகள் | எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் | 1 | 4 |

## பொருளாதாரம், மற்றவை

| | | | |
|---|---|---|---|
| செல்வம் | க. சந்தானம் | 1 | 8 |
| பொய்யும் மெய்யும் | ,, | 1 | 8 |
| காய்கறித் தோட்டம் | மு. அருணசலம் | 5 | 0 |
| உணவுப் பஞ்சம் | ,, | 1 | 8 |
| ஐந்தாவது சுதந்திரம் | லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி | 1 | 8 |

*தபால் செலவு தனி*

சக்தி காரியாலயம் — சென்னை-14